விலை: ரூபா 20 பக்கங்கள் 28

வானிலை
கூ.வெ. 31°C
கு.வெ. 26°C
தெளிவான வானிலை

# உதயன்

சுடர் 30 கதிர் 215 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 14, திங்கட்கிழமை 29.06.2015


ஜெனிவா சாட்சியங்களுக்கு என்ன பதில்?

பக்கம் 16

# மஹிந்தவால் சு.க. பிளவுறும் நிலைமை

## சுசிலும் மஹிந்த பக்கம் சாய்கிறார்; மூன்றாவது அணி உதயமாக சாத்தியம் அதிகம்

கொழும்பு, ஜூன் 29
நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாய்ப்பு வழங்கப்படாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாக அறிவித்துள்ள நிலையில், அவரின் முடிவை மாற்றியமைப்பதற்கு சு.கவில் உள்ள மஹிந்தவின் விசுவாசிகள் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.
எனினும் ஜனாதிபதி மைத்திரிபால தனது நிலைப்பாட்டில் இதுவரை உறுதியாக இருப்பதால் சுதந்திரக் கட்சி இரண்டாக உடைந்து பொதுத் தேர்தலைச் சந்திக்கும் நிலை தோன்றியுள்ளது. மஹிந்த தலைமையில் மூன்றாவது அணி ஒன்று உருவாகும் நிலைமை பிரகாசமாக உள்ளதாக அரசியல் அவதானிகள் தெரி விக்கின்றனர்.
தமது தரப்பை மேலும் பலப்படுத்தும் விதமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளராகவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளராகவும் செயற்பட்டுவரும் சுசில் பிரேமஜயந்தவை மஹிந்த தரப்பினர் தமது பக்கம் வளைத்துப் போட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
மஹிந்தவை ஆதரிக்கும் முடிவை அவர் இன்று பக்.24



## தேர்தலில் ராஜபக்ஷ போட்டியிடுவது உறுதி

*இப்படிச் சொல்கிறார் விமல் வீரவன்ஸ*



கொழும்பு, ஜூன் 29
சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு மஹிந்த ராஜபக்ஷவுக்கு மறுக்கப்பட்டாலும் அவர் தேர்தலில் போட்டியிடுவார் எனத் தெரிவித்த தேசிய சுதந்திர முன்னணித் தலைவர் விமல் வீரவன்ஸ, அவரது கட்சியுடனேயே தமது கட்சி கூட்டணி அமைத்து தேர்தலில் போட்டியிடவுள்ளதாகவும் அறிவித்தார்.
பத்தரமுல்லையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:
நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதானது, ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாத்துக்கொள்வதற்காகும். மத்திய வங்கி ஊழல், மோசடி தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட கோப் குழுவின் அறிக்கை ரணிலுக்கு எதிராக இருந்தமையால் கடந்த வெள்ளிக்கிழமை அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்காது தடுத்தார். 100 நாள்களின் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைப்பதாகக் குறிப்பிட்ட ஐ.தே.க. அரசு அவ்வாறு செய்யாது இழுத்தடித்தது. இந்த நிலையில், திடீர் என நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. ஆனாலும் நாங்கள் நாடாளுமன்றம் கலைத்தமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்போவதில்லை. நாங்கள் தேர்தலுக்குத் தயாராகவே உள்ளோம். நாங்கள் ஆரம்பத்தி பக்.24




இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய வட்டுக்கோட்டைத் தொகுதிக்கான அலுவலகம் மற்றும் இளைஞர் - யுவதிகளுக்கான தொழில்திறன் விருத்தி இலவச பயிற்சி நெறிக்கூடம் என்பன நேற்றுத் திறந்து வைக்கப்பட்டன.

## நாடாளுமன்ற தேர்தலில் களமிறங்கும் அமெரிக்கா

கொழும்பு, ஜூன் 29
இலங்கையில் நடைபெறும் தேர்தலுக்கு முதன் முறையாக, அமெரிக்காவிலிருந்து தேர்தல் கண்காணிப்பாளர்கள் இம்முறை வருகை தரவுள்ளனர்.
எதிர்வரும் ஓகஸ்ட் 17ஆம் திகதி எட்டாவது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. நாடாளுமன்றத் தேர்தலின்போது கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுவதற்காக அமெரிக்காவின் தேசிய ஜனநாயக நிறுவகம், ஜிம்மி கார்ட்டர் நிறுவகம் ஆகியவற்றுடன் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
முதன்முறையாக அமெரிக்க நிறுவனங்களுடன் தேர்தல் கண்காணிப்பு தொடர்பில் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. இதற்கு பக்.24

# தேர்தலை எதிர்கொள்வது குறித்து அரசியல் கட்சிகள் தீவிர கவனம்

## கூட்டமைப்பு, ஜே.வி.பி தனித்துப் போட்டி ஏனையவை கூட்டணியில் கவனம்

கொழும்பு, ஜூன் 29
நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தலை எதிர்கொள்வது பற்றி அரசியல் கட்சிகள் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. தேர்தலில் தனித்துக் களமிறங்குவதா கூட்டணி அமைத்து களமிறங்குவதா என்பது பற்றியும் அவை ஆலோசனை நடத்தி வருகின்றன.
யானை சின்னத்தில் தனித்துக் களமிறங்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. எனினும் அந்தக் கட்சியின் பட்டியலில் போட்டியிடுவதற்குப் பல சிறிய கட்சிகள் முன்வந்துள்ளன. இது குறித்தான பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன.
மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி, ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன ஐ.தே.கவுடன் இணைந்து களமிறங் பக்.24

# மைத்திரியுடன் இணைந்து செயற்பட அமெ. விருப்பம்

## நீண்ட கால மனித உரிமைப் பிரச்சினைகளை தீர்ப்பதாக உறுதியளித்ததால்

கொழும்பு, ஜூன் 29
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து செயற்பட விரும்புவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.
நீண்டகாலமாக நிலவிவரும் மனித உரிமை மீறல் பிரச்சினைகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளதாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.
அத்துடன், அண்மையில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட மனித உரிமை குறித்த அறிக்கை கடந்த 2014ஆம் ஆண்டுக்கானது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக பேச்சாளர் ஜொசுவா பக்.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக் கட்சி கிளை அலுவலகம் வட்டுக்கோட்டையில் நேற்று திறப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 29

இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய வட்டுக்கோட்டைத் தொகுதிக்கான அலுவலகம் மற்றும் இளைஞர் – யுவதிகளுக்கான தொழிற்திறன் விருத்தி இலவச பயிற்சி நெறிக்கூடம் என்பன நேற்றுக் காலை, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசாவால் திறந்து வைக்கப்பட்டது.

வட்டுக்கோட்டை அத்தியடிப் பிள்ளையார் கோயிலில், நேற்றுக் காலை விசேட பூசைகள் இடம் பெற்றன. அதன் பின்னர் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர். தொகுதி அலுவலகத்தில் மங்கள விளக்கேற்றல் இடம்பெற்று அதன் பின்னர், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிக் காரியாலத்தின் பெயர்ப் பலகையினை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா திரை நீக்கம் செய்து வைத்தார்.

இதன் பின்னர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், அப்பாத்துரை விநாயகமூர்த்தி மற்றும் ஈ.சரவணபவன் ஆகியோர் கூட்டாக இணைந்து, தமிழரசுக் கட்சி அலுவலகம், இளைஞர் வலுவூட்டல் நிலையம், இளைஞர் – யுவதிகளுக்கான கணினிப் பயிற்சி நிலையம் ஆகியவற்றை நாடா வெட்டித் திறந்து வைத்தனர்.

இதன் பின்னர் மேடை நிகழ்வுகள் இடம்பெற்றன. முதலில் தமிழ்த் தாய்த்து வாழ்த்தும் அதனைத் தொடர்ந்து, வரவேற்பு நடனமும் இடம்பெற்றது. சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் வாசுதேவக் குருக்கள் மற்றும் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் டானியர் தியாகராஜா ஆகியோர் ஆசியுரை வழங்கினர். தொடர்ந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வரவேற்புரை நிகழ்த்தினார். தலைமையுரையை, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்டத் தலைவர் பொ.கனகசபாபதி நிகழ்த்தினார். விசேட விருந்தினர் உரைகளை, வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவ ஞான மும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் நிகழ்த்தினார்கள். இறுதியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா உரையாற்றினார்.

இதேவேளை நேற்றைய நிகழ்வில் வைத்து, 20 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் மூன்று வைத்திய சாலைகளுக்கு மாற்றுத் திறனாளிகளுக்குரிய உபகரணங்களும் வழங்கப்பட்டன. மேலும் 40 பேருக்கு, தையல் பயிற்சியை இலவசமாக கற்பதற்குரிய அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான, த.சித்தார்த்தன், எம்.கே.சிவாஜிலிங்கம், இ.ஆனோல்ட், பா.கஜதீபன், அ.பரஞ்சோதி, வே.சிவயோகன் ஆகியோர் கலந்து கொண்டனர். அத்துடன் பிரதேச சபைகளின் தவிசாளர்களும் கலந்துகொண்டனர்.

(ந–5,101)

# ராஜதந்திர வெற்றி மூலமே இலட்சியத்தை அடையலாம்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஜூன் 29

நாம் இராஜதந்திர ரீதியிலும் வெற்றி பெறும் போதுதான், எமது இலட்சியத்தை – தந்தை செல்வாவின் சித்தாந்தத்தை நிலைநாட்டிக் கொள்ள முடியும். – இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி அலுவலகம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

எங்கள் மக்கள் இதுவரை செய்த தியாகம் வீண்போகாமல், அந்தத் தியாகத்தின் அடிநாதமாக அமைந்த, தமிழரசின் ஆட்சி – எங்கள் தேசத்தை நாங்களே ஆளுகின்ற ஆட்சி கட்டியெழுப்பப்பட வேண்டும். தேசத்தின் விடுதலையை வென்றெடுக்க வேண்டும் என்பதற்காக எங்கள் மக்கள், தங்களை அர்ப்பணித்து அவர்களுடைய வாக்குகளை வெற்றிகரமாகப் பாவித்து வந்திருக்கின்றார்கள். வீடு என்பது மக்களின் இதயங்களில் இருக்கின்றது. சீர்குலைக்கப்பட்ட எமது சமுதாயத்தின் விடுதலை மீள நிர்மாணிக்கப்பட வேண்டும்.

இந்த நாட்டில் ஜனநாயக ரீதியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. இதற்கு எங்களுடைய மக்களின் பங்களிப்பும் பெரிதும் உதவியது. சர்வதேச நாடுகள் தங்களது நலனையும் கருத்திலெடுத்து இந்த ஆட்சி மாற்றத்தை நிகழ்த்தியிருக்கின்றார்கள். ஆட்சி மாற்றத்தின் விளைவுகள் முழுமையான பயனைத் தரவில்லை. ஆனாலும் நல்லெண்ணம் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆனாலும் இந்த நூறு நாள் திட்டத்திலேயோ அல்லது வேறு எந்த வகையிலேயோ தமிழ் மக்களுக்கு எந்தவொரு நலனும் கிடைத்து விடக் கூடாது என் பதில், மஹிந்த ஆதரவு தரப்பினர் முனைப்பாக இருக்கின்றனர். அவர்கள் எப்படியாவது மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதை நோக்காகக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால், தற்போதைய சூழலில் சர்வதேச நாடுகள் எங்களுக்கு பலமாக இருக்கின்றன. தந்தை செல்வா வட்டுக்கோட்டையில் எடுத்த தீர்மானம், அது ஒரு இலங்கைக்குள்ளா என்பதை சர்வதேசம் தீர்மானிக்க கூடியதாக, நாங்கள் எங்கள் நிலைப்பாடுகளைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். எங்களிடம் ஜனநாயகப் பலம் மட்டும் இப்போது இருக்கின்றது. அதன் பின்னால் இருக்கின்ற சர்வதேசத்தின் அக்கறையை இழந்து விடாமல், பற்றிக் கொண்டு இராஜதந்திர ரீதியில் நாங்கள் வெற்றி பெற்றால் தான், இலட்சியத்தை – தந்தை செல்வாவின் சித்தாந்தத்தை வெற்றி கொண்டு நிலை நாட்ட முடியும் – என்றார்.

(ந–5,101)

# மதிநுட்ப நகர்வால் விடுதலை பெறலாம்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 29

தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கில் 'உடல்மண்ணுக்கு உயிர் தமிழுக்கு' என்று வாழ்ந்து அந்தச் சாதனைகளை நிலை நிறுத்தியவர்களை வணங்கி – மனதிலி ருத்தி, எம் சிந்தையையும் உடல் பொருள் ஆவியையும் ஒருங்கிணைத்து மதிநுட்பத்துடன் கூடிய நகர்வுகளின் மூலம் நாம் விடுதலையை வென்றெடுக்க வேண்டும். – இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய வட்டுக்கோட்டைத் தொகுதிக்கான அலுவலக திறப்பு விழா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இதில் வரவேற்புரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆயுத வழிப் போராட்டம் அமைதியடைந்ததன் பின்னரும் சிங்கள – பௌத்தவாத சிந்தனையை எதிர்த்து ஈழ விடுதலைக்கான அஹிம்சை வழிப் போராட்டத்தைத் தொடர தமிழர்களான நாம் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றோம். 400 வருடங்களுக்கு மேலாக ஐரோப்பியர்களிடம் அடிமைப்பட்டுக் கிடந்த ஈழத் தமிழினம், இலங்கை நாட்டின் சுதந்திரத்தின் பின்னரும் விடுதலைக்காக ஏங்கி நிற்கும் நிலை கடந்த 60 வருடங்களில் மாற்றமடையவில்லை. 30 வருடங்களாக எமது இளைஞர், யுவதிகள் தமது இன்னுயிர்களை ஆகுதியாக்கி நடத்திய போராட்டம் தொடரப்படுவதற்காக எம் எல்லோரிடமும் கையளிக்கப்பட்டுள்ளது. – என்றும் அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அடிமைத் தளையில் இருந்து விடுதலை பெற்று நாம் முன்னேற ஓரணியில் திரள வேண்டும். சிறுவர், பெரியவர், ஆண், பெண் என்ற வேறுபாடுகள் அனைத்தையும் களைந்து விடுதலைக்காக முன்னேற நாம் ஒவ்வொருவரும் பட்டை தீட்டப்பட்ட வைரங்களாக மிளிர வேண்டும்.

நம் ஒவ்வொருவரையும் பட்டை தீட்ட ஒரு தரம்மிக்க பட்டறை வேண்டும். அந்தப் பட்டறையாகத்தான் வட்டுக்கோட்டையிலே தமிழரசுக் கட்சி அலுவலகம் திறக்கப்படுகின்றது.

'முன் தோன்றிய மூத்த குடி' எனப் பெருமை பேசுவதால் மட்டும் நாம் இழந்தவற்றை அடைந்துவிட முடியாது. 'கங்கையும் கடாரமும் வென்ற சோழர்களின் வழித் தோன்றல்கள்' என்று வரலாறு பேசுவது மட்டும் எமக்கு விடிவைத் தந்துவிடாது. தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கில் 'உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு' என்று வாழ்ந்து அந்தச் சாதனைகளை நிலை நிறுத்தியவர்களை வணங்கி, மனதிலிருத்தி எம் சிந்தையையும் உடல் பொருள் ஆவியையும் ஒருங்கிணைத்து மதிநுட்பத்துடன் கூடிய நகர்வுகளின் மூலம் நாம் விடுதலையை வென்றெடுக்க வேண்டும்.

அந்தத் தயார்ப்படுத்தலை வட்டுக்கோட்டை தமிழரசுக் கட்சி அலுவலகம் இனிவரும் காலங்களில் சிரமேற்கொண்டு முன்னெடுக்கும். இளைஞர்களுக்கு அரசியல் அறிவையும் மூத்தவர்களுக்கு அரசியல் விருப்பையும் அளிப்பதே இந்த அலுவலகத்தின் தலையாய பணி.

நாம் போக வேண்டிய தூரம் நீண்டது – கொடியது – கடும் சவால்கள் நிறைந்தது. அதற்கு எம் எல்லோரையும் இந்த அலுவலகம் தயார்ப்படுத்தும். அருச்சுனனுக்குக் கிளியின் கழுத்து அரவம் போன்றே எமக்கும் வெற்றி ஒன்றே குறி. எல்லோரும் சேர்ந்து நிற்போம்! வெற்றி பெறுவோம்! ஒற்றுமையே பலம்! வாருங்கள்! ஓடி வாருங்கள்! அணியாய் திரளுங்கள்! வெற்றியைத் திரட்டுங்கள்!

போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட எமது மக்கள் தமது வாழ்வை மீளக்கட்டியெழுப்புவதற்கு அவர்களுக்குக் கைகொடுக்க வேண்டிய தன் அவசியத்தையும் நாம் மறந்துவிடவில்லை. குறிப்பாக மாவீரர்களின் குடும்பங்களையும் முன்னாள் போராளிகளின் குடும்பங்களையும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களையும் ஆதரித்து அன்பு செலுத்துவதுடன் மட்டும் நின்றுவிடாது, அவர்கள் தமது சொந்தக் கால்களில் நிற்பதற்கான பலத்தைக் கொடுப்பதும் எம் ஒவ்வொருவருடையதும் தலையாய கடமை. அதற்காகத்தான் நான் உதய வாழ்வு உதவி மையத்தை உருவாக்கினேன்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சொந்தக் கால்களில் நிற்க வைப்பதற்கு கல்வியைவிட வேறு ஒரு துறை முகிழ்த்துவிட முடியுமா? எனவேதான் உதய வாழ்வு இன்றைய பிள்ளைச் செல்வங்களின் கல்வியில் அதிக அக்கறை கொண்டுள்ளது. அவர்கள் பள்ளி செல்வதற்கு வேண்டிய உதவிகளை வழங்கி வருகின்றது.

இனிவரும் காலங்களில் வட்டுக்கோட்டை தமிழரசுக் கட்சி அலுவலகத்தின் ஊடாகவும் இந்த உதவிகள் வழங்கப்படும். உதவி தேவைப்படும் எவரும் அந்த அலுவலகத்தினை நாடி, தம் கல்வி அறிவை விருத்தி செய்து கொள்ளலாம்.

பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகளும் இந்த அலுவலகத்தின் ஊடாக உதய வாழ்வின் மூலம் வழங்கப்படும். தேவைப்படுபவர்கள் பதிவுகளைச் செய்து கொள்ளலாம். பொருத்தமான உதவிகள் நிச்சயம் கிடைக்கும்.

சமூக நீதியும், சமூக வளர்ச்சியும் எம் தாரக மந்திரங்கள். இந்த இரண்டும் இல்லாமல் முழுமையான விடுதலை சாத்தியமில்லை. வட்டுக்கோட்டை அலுவலகம் தனது பகுதிக்குள் சமூக விடுதலையுடன்கூடிய ஈழ விடுதலைக்குப் பாடுபடும் என்று அறுதியும் உறுதியுமாகக் கூறி, இந்த அலுவலகத் திறப்பு விழாவுக்கு வருகை தந்துள்ள அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் – என்றார்.

(ந–5,101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையை ஒழிக்க அனைவரும் திரள்க

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன், 29

திட்டமிட்ட வகையில் எமது சமூகத்திற்கு எதிராகத் தூண்டி விடப்பட்டுள்ள அதீதமான போதைப் பாவனையை இல்லாதொழிக்க அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மேற்காட்டியவாறு தெரிவித் துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் தமிழர் அதிகம் வாழும் பிரதேசங்களில் போதைப் பாவனை அதிகரித்துள்ளது. இது எமது இளம் சமுதாயத்தையும், தமிழ்ச் சந்ததியையும் முற்றாக அழிப்பதாக அமைகின்றது. அதனைத் தடுப்பதற்கு எந்தவித வேறுபாடுமின்றி அனைவரும் ஒன்று சேரவேண்டும். எமது கலாசாரம், பண்பாடு, விழுமியங்கள் அனைத்தும் அழிவடைவதனை நாம் கண்டும் காணாமல் இருக்க முடியாது.

அதற்காக முதலில் வடகிழக்கு மாகாணங்களில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மதுபாவனையை முற்றாக ஒழிக்க குறித்த பத்து நாள்களுக்கு மதுபானசாலைகளை மூடுதல் வேண்டும். இதன்மூலம் மது அருந்துபவர்களில் கணிசமானவர்கள் மது அருந்துவதை மறப்பதுடன் மதுப் பிரியர்களின் எண்ணிக்கை குறைவடையும். இருபத்தியிரண்டு வயதிற்கு உட்பட்ட எவரும் மது போதையில் நடமாடக்கூடாது. அவ்வாறு நடமாடுவோர்மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இருபத்தியிரண்டு வயதிற்கு உட்பட்ட எவருக்கும் மதுபானம் விற்பனைசெய்யக்கூடாது. அவ்வாறு விற்பனைசெய்யும் மதுபான உரிமையாளர்கள்மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். பாடசாலைகள், தேவாலயங்கள், கோவில்கள், சனசமூக நிலையங்களுக்கு அருகில் உள்ள மதுபான சாலைகள் உடனடியாக மூடப்பட வேண்டும். இவற்றிற்கு ஐந்நூறு மீற்றர்களுக்கு உள்ளே மதுபான சாலைகள் இயங்கக்கூடாது.

மக்கள் செறிந்துவாழும் பிரதேசங்களில் உள்ள மதுபானசாலைகள் மூடப்படவேண்டும். குடியிருப்புக்கள் உள்ள ஐந்நூறு மீற்றர்களுக்குள் மதுபானசாலைகள் இயங்கக் கூடாது. பொதுவான இடங்களில் மதுபாவனையில் ஈடுபடுவோர்மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். மதுபாவனையில் ஈடுபடுவோருக்கு குறித்த இடத்திலேயே தண்டனை வழங்கப்பட வேண்டும்.

பாடசாலை மாணவர்கள். பாடசாலை நேரத்தில் சீருடையுடனோ, சீருடை இல்லாமலோ மாணவர்கள் தெருவில் நடமாடக்கூடாது. அவசியம் ஏற்படுமிடத்து பெற்றோர்கள், அதிபர்கள், ஆசிரியர்களின் துணையுடன் நடமாடலாம். எந்தவொரு பாடசாலை மாணவனுக்கும் தமது பாடசாலையை அடையாளப்படுத்தும் விதத்தில் குறியீடு வைத்திருத்தல் வேண்டும். பாடசாலை வளாகத்திற்குள் போதைப் பொருள் பாவிப்போர், மதுபாவனையில் ஈடுபடுவோர், புகைத்தலில் ஈடுபடுவோர், கையடக்கத் தொலைபேசி பாவிக்கும் மாணவர்கள் கண்டிக்கப்படவேண்டும். அவற்றை முற்றாக தவிர்க்க வேண்டும். அதற்காக அதிபர்கள், ஆசிரியர்களுக்கு சட்ட அங்கீகாரம் வழங்கப்படவேண்டும்.

புகைப்பொருள்களை இருபத்தியிரண்டு வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு விற்பனை செய் வோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். பொது இடங்களில் புகைபிடிப்பதனை முற்றாக்த் தடைசெய்ய வேண்டும். பாடசாலைகள், ஆலயங்கள், கோவில்களுக்கு அருகில் உள்ள கடைகளில் புகைப்பொருள்கள் விற்பனைசெய்யக்கூடாது. அத்தோடு போதையூட்டும் எப்பொருள்களும் விற்பனை செய்யக்கூடாது.

இவ்வாறான விடயங்களை வெகு விரைவாக நடைமுறைப்படுத்தி வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இருந்து போதைப் பொருள்களை முற்றாக இல்லாதொழிப்பதற்கு அனைவரும் முன்வரவேண்டும். - என்றுள்ளது. (ற-10)



# மார்ச் 12 பிரகடனத்துக்கு கையெழுத்துச் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29

சிறந்த அரசியல் தலைவர்களை தெரிவு செய்வதற்காக நாடுமுழுவதும் 10 இலட்சம் கையெழுத்துக்களை பெறும் நோக்கில் நேற்று யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் கையெழுத்துக்கள் பெறப்பட்டன. காலை 9 மணி தொடக்கம் இந்த நிகழ்வு நடைபெற்றது.

அரசியல்வாதிகளுக்கு வேட்பு மனு வழங்கும் போது கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பில் அரசியல் கட்சிகள் இணங்கிய 'பொதுவான அளவுகோல்கள்' எனும் கணிப்பீட்டு ஒப்பந்தத் தினை வலுப்படுத்தும் நோக்கில் மேற்படி கையெழுத்து வேட்டை முன்னெடுக்கப்படுகின்றது.



பவ்ரல் அமைப்பும், சிவில் சமூக அமைப்புக்களும் இணைந்து உருவாக்கியுள்ள மார்ச் 12 பிரகடனத்தின் அடிப்படையில் இந்த நிகழ்வு இடம்பெறுகிறது.

இந்நிலையில் மார்ச் 12 இயக்கத்தால் நடத்தப்படும் இக்கையெழுத்து வேட்டை நாடு முழுவதும் நடைபெற்றுவரும் நிலையில், நேற்று யாழ் மாவட்டத்தில் நடைபெற்றது. சாவகச்சேரி, குருநகர், யாழ் பிரதான பஸ் நிலையம் ஆகிய இடங்களில் கையெழுத்துச் சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நேற்று கிளிநொச்சி நகரிலும் மக்கள் கையெழுத்துப் பெறும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. முற்பகல் 11 மணியளவில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இவற்றில் பெரும் எண்ணிக்கையான மக்கள் ஆர்வமுடன் பங்குபற்றினர்.

வடக்கின் 5 மாவட்டங்களிலும் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது. (ற-21,10,421)

# நீதிமன்ற தாக்குதல் சம்பவம்: இருவருக்கு பிடியாணை

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாண நீதிமன்றம் தாக்கப்பட்டமை தொடர்பான அசம்பாவித சம்பவங்களில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் தேடப்படும் இருவருக்கு நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவர்கள் வெளிநாடு செல்வதற்கும் தடை செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பொலிசாரால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தில் இச்சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் தலைமறைவாக திரிவதாகவும் வெளிநாட்டுக்கு தப்பிச் செல்ல முயற்சிப்பதாகவும் மன்றுக்கு தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து நீதிவான் பெ.சிவகுமாரால் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

அத்துடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளுக்காக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன், தினக்குரல் மற்றும் சுடரொளி பத்திரிகைகளில் சம்பவம் தொடர்பாக வெளிவந்திருந்த படங்களையும், ஊடகவியலாளர்களால் பதிவுசெய்யப்பட்ட காணொளிகளையும் பெற்றுத்தருமாறும் பொலிஸார் கோரினர். பொலிஸாரின் விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்ட நீதிவான் அவற்றிற்கான கட்டளைகளை வழங்கினார். (ற-103)



கிளிநொச்சியில் பரந்தனில் இருந்து வேகமாக வந்த ஓட்டோ திடீர் என்று கரடிப் போக்கு சந்தியில் உருத்திரபுரம் வீதிவழியாக திருப்ப முற்பட்டது. அதனால் அதன் பின்னால் பயணித்த படி ரக வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியிலே போடப்பட்ட அலங்கார கட்டுகளின் மேல் ஏறி விபத்துக்குள்ளானது. இந்த சம்பவம் நேற்று கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் இடம்பெற்றுள்ளது. (ற-21)

# கூட்டுறவு சங்கங்களுக்கு புதிதாக அங்கத்தவர்கள்

## இணைக்கும் நடவடிக்கை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

வடமாகாண கூட்டுறவு அமைச்சின் நூறு நாள் வேலைத்திட்டத்தில் கூட்டுறவு சங்கங்களில் புதிதாக அங்கத்தவர்களை இணைக்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேஸ் தெரிவித்தார்.

சகல கூட்டுறவு சங்கங்களிலும் அங்கத்தவர்களாக இன்றே இணையுமாறு கோரி துண்டுப்பிரசு ரங்கள் விநியோகிக்கப்படுவதோடு இதற்கான அறிவுறுத்தல் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளன. கூடுதலாக இளம் தலைமுறையினர் சங்கங்களில் அங்கத்தவர்களாக இணையும் பட்சத்தில் அவர்களுக்கு விசேட கடன் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

சங்க கிராமிய வங்கிகள் ஊடாக இந்த கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அங்கத் தவர்களாக இணையும் இந்த இளம் சமூகத்தினருக்கு அதற்கான நிபந்தனைகளுடன் குறைந்த வட்டியுடனான கடன் வழங்கப்படும்.

கூட்டுறவை மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்கில் வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சிடம் இந்த நூறு நாள் வேலைத் திட்டத்தின் ஊடாக ஒவ்வொரு சங்கமும் அதிகளவிலான அங்கத்தவர்களை இணைக்க முன்வரவேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. (ற-17)

# முன்னாள் தவிசாளர் காலத்தில் நடந்ததை விசாரிப்பதற்கு குழு

## வலி.கிழக்கு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

வலி.கிழக்கு பிரதேச சபையில் முன்னாள் தவிசாளரின் கீழ் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் விசாரணைக்குழு ஒன்றை அமைத்து அதற்கு உரிய தீர்வைப் [illegible] வேண்டும் என்று சபை [illegible] தக் கூட்டத்தில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த தவிசாளர் தே.துரைசிங்கம், சபையின் நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் மாகாண உள்ளூராட்சி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் [illegible] அவைகை அதிகாரிகள் முட்டுக்கட்டையாக உள்ளனர்.

சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இந்த அதிகாரிகள் தடையாக இருப்பதோடு முன்னாள் தவிசாளர் ஆட்சியின்போது இடம்பெற்ற சம்பவங்களை காரணம் காட்டி இவர்கள் தொடர் பழிவாங்கும் நடவடிக்கையிலே ஈடுபட்டு வருகின்றனர்.

எமது சபை நடவடிக்கைகள் குறுகிய காலம் தான் இருப்பதால் அதற்கு முன்னர் வடமாகாண முதலமைச்சர் இந்த பிரச்சினைக்கு ஒரு விசாரணைக் குழு ஒன்றை அமைத்து அதற்கு ஒரு தீர்வை விரைவாகப் பெற்றுத்தர வேண்டும் என்றும் சபை கூட்டத்தில் இது தொடர்பாக தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. - என்றார். (ற-17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மால் முடியாத சிலவற்றை சரவணபவன் செய்கின்றார்

## தமிழரசுக் கட்சி கிளை திறப்பு விழாவில் வடக்கு மாகாண அவைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29

தொழிலதிபரான சரவணபவனுக்கு அரசியல் பொருத்தமில்லை என்று நான் கடந்த தேர்தலின் போது கூறினேன். ஆனால் அதில் தற்போது மாற்றத்தைக் காண்கின்றேன். தொழிலதிபராக இருந்தவர், இன்று சமூகத்தின் தேவைகளில் சிலவற்றையாவது பூர்த்தி செய்கின்ற ஒருவராக மாறியிருக்கின்றார். – இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி கிளைத் திறப்பு விழா நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இந்த நிகழ்வைப் பார்த்து நான் மகிழ்ச்சியடைகின்றேன். தேவையுடையவர்கள் இந்த மண்ணில் இருக்கின்றனர். அண்ணளவாக 47 ஆயிரம் பெண் தலைமைத்துவக் குடும்பங்களும், 17 ஆயிரம் விசேட தேவையுடையவர்களும், 15 ஆயிரம் பெற்றோரை இழந்த சிறுவர்களும் இருக்கின்றார்கள். இவர்களுக்கு உதவி தேவை., மாகாண சபைத் தேர்தலில் இவர்களுக்கு எல்லோருக்கும் உதவி செய்வோம் என்று மற்றவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் செய்யவில்லை. செய்ய முடியவில்லை.

ஆனால் அவ்வாறான ஒரு பணியை, சரவணபவன் அவர்கள், அவர் சார்ந்து இருக்கின்ற உதய வாழ்வு நிறுவனம் செய்து இருக்கின்றது. அதனை முன்னிட்டு பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் போது, சரவணபவன் போட்டியிடுவது தொடர் பில் என்னிடம் தெரிவித்தார். அப்போது நான் அவருக்குச் சொன்னேன், நீங்கள் ஒரு தொழிலதிபர். இதற்கு நீங்கள் பொருத்தமில்லாதவர் என்று குறிப்பிட்டேன். ஆனால் தற்போது அவர் செய்கின்ற பணிகளைப் பார்த்து அவரைப் பாராட்ட விரும்புகின்றேன். இவ்வாறான மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சேவைகளைப் பாராட்டுகின்றேன். அரசியல்வாதியாக மாறி, சமூகவியலாளராக மாறி சமூகம் சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அமைப்பை உருவாக்கி அதனைச் செய்து கொண்டிருக்கின்றார்.

எங்களால் செய்ய முடியாததை, நிதியில்லாத தன்மையினால் எங்களால் முடியாததை அவர், செய்து கொண்டிருக்கின்றார். எங்களுக்கு ஏற்பட்ட இடைவெளியை அவர் பூர்த்தி செய்து கொண்டிருக்கின்றார் – என்றார். (ற–5,101)

# நடைபெறுவுள்ள தேர்தலிலும் மக்கள் அங்கீகாரம் கிடைக்கும்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 29

இதயசுத்தியோடு, மக்களின் நன்மையைக் கருதி நாங்கள் ஒவ்வொருவரும் செயற்பட்டிருக் கின்றோம். அது எங்கள் ஒவ்வொருவருடைய மனச்சாட்சிக்கும் தெரியும். நாங்கள் செய்தவற்றை மக்களுக்குக் கூறி, இனிமேல் என்னத்தைச் செய்யப் போகின்றோம் என்பதையும் கூறி, இந்தத் தேர்தலிலும் மக்களின் அங்கீகாரத்தை வெல்வோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. – இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அலுவலகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தமிழரசுக் கட்சி என்பது மக்களுடன் பின்னிப் பிணைந்த ஒன்று. அது எப்பொழுதும் மக்களுடன் தொடர்பாடலில் இருக்கின்றது என்று பலர் இங்கே சொன்னார்கள். அது உண்மையானது. அதே வேளையில், தேர்தலில் அங்கீகாரம் பெறாத கட்சி மக்களுடைய அரசியல் கட்சி அல்ல.

அரசியல் கட்சிக்கு மக்களுடைய முழுமையான அங்கீகாரம் கொடுக்கப்படா விட்டால், அது மக்களுடைய அரசியல் கட்சி – மக்களுடைய அரசியல் குரல் என்ற ஸ்தானத்தை பெற முடியாமல் போய்விடும். வடபுலத்தில் பல அரசியல் கட்சிகள் இருக்கின்றன. மக்களோடு இருக்கின்றதாக பல செயற்பாடுகளையும் தேர்தல் காலங்களிலே செய்கின்றார்கள். ஆனால், இது வரையில் மக்களுடைய அங்கீகாரம், இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத்தான் கொடுக்கப்பட்டு வந்திருக்கின்றது.

தொடர்ச்சியாக – பல தசாப்தங்களாக அவை கொடுக்கப்பட்டு வந்துள்ளது. பெயர் மாறினாலும், சின்னம் மாறினாலும், நிறம் மாறினாலும் உள்ளடக்கம் எதுவோ, அந்த அரசியல் அமைப்புக்குத்தான் எங்களுடைய மக்கள் அரசியல் அங்கீகாரத்தை கொடுத்து வந்திருக்கின்றார்கள். அதுதான் இன்றைக்கு, இலங்கைத் தமிழரசுக் கட்சி பிரதான அங்கம் வகிக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக உருவெடுத்திருக்கின்றது. இன்றைக்கும் அந்த அங்கீகாரம் இருக்கின்றது. ஆனால், காலத்துக்கு காலம் அந்த அங்கீகாரம் தொடர்ச்சியாக இருக்கின்றதா என்று பரிசோதிக்கப்பட வேண்டிய தேவை இருக்கின்றது.

வரப்போகும் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி என்னவிதமாக மக்களின் அங்கீகாரத்தைப் பெறப் போகின்றது ? மக்களுடைய அங்கீகாரம் தொடர்ச்சியாக எங்களுடைய செயற்பாட்டுக்கு கொடுக்கப்பட்டிருகின்றதா ? மக்களுடைய குரலாக தொடர்ந்து ஒலிக்கக் கூடிய ஸ்தானத்தை நாங்கள் தொடர்ச்சியாக தக்க வைத்துக் கொண்டிருக்கின்றோமா ? இல்லையா என்ற பரிசோதனை இந்தத் தேர்தலிலும் முன்வைக்கப் படும்.

நாங்கள் மக்களிடத்தில் போய், எங்களுடைய செயற்பாடு என்ன விதமாக இருந்திருக்கின்றது. இனியும் என்ன விதமாக இருக்கப் போகின்றது. என்று நாங்கள் சொல்லுவதிலே மக்களுக்கு நம்பிக்கை இருக்கின்றதா ? இல்லையா?அதை மக்களிடத்தில் தெளிவுபடுத்தி, அவர்களை ஆமோதிக்க பண்ணுகின்ற செயற்பாடுகளைப் செய்யப் போகின்றோம்.

மக்களிடத்தில் சந்தேகங்களை மட்டும் எழுப்புகின்ற குரலாக மட் டும் ஊடகங்கள் இருக்கக் கூடாது. மக்களின் சந்தேகங்களை எங்களிடத்தில் கொண்டு வந்து சேர்க்க வேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கு இருக்கின்றது. அதனைச் சரிவரச் செய்கின்றனர். அத்துடன் எங்களுடைய தெளிவுபடுத்தல்களை மக்களிடத்திலே கொண்டு போய்ச் சேர்க்க வேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கு இருக்கின்றது. அதனையும் செய்ய வேண்டும்.

எங்களுடைய மக்களின் விடுதலைப் பாதையிலே நாம் செல்லுவதற்கு, ஒவ்வொருவருக்கும் வகிபாகம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதனை நாங்கள் செய்கின்றோம் என்பதை மக்களிடத்திலே சொல்லுகின்றபோது, மக்களிடத்திலிருந்து திரும்பவும் அங்கீகாரம் எங்களுக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. இதயசுத்தியோடு மக்கள் நன்மை கருதி நாங்கள் ஒவ்வொரு வரும் செயற்பட்டது எங்கள் ஒவ்வொருவரது மனசாட்சிக்கும் தெரியும்.

மக்கள் முன்னால் எங்கள் செயற்பாடுகளை தெரிவித்து, எங்களுடைய திட்டங்களில் சொல்லக் கூடியவற்றை மட்டும் கூறி, சொல்ல முடியாதவற்றை எங்களிலே நம்பிக்கை வையுங்கள். இதுவரை நாங்கள் துரோகம் செய்யாத அணி. இதற்குப் பின்னரும் துரோகத்தைச் செய்வதற்கான சிந்தனை எள்ளவும் எங்கள் மனதில் கிடையாது. இதனை நாங்கள் நிமிர்ந்து மக்களிடத்திலே சொல்லி அவர்களுடைய அங்கீகாரத்தைப் பெற்று, மக்களின் விடுதலைக்கான நடைபாதையில் செல்வோம் – என்றார்.

(ற–5,101)





இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய வட்டுக்கோட்டைத் தொகுதிக்கான அலுவலகம் மற்றும் இளைஞர் – யுவதிகளுக்கான தொழிற்திறன் விருத்தி இலவச பயிற்சி நெறிக்கூடம் என்பன நேற்றுத் திறந்து வைக் கப்பட்டன. (ற–5,101,86)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுபல சேனாவை கைது செய்ய வேண்டும்

## முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் கோரிக்கை



கொழும்பு, ஜூன் 29

நாட்டில் வாழும் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிராக வன்முறைகள் கட்ட விழ்த்து விட்டு வேடிக்கை பார்ப்பதற்கு அரசுக்கு அருகதையில்லை. ஆகையால், தொடர்ச்சியாக முஸ்லிம்களின் வணக்க வழிபாடுகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்படும் கலகொட அத்தே ஞானசார தேரரை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் கோரிக்கை விடுத்தார்.

முன்னாள் ஆட்சியின் போதே முஸ்லிம்களுக்கு எதிராக வன் முறை கட்டவிழ்த்து விடப்பட்டதாக கூறி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய முஸ்லிம்களுக்கு, இறுதியில் ஏமாற்றமே பதிலாக கிடைத்துள்ளது. எனவே நாட்டின் நலனுக்காக மஹிந்த ராஜபக்ஷவை மீளவும் பிரதம ராக்க வேண்டும் எனவும் அவர் வேண்டினார்.

இது தொடர்பில் முன்னாள் அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் பிரித்தானியர் களின் ஆட்சிக்காலத்தின் போது சோல்பரி யாப்பில் சிறுபான்மை யினத்தவர்களுக்கான விசேட ஏற்பாடுகள் பரிந்துரைக்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் குறித்த யாப்பின் 29 ஆவது உறுப்புரையில் சிறு பான்மை இனத்தவர்களுக்கு எதிரான மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளால் எந்தவொரு சட்டத்தையும் நிறைவேற்ற முடியாது என்ற உரிமை வழங்கப் பட்டிருந்தது.

எனினும் குறித்த சட்டம் 1972 ஆம் ஆண்டு முதலாவது குடியரசு யாப்பில் முழுமையாக இல்லாமல் செய்யப்பட்டு, சிறுபான்மை இனத்தவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது. இதன்பின்பு 1978ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு யாப்பில் சிறுபான்மை இனத்தவர்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு விசேட ஏற்பாடுகள் கொண்டு வர ப்பட்டன.

இந்நிலையில் தற்போது பொது பல சேனா என்ற இனவாத அமைப்பு தொடர்ந்தும் முஸ்லிம்களுக்கு எதிராக கடுமையாக வன்முறைகளை கட்டவிழ்த்து வருகிறது. ஹலால் சின்னத்தை தடை செய்யக் கோரும் பொதுபலசேனா அமைப்பின் செயற்பாடுகள், மீளவும் ஹலால் சின்னத்திற்கு எதிராக திசைதிரும்பியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் போதே முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படு வதாகவும், குறித்த ஆட்சியை உடனடியாக மாற்றியமைக்க வேண்டும் எனவும் சமூகத்தவர்களிடையே விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி, முஸ்லிம்களின் ஆதரவுடன் மஹிந்தவின் ஆட்சியை தோற்கடித்தனர்.

இருந்த போதிலும் முஸ்லிம் களுக்கு எதிராக எந்தவொரு அநியாயமும் இனிமேலும் இடம்பெறாது என்று நம்பியவர்களின் மன தில் எதிர்பாராத விதமாக நல்லாட்சியிலும் இனவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. மரக்கிளையிலுள்ள இரண்டு சிட்டுக்குருவிக்கு ஆசைப்பட்டுப் பிடிக்க போய், கையிலிருந்த ஒரு சிட்டுக் குருவியையும் கைவிட்ட நிலைமைக்கு முஸ்லிம்களின் நிலைமை காணப்படுகிறது. இது தொடர் பில் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் கருத்தும் பாராட்டத்தக்கது.

எவ்வாறாயினும் முஸ்லிம்கள் நம்பிக்கை கொண்ட நல்லாட்சியில் இனவாத செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். மஹிந்த ராஜபக்ஷவை மீளவும் பிரதமராக ஆட்சியில் அமர்த்த வேண்டும். அதன்பின்னரே நாட்டின் சமாதானம் ஏற் படுத்தப்படும்.

இந்நிலையில் முஸ்லிம்களின் வணக்க வழிபாடுகளுக்கு தடையாக காணப்படும் பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்று கோரினார். (ற)

# சு.கவின் பிளவுக்கு மஹிந்த காரணம்

## சாடுகின்றார் ரணதுங்க



கொழும்பு, ஜூன் 29

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயற்பாடுகளே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவு ஏற்படக் காரணமாக அமைந்துள்ளதென, முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். அத்தகல்ல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போது, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:-

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றியடைய வைத்துவிட்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதிகா ரத்தைக் கொடுக்க வேண்டியது மஹிந் தவின் பொறுப்பாகும். சுதந்திரக் கட்சியின் மீது மஹிந்த உண்மை யாக அன்பு வைத்திருந்தால், அவர் கட்சியை விட்டு விலகி சில காலங்களுக்கு அமைதியாக இருக்க வேண்டும். – என்று தெரிவித்தார்.

பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள இத் தருணத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர், மஹிந்த அணியில் கூட்டிணையும் முனைப்பில் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனைத் தடுக்க மைத்திரி, மஹிந்த ஆகியோர் இணைந்து செயற்படவேண்டுமெனவும், ஒரு சிலர் தெரிவித்து வருகின்றனர். (ற)

# வடக்கு, கிழக்கு மாகாணத்தில் 20 ஆயிரம் தொழில் வாய்ப்பு

## அமைச்சர் ரிஷாத் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 29

வடக்கிலும் கிழக்கிலும் 20 ஆயிரம் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாக தெரிவித்துள்ள கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் அதற்கு அமெரிக்காவின் உதவிகளையும் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கும் இலங்கைக்கான அமெரிக்க பதில் தூதுவர் அன்று சீமானுக்கும் இடையில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

அங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் ரிஷாத் பதியுதீன்,இலங்கையின் நுகர்வுப் பொருள்களை அமெரிக்க கொள் வனவு செய்துவரு கின்றது. இலங்கையின் அமெரிக்காவுக்கான ஏற்றுமதி 2 பில்லியன்களாகும். அந்த வகையில் தைத்த ஆடைகளே அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இன்னும் இலங்கையில் அமெரிக்காவின் முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை செய்வதற்கான சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளது என நம்புகின்றேன். இலங்கையின் எழுத்தறிவு வீதம் ஆசியாவில் முன்னணியில் இருக்கின்றது.


தொழிலாளர்களின் உழைக்கும் திறமை மிகவும் உயர்ந்த நிலையில் உள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிய ஆறு தையல் தொழிற் பேட்டைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளேன். அதில் மன்னார், முல்லைத்தீவு, வவு னியா, திருகோண மலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

போர் இந்த நாட்டில் பெரும் அழிவை ஏற்படுத்தியுள்ளது. இதனால் [illegible] எண்ணிக்கையிலான வித[illegible] வடக்கிலும் கிழக்கிலும் இன்று காணப்படுகின்றனர். இவர்களது வாழ் வாதார மேம்பாடுகளுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் இந்த தொழிற் பேட்டைகளை ஆரம்பிக்கவும் திட்டமிட்டுள்ளேன் என்றும் கூறினார். இது தொடர்பில் அமெரிக்க பதில் தூதுவர் கருத்து தெரிவிக்கையில், இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலுள்ள நட்புறவு மிகவும் முக்கியமானது. எல்லா சந்தர்ப்பங்களிலும் இலங்கைக்கு உதவி செய்யும் எண்ணத்தை அமெரிக்கா கொண்டுள்ளது. அமைச்சரின் அழைப்பின் பேரில் அமெரிக்க முதலீட்டாளர்கள் மற்றும் வியாபார சமூகத்தை இலங்கைக்கு அழைத்துவர நாம் நடவடிக்கையெடுக்கவுள் ளோம். அதேபோல் இலங்கையின் புதிய தொழில் வாய்ப்புக்களுக்கு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு எமது ஒத்துழைப்பை வழங்குவதாகவும் அமெரிக்க பதில் தூதுவர் கூறினார்.– என்று தெரிவித்தார்.

அதேவேளை, இரு தரப்பு வர்த்தக உடன்படிக்கை தொடர்பிலும் இரு தரப்பு சந்திப்புக்களை எதிர்காலத்தில் எற்படுத்தவும் இதன் போது இனக்கம் காணப்பட்டது. இந்தச் [illegible] துல எகொடகே உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ற)

# ராஜித கூறியிருக்கும் கருத்து மதத்தை இழிவுபடுத்துவதாகும்

## அமைச்சர் ஹக்கீம் சீற்றம்



கொழும்பு, ஜூன் 29

ஜனாதிபதி கதிரைக்கு ஆசைப்பட்டு நான் மதத்தைதக்கூட மாற்றிக் கொள்வேன் என அமைச்சர் ராஜித்த சேனாரத்ன கூறிய கருத்து என்னையும், நான் பின்பற்றும் மதத்தையும் மக்களையும் அவமதிக்கும் செயல் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

20 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக ஏற்பட்டுள்ள அரசியல் நிலைவரம் எனும் தலைப்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்த விசேட செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் பத்தரமுல்லை வோட்டர்ஸ்எஜ்ஹோட்டலில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சரவையில் எமது குரல்கள் அடக்கப்படுகின்றன என்று நான் நாடாளுமன்றத்தில் கூறிய கருத்தை அமைச்சர் ராஜித்த சேனாரத்ன தன்னைச் சுற்றி பேசியதாக கருத்திற் கொண்டு செய்தியாளர் மாநாட்டில் என்னைப்பற்றி மிக ஆவேசமாக கூறியிருந்தார். என்றாலும் அமைச்சரின் கூற்றுக் குறித்து நான் அலட்டிக்கொள்ளவில்லை. அர சியலில் இவ்வாறு ஆளுக்காள் குறை கூறிக் கொள்வது வழமையாகும். இருந்தபோதும் ஜனாதிபதி கதிரை எனக்கு கிடைப்பதாக இருந்தால் நான் மதத்தைக்கூட மாற்றிக் கொள்ளலாம் என அவர் கூறியிருப்பது என்னையும் நான் பின்பற்றும் மதத்தையும் எனது மக்களையும் அவமதிக்கும் வகையில் இருப்பதையிட்டு நான் கவலைப்படுகின்றேன். அமைச்சரவை பேச்சாளர் என்ற அந்தஸ்த்தில் இருக்கின்ற ஒருவர் இவ்வளவு தூரம் பொறுப்புணர்ச்சியில்லாமல் ஆவேசப்படுவது பொருத்தமில்லாததாகும். இதற்கு முன்பும் இவர் முன்னுக்குப்பின் முரனாக பேசி பொறுப்பில்லாத அமைச்சராக இருப்பதுடன் அமைச்சரவையின் பேச்சாளர் என்ற அந்தஸ்தையும் இழந்து வருகின்றார். – என்றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எதிர்கால வளர்ச்சி குறித்துச் சிந்திப்பீர்கள். தாயின் அன்பும், ஆசியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் கூடும். விரும்பிய உணவை உண்டு மகிழ்வீர்கள்.

**இடபம்:** உங்கள் மனதில் புதிய நம்பிக்கை ஏற்படும். தொழில், வியாபாரத்தில், அபரிமித வளர்ச்சி உண்டாகும். புதிய வீடு, வாகனம் வாங்கும் யோகமுண்டு. நண்பர்களுடன் பேசி மகிழ்வீர்கள்.

**மிதுனம்:** செயல்களில் தடுமாற்றம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில், அளவான மூலதனம் போதும். பிள்ளைகளின் செயற்பாடு நிம்மதிக்கு வழிவகுக்கும். வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம்.

**கடகம்:** பிறர் விமர்சனம் பற்றிக் கவலைப்பட வேண்டாம். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும். பெண்கள், பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடுவர்.

**சிங்கம்:** நண்பர்களால் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், சாதனை புரிவீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும். மனதில் ஆடம்பர எண்ணம் மேலோங்கும்.

**கன்னி:** நண்பர்களிடம், கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழிலில், விடாமுயற்சி தேவைப்படும். வெளியூர் பயணத்தின் மூலம், ஆதாயம் கிடைக்கும். திட்டமிட்டபடி ஆன்மிக வழிபாடு நிறைவேறும்.

**துலாம்:** மனதில், அன்பும் கருணையும் அதிகரிக்கும். தாய்வழி உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், இருந்த தடைகள் விலகும். பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** நண்பருக்கு உதவ முடியாத சூழல் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். வாகனத்தில் மித வேகம் பின்பற்றுவது நல்லது.

**தனுசு:** ஆன்மிக சிந்தனையுடன் செயல் புரிவீர்கள். தொழிலில், மந்தநிலை மறைந்து ஆதாயம் கூடும். வெகுநாள் வாங்க நினைத்த பொருளை வாங்குவீர்கள். வாகன வகையில், வீண் செலவு ஏற்படும்.

**மகரம்:** மனதில், இனம் புரியாத சந்தோஷம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்தியளிக்கும். நண்பர்கள் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வீர்கள். பெண்கள், தாங்கள் விரும்பிய ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**கும்பம்:** உடல் நலனில் அக்கறை தேவை. தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு வேலைப்பளு ஏற்படலாம். மனைவியின் கருத்துக்கு மதிப்பு அளிப்பீர்கள்.

**மீனம்:** யாருக்கும் தகுதிக்கு மீறி, வாக்களிக்க வேண்டாம். உறவினர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், விழிப்புடன் இருப்பது நல்லது. திடீர் செலவால் கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும்.



## அட ! இப்படியொரு ஹோட்டலா?

சீனாவில் ஹோட்டல் ஒன்றில் வாடிக்கையாளர்களைக் கவர, உணவு பரிமாறும் ஊழியர்கள் கவர்ச்சி உடையில் பணி செய்வது மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

சீனாவில் லியோனிங் மாகாணத்தில் உள்ள ஐஷன் யாங் நகரில் புதிதாகத் திறக்கப்பட்ட ஹோட்டலில் வாடிக்கையாளர்களைக் கவர, நீச்சல் உடை அணிந்த அழகிகள் உணவு பரிமாற நியமிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த ஹோட்டலுக்குச் சாப்பிட வந்தவர்கள் உணவுடன் இந்தக் கவர்ச்சி விருந்தையும் விரும்பியதாகவும் இதனால் ஹோட்டலுக்கு மிகுந்த வரவேற்பு கிடைக் கப்பெற்றுள்ளதாகவும் ஹோட்டல் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் கவர்ச்சியான கட்டழகு கொண்ட ஆண்களும் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## நீதிமன்றம் செல்லும்




காக்கா முட்டை திரைப்படத்துக்கு எதிரான வழக்கில், அதன் தயாரிப்பாளர்கள், இயக்குநர் உள்ளிட்ட 4 பேர் அடுத்த விசாரணையின்போது நேரில் முன்னிலையாக வேண்டும் என்று சென்னை பெருநகர தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

வழக்கறிஞர்கள் நலச் சங்கத் தலைவர் எஸ்.மணிவண்ணன், சென்னை பெருநகர தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் தனி நபர் மனு ஒன்றை தாக்கல் செய்தார். அந்த மனுவில் அவர் குறிப்பிட்டிருந்ததாவது:-

காக்கா முட்டை திரைப்படத்தில் வழக்கறிஞர்களை இழிவுபடுத்தும் விதமாகவும், வழக்கறிஞர் தொழிலை கொச்சைப்படுத்தும் விதமாகவும் வசனங்கள் இடம்பெற்றுள்ளன. அதனால் அந்தத் திரைப்படத்தின் தயாரிப்பாளர்கள் தனுஷ், வெற்றிமாறன், இயக்குநர் மணிகண்டன், நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ் ஆகியோர் மீது உரிய விசாரணை நடத்த பொலிஸாருக்கு உத்தரவிட வேண்டும். இல்லாவிட்டால் நீதிமன்றமே இந்த வழக்கை விசாரித்து நீதி வழங்க வேண்டும். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த மனு விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் எஸ்.நமோநாராயணன் முன்னிலையானார். அப்போது மனுதாரர் மணி வண்ணனின் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குற்றம்ஞ் சாட்டப்பட்டுள்ள இரு தயாரிப் பாளர்கள் உள்ளிட்ட 4 பேரும் அடுத்த விசாரணையின்போது நேரில் முன்னிலையாக வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார். பின்னர் மனு மீதான அடுத்த விசாரணையை ஓகஸ்ட் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.



## மலசலகூட கடதாசியில் ஆடை

அமெரிக்க நியூயோர்க் நகரைச் சேர்ந்த நவநாகரிக கண்காட்சி ஏற்பாட்டு நிறுவனமொன்றினால் நடத்தப்பட்ட கண்காட்சியில் யுவதிகள் மலசலகூடத்தில் பயன் படுத்தப்படும் கடதாசிகள் மூலம் வடிவமைக்கப்பட்ட கண்ணைக் கவரும் அலங்கார மணப்பெண் ஆடைகளை அணிந்து வலம் வந்து பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளனர்.

11 ஆவது வருடாந்த மலிவான மலசலகூடக் கடதாசியால் செய்யப்பட்ட மணப்பெண் ஆடைகளுக்கான போட்டி நிகழ்ச்சியில் யுவதிகளின் இந்த அலங்கார அணிவகுப்பு இடம்பெற்றது.

மலசலகூட கடதாசிச் சுருள்கள், ஒட்டுப் பசை, நாடாக்கள் மற்றும் நூல்கள் என்பவற்றைப் பயன் படுத்தி இந்த மணப்பெண் ஆடைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் போட்டி நிகழ்ச்சியில் தென்னஸி மாநிலத்தில் பிரென்ட்வூட் எனும் இடத்தைச் சேர்ந்த டோனா போப் வின்கிளேயர் என்ற நவ நாகரிக ஆடை வடிவமைப்பாளரால் உருவாக்கப்பட்ட மலசலகூட கடதாசியாலான மணப்பெண் ஆடை முதலிடத்தைப் பெற்று 10 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான பரிசை வென்றுள்ளது.

அவர் இந்த ஆடை தயாரிக்கத் [illegible] 22 மலசலகூட கடதாசிச் சுருள்களைப் பயன்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நடிகர் சங்கத் தேர்தலுக்குத் தடை

தென்னிந்திய நடிகர்கள் சங்கத் தேர்தலுக்கு இடைக் கால தடை விதித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நடிகர்கள் விஷால், நாசர், கார்த்தி ஆகியோர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், 'தென்னிந்திய நடிகர்கள் சங்கத் தேர்தலை வார நாள்களில் நடத்தாமல் வார விடுமுறை நாள்களில் நடத்த உத்தரவிட வேண்டும். ஓய்வுபெற்ற நீதிபதி மேற்பார்வையில் தேர்தலை நடத்த உத்தரவிட வேண்டும், என்று கோரியிருந்தனர்.

இந்த வழக்கில் இருதரப்பு வாதங்களைக் கேட்ட நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இந்த உத்தரவு குறித்து நடிகர் விஷால் தரப்பினர் மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளனர். தமக்கு கிடைத்த முதல் வெற்றி என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். நடிகர் சங்கத் தலைவர் சரத்குமார் இது தொடர்பில், மேன்முறையீடு செய்யப் போவதாக தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டணி தொடர்பாக இன்னம் முடிவில்லை

## வே.இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 29

நாடாளுமன்ற தேர்தலில் யாருடன் இணைந்து போட்டியிடுவது என்பது தொடர்பில் மலையக மக்கள் முன்னணியின் மத்திய குழுவுடன் கலந்துரையாடிய பின்னரே அறிவிக்கப்படும் என மலையக மக்கள் முன்னணியின் அரசியல்துறை தலைவர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹட்டனில் அமைக்கப்பட்டுள்ள மலையக மக்கள் முன்னணியின் புதிய அலுவலகத்தினை நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றிய போழுதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் இணைந்து போட்டியிடுவதற்கு தமிழ் முற்போக்கு கூட்டணி, ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோர் அழைப்பு விடுத்திருக்கின்றனர்.

எனினும், எதிர்வரும் 1ம் திகதி மலையக மக்கள் முன்னணியின் மத்திய குழுவுடன் கலந்துரையாடிய பின்னரே அது குறித்து தீர்மானிக்கப்படும்.

அத்துடன், இந்த நாடாளுமன்ற தேர் தல் மலையக மக்களுக்கு மிக முக்கியமானது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த நாடாளுமன்ற தேர்தலின் பின்னர் இலங்கையில் உள்ள 10 இலட்சம் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக்கொடுக்க தீர்மானித்துள்ளார். இதில் ஐம்பதாயிரம் மலையக இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை பெற்று கொடுக்கப்படும்.– என்றார்.

இதேவேளை, மலையக மக்கள் முன்னணி சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் வே.இராதாகிருஷ்ணனும் பதுளை மாவட்டத்தில் அரவிந்தகுமாரும் போட்டியிடுகின்றனர். (ற)

# மதுபான சாலைகளை மூடுமாறு பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

## கிரான்குளம் பிரதேசத்தில்




மட்டக்களப்பு, ஜூன் 29

மட்டக்களப்பு கிரான்குளம் பிரதேசத்தில் மதுபான சாலை களை மூடுமாறு கோரி நேற்றுக் காலை இரண்டு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குருக்கள் மடம் ஐயனார் ஆலயத்திற்கு முன்பாகவும், கிரான்குளம் விவேகானந்தா கல்வி நிலையத்திற்கு முன்பாகவும் இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிரான்குளம் திருமுருகன் ஆலயத்திற்கு சுமார் 150 மீற்றர் தூரத்திலும், கிரான்குளம் பொதுமயானத்திலிருந்து 50 மீற்றர் தூரத்தில் ஒரு மதுபான சாலை காணப்படுவதோடு விவேகானந்தா கல்வி நிலையத்திற்கு அருகில் இன்னுமொரு மதுபான சாலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் மட்டக்களப்பு கிரான்குளம் பிரதேசத்தில் மட்டும் நான்கு மதுபான சாலைகள் உள்ளன. உடலை புதைக்கும் புனித தலத்திற்கு அருகில் மதுபான சாலை வேண்டாம், கல்வி நிலையத்திற்கு அருகிலுள்ள மதுபான சாலையால் மாணவர்களின் கல்வி சீரழிகின்றது என்பன போன்ற சுலோகங்களை எழுதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நாம் திராவிடர் கட்சியின்தலைவர்கே.மோகன், மற்றும் அக்கட்சியின் செயலாளர் வி.கமலதாஸ், அதன் உப செயலாளர் ரி.கமல் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரிடத்தில் கையளிப்பதற்கான மகஜர் ஒன்று நாம் திராவிடர் கட்சியின் தலைவர் கே.மோகனிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ற)

# பாம்பால் கடியுண்டவர் நெஞ்சுவலியால் சாவு

தென்மராட்சி, ஜூன் 29

வளவு துப்பரவு செய்யும்போது பாம்பால் கடியுண்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பியவர் நெஞ்சுவலி ஏற்பட்டு சாவடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கைதடி நாவற்குளி மறவன்புலோவைச் சேர்ந்த விஸ்வர் யசிந்தகுமார் (வயது–53 ) என்பவர் கடந்த செவ்வாய்க்கிழமை பாம்பு கடித்ததாகத் தெரிவிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் கடந்த வெள்ளிக்கிழமை குணமாகி வீடு திரும்பியுள்ளார்.

நேற்றுமுன்தினம் கைதடி நுணாவிலில் உள்ள சகோதரியின் வீட்டுக்கு வந்திருந்தபோது திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டதால் சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு வரும்வழியில் அவர் உயிரிழந்தார். இந்த சாவு தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் நீதிவான் முன்னிலையில் அறிக்கை சமர்ப்பித்தனர்.

சடலத்தை யாழ் போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடாத்தி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறும் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ற–9)

# விபத்தில் இருவர் காயம்

தென்மராட்சி, ஜூன் 29

வீதியின் மறுபக்கம் செல்ல முயன்ற சைக்கிளை அதே திசையில் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இருவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம்மாலைமீசாலை வடக்கு இராமாவில் ஏ–9 வீதியில் இடம்பெற்றது.

சைக்கிளில் பயணித்த அதே இடத்தைச் சேர்ந்த கிட்டினன் கந்தசாமி (வயது–63 ) என்பவர் தனது வீட்டுக்குச் செல்வதற்காக வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில் விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ற–9 )

# மூன்று வீதிகள் திருத்த நிதி ஒதுக்கீடு

கைதடி, ஜூன் 29

கிராமத்துக்கு ஒரு மில்லியன் திட்டத்தின் கீழ் கைதடிப் பிரதேசத்திலுள்ள மூன்று வீதிகள் திருத்த வேலைக்களுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கைதடியிலுள்ள கைதடி மேற்கு, கைதடி கிழக்கு மற்றும் கைதடி தென்கிழக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள கைதடி கல்லாகம் நேவத்தை வீதி, கைதடி ஊற்றல் மயான வீதி, கைதடி வளர்மதி வீதி ஆகிய மூன்று வீதிகளுமே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த வீதிகள் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் இருந்ததனை கருத்திற் கொண்டே இவற்றை திருத்த நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் கைதடி பிரதேச பொது அமைப்புக்கள் கருத்துத் தெரிவித்துள்ளன. (ற–288)

# தொழில்நுட்ப ஆய்வுகூடம் திறப்பு

தென்மராட்சி, ஜூன் 29

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வுகூடம் இன்று மு.ப. 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

வித்தியாலய அதிபர் தா.கணேசபாலேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் கலந்து கொள்ளவுள் ளார். (ற–9)

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் அமைப்பு
வருடாந்த மாநாடு - 2015
அமெரிக்கா (U.S.A)


லயன்
E.S.P. நாகரட்ணம் PMJF


லயன்
V. மாணிக்கம் J.P


லயன்
K. விக்னேஸ் MJF


லயன்
R. ஜனக்குமார் MJF


லயன்
S. நவநாதன் MJF


லயன் சீமாட்டி
நவநாதன்
லிங்கேஸ்வரி

26.06.2015 தொடக்கம் 30.06.2015 வரை
அமெரிக்கா நாட்டின் கொனலுலு, ஹவாய் தீவில் நடைபெறும்
சர்வதேச லயன்ஸ் கழக மாநாட்டில் பங்கு பெறும்
எமது மேற்படி ஆறு அங்கத்தவர்களையும் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.
நல்லூர் லயன்ஸ் கழக அங்கத்தவர்கள்

விற்பனைக்கு
50 நாள்கள் நிரம்பிய அல்சேசன் நாய்க் குட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளும் முகவரி 3ஆம் குறுக்கு ஒழுங்கை, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 613 8735, 077 656 9693

வாடகைக்கு
காங்கேசன்துறை வீதி,
தெல்லிப்பழையில் கடை
ஒன்று உடன்
வாடகைக்குண்டு.
(53769)(9.3) தொடர்பு: 077 756 1341

தேவை
அனுபவம் வாய்ந்த கணினி அறிவுள்ள ஆண் தேவை. தகுதிச் சான்றிதழுடன் சாவகச்சேரியில் உள்ள பாலா சினிமாவிற்கு முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 6.00 மணி வரை சமுகமளிக்கவும். சாவகச்சேரியில் வசிப்பவர் விரும்பத்தக்கது.
பாலா சினிமா, சாவகச்சேரி. (61432) (45.3.6)
0779036546, 0212270039.

JCB வாடகைக்கு
போக்குவரத்துக்
கூலி
அறவிடப்பட
மாட்டது.



தொடர்பு: புதிய ஸ்ரீமோகன் நிரப்பு நிலையம்
207, கே.கே. எஸ். வீதி.
சுன்னாகம்
077 771 2482
077 593 2007 (யாழ்ப்பாணம்)

உடனடி வேலைவாய்ப்பு
வடமாகாணத்தின் முன்னணி
புத்தக மற்றும் ஸ்ரேசனறி
விற்பனை விநியோக
நிறுவனத்திற்கு
* சிட்டை எழுதுநர் ஆண்/பெண்
* விற்பனைப்பிரதிநிதி ஆண்/பெண்
* முன்னனுபவம், கணினி அறிவு உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
* இன்றும் நாளையும் நேரில் சமுகம் தரவும். (திங்கள், செவ்வாய்)
* சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
இல 212, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (16240)(7.9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



22.06.2015 இறைபதம் அடைந்த

**கந்தசாமி பிரசாந்தன்**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனு தாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின் றோம்.

பழைய மாணவர்கள் க.பொ.த. உயர்தரம்– 1997

**சென். ஜோன்ஸ் கல்லூரி**

(61427) (45.6.3) **யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி

யா/ புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலய ஆசிரியை திருமதி பிருந்தா சசிதரன் அவர்களின் பாசமிகு தாயார்

**நடராஜா மகேஸ்வரி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலைச் சமூகம்,

யா/ புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் (61428) (45.6.3)



## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 31.05.2015

சிவபதமடைந்த

**அமரர் பொன்னையா சுந்தரலிங்கம்**

எமது குடும்ப ஆணிவேரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (30.06.2015) செவ்வாய்க்கிழமை காலை 05.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தொண்டமானாறு கடலில் சேர்க்கப்படும். அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் சபிண்டீகரண நிகழ்வில் கலந்துகொண்டு அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

3 ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

**குடும்பத்தினர்.**

## 45 ஆவது நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
18.08.1992

மறைவு
16.05.2015

# சிவலிங்கம் துஷிதன்

45 நாள் இல்லை ஐயா உன் பிரிவு எமக்கெல்லாம்
கோடி ரணமாய் உள்ளதையா ஆண்டுகள் பல
கடந்தாலும் அழியாதையா உன் நினைவு வழிமேல்
விழிவைத்து காத்திருக்கின்றோம் உன் வரவிற்காய்
வாசலை நோக்கி மீண்டும் வருவாயா துஷி
எம் வீடு சேராயோ துஷி

எமது செல்வன் மறைந்தவேளை ஓடோடி வந்து நேரம் காலம் பார்க்காது உதவியோருக்கும் ஆறுதல் கூறியோருக்கும், மரணச் சடங்கின் போது சகல வழிகளிலும் உதவிக்கரம் நீட்டி யோர், அஞ்சலி செலுத்தியோர், அஞ்சலி பிரசுரங்கள் மூலமாக அஞ்சலி செய்தோர், உறவுகள் நண்பர்கள் வெளிநாட்டு உறவுகள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைக் கூறிக் கொள்கின்றோம்.

இல. 45, ராணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (56927) (45.3.7)

**குடும்பத்தினர்.**

# தொழில் தேடுவோர் விபரங்கள் பதிவு

யாழ்ப்பாணம், ஜுன் 29

சங்கானை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் உள்ள தொழில் தேடுவோர் விவரங்கள் பதியும் நடவடிக்கை அந்தந்த கிராம அலுவலர் அலுவலகங்களில் எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இடம்பெறவுள்ளது என்று சங்கானை பிரதேச செயலர் அ.சோதிநாதன் தெரிவித்துள்ளார்.

காலை 9 மணி முதல் பி.ப 4 மணிவரை நடைபெறவுள்ள மேற்படி பதிவு நடவடிக்கையில் குறித்த பகுதியில் உள்ள தொழில் தேடுவோர் கல்வித் தகைமையை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளலாம் எனவும் பதிவு செய்யப்படவுள்ள விவரங்களின்படி பொருத்தமான துறைகளில் தொழில் வாய்ப்புக்கள் பெற்றுக்கொடுக்க ஏற்பாடுகள் மேற்க்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–10)

## கண்ணீர் அஞ்சலி

நாதஸ்வர மேதை இசைப்பேரறிஞர்

கலாநிதி

**எம்.கே .பஞ்சாபிகேசன்**

அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொண்டு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கலாபூஷணம்
நாதஸ்வர வித்துவான்
**K.R சுந்தரமூர்த்தி**
இணுவில்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
29
05
1943

மறைவு
10
07
2014

திருமதி

**இந்திராணி சண்முகலிங்கம்**

(ஓய்வு பெற்ற ஆசிரியை, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)

அன்பு நிறைந்த பேரொளியாய்
இன்சொல் பேசி இனிமையுடன்
எம்மை எல்லாம் பேணிக்காத்து
வாழ்வாங்கு வாழ்ந்து
காலத்தில் மறைந்து நிற்கும்
எமது அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

"வைரவர் கடாட்சம்", பலாலி வீதி,
திருநெல்வேலி, வடக்கு,
யாழ்ப்பாணம்.

கணவர், சகோதரி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## அந்தியேட்டிக் கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்

**நடராசா இலட்சுமிப்பிள்ளை**

தோற்றம்
1929.12.24

மறைவு
2015.05.30



கடந்த 30.05.2015 அன்று இறைவனடி சேர்ந்த எமது தாயாரின் அந்தியேட்டிக் கிரியை இன்று (29.06.2015) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்த ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது தாயாரின் இறுதித்தருணத்தில் உடன் ஓடிவந்து உதவி, ஒத்தாசை புரிந்த அயலவர்களுக்கும் மரணச்செய்தி அறிந்து தொலைபேசியூடாகவும், நேரிலும் மரணச் சடங்கிலும் கலந்து எமக்கு ஆறுதலும் உதவியும் அளித்த அனைத்து உள்ளங்களுக்கும் ... நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

...
தலமன் கலட்டி, தெல்லிப்பழை.

**பிள்ளைகள்.**

## அந்தோனியார் திருநாள் சிறப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜுன் 29

பாசையூர் புனித அந்தோனியார் திருநாளின் சிறப்பு கலை நிகழ்வுகளாக நூல் வெளியீடு, நாட்டுக்கூத்து ஆற்றுகைகள் இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு பாசையூர் கலை அரங்கில் நடைபெறவுள்ளது.

கலாபூஷணம் அண்ணாவியார் மு.அருள்பிரகாசம் எழுதிய 'பண்டாரவன்னியன்' காவியநூல் வெளியீட்டு நிகழ்வு இடம்பெறும்.

வடமாகாண கல்வி பண்பாட்டு அமைச்சின் கலாசாரத் திணைக்களத்தின் பங்களிப்புடன் பங்குத் தந்தை அருட்திரு லியோ ஆம்ஸ்ரோங் தலைமையில் இடம்பெறும் நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டுத் துறை அமைச்சர் த.குருகுலராசாவும் சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட் ஆகியோர் கலந்து கொள்வர்.

அண்ணாவியார் கலாபூஷணம் அ.பாலதாஸின் 'யோசவ்வாஸ் அண்ணாவியார்' யாழ்.ரத்னா சொ. இராஜேஸ்வரியின் 'டென்மார்க் மன்னன் கேம்லெட்' அண்ணாவியார் கலாபூஷணம் மு.அருள்பிரகாசத்தின் 'காலனை வென்ற கற்பரசி' ஆகிய நாட்டுக்கூத்துக்களும் இடம்பெறவுள்ளன. (ற–135)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜுன், 29

யாழ் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் நடராஜா தெய்வேந்திரராஜா கலந்து கொள்ளவுள்ளார் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற–10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாயம் விழிப்புணர்வு பெற மாணவர் விழிப்பாக இருங்கள்

*முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூன் 29

மாணவச்செல்வங்களாகிய நீங்கள் இன்று ஆற்றிய பணி மிக மிக மேன்மையானது. சமுதாயம் விழிப்புணர்வு பெற, மாணவர்களாகிய நீங்கள் விழிப்புடன் இருந்து, செயலாற்றினால், இன்றைய சமூகச் சீரழிவுகளைத் தடுத்து நிறுத்தலாம். – இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

போதைப்பொருள், மதுபாவனைக்கெதிரான நடைபவனியொன்று, வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தால், யாழ்.றோட்டரிக் கழகம் மற்றும் வேள்ட் விஷன் அனுசரணையுடன், கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந்த நடைபவனி, சித்தன்கேணி சிவன்கோவிலில் இருந்து ஆரம்பமாகி சங்கானை பஸ் நிலையம் வரை சென்றடைந்தது. சங்கானை பஸ் நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது:–

மதுபாவனைக்கெதிரான போராட்டம் இன்று ஒருநாள் மட்டும் நடக்கக்கூடாது. இதற்கான அறிவுறுத்தல்களை மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மத்தியில் ஆழமாகப் பதிய வைப்பதற்கு, மாணவர்களின் அர்ப்பணிப்பு மிகவும் முக்கியமானது. மாணவர்கள் இடையே மது, போதை வஸ்து, புகைத்தல் போன்றன என்றுமில்லாதவாறு அண்மைய வருடங்களில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

அதனால் கொலை, களவு, கற்பழிப்பு போன்ற துர்நடத்தைகள் குறிப்பாக யாழ்.மாவட்ட மக்களிடம் உள்ளடங்கி, சகல தமிழ் மாவட்டங்களிலும் நடைபெற்று வருகின்றது. இந்தக் குற்றங்களைச் செய்பவர்களுக்காக வழக்காட வழக்கறிஞர் எவரும் முன்வரக்கூடாது. ஏனெனில், வழக்கின் மூலம் பிணையில் வெளிவரும் குற்ற வாளிகள் மீண்டும் மீண்டும் குற்றம் இழைப்பதற்கு பிணை அனுமதி உதவுகின்றது.

இன்று யாழ். மாவட்டத்திற்கு நீதிமன்ற நீதிவானாக இளஞ்செழியன் கடமையேற்றுள்ளார். இவரின் நீதி, நிர்வாகத்தின் கீழ், அவரால் இறுக்கமான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது, சமுதாயச் சீர்திருத்தத்திற்கு ஒரு வகையில் நல்ல அறி குறியாகும்.– என்றார்.

இந்த நிகழ்வில், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிவன் கோவில் பிரதமகுரு, மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி, வலி.மேற்குப் பிரதேச செயலர், வலி.மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர், வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன், கிறிஸ்தவ பாதிரிமார், அரச அலுவலர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட பல உயரதிகாரிகள் என நூற்றுக்கு மேற்பட்டோர் பவனியில் கலந்துகொண்டனர். (ற–29)

# குடியேற்ற முயற்சிகளை நிறுத்துமாறு கோரிக்கை

*முறிகண்டி கொக்காவில் பகுதி மக்களால்*



கிளிநொச்சி, ஜூன் 29

முல்லைத்தீவு முறிகண்டி கொக்காவில் பகுதியில் முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட குடியேற்ற முயற்சிகளையும், தட்டயமலை, வாவெட்டி மலைகளில் நடைபெறும் கருங்கல் அகழ்வையும் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கோரி அப்பகுதிய மக்களால் வடக்கு மாகாண உறுப்பினர் து. ரவிகரனிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மாகாணசபை உறுப்பினர் ரவி கரனால் ஏற்படுத்தப்பட்டிருந்த மக்கள் சந்திப்பின்போதே அப்பகுதி மக்களால் இவ்வாறான கோரிக்கைகள் விடுக்கப்பட்டன அத்தோடு கோரிக்கைகள் அடங்கிய மனுவொன்றும் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கையளிக்குமாறு ரவிகரனிடம் வழங்கப் பட்டது.

முல்லைத்தீவு முறிகண்டிப்பகுதியில் எக்காலத்திலும் வசித்திராத 200 குடும்பங்களை குடியமர்த்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் இது திட்டமிட்ட குடியிருப்பு எனவும் தெரிவித்தனர்.

அத்தோடு முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் வாவெட்டி, தட்டயமலைகளில் தொடரும் கருங்கல் அகழ்வால் தமது வளங்கள் அபகரிக்கப்படுவதாகவும், அந்த இரண்டு மலைகளிலும் உள்ள கருங்கற்களை வெடிவைத்து தகர்ப்பதால் அப்பகுதியில் நில அதிர்வுகள் ஏற்படுவதாகவும் இதனால் அம்மலைகளை அண்மித்த இடங்களில் உள்ள வீடுகள் வெடிப்புக்குள்ளாகுவதாகவும் அவற்றை உடனடியாக தடுத்து நிறுத்து மாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி சந்திப்பில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து. ரவிகரன், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் திரு. குருபரன், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.பஞ்சலிங்கம், கிராம அபிவிருத்தி சங்கங்களின் உறுப்பினர்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற–21)

## தொழில்தேடுவோர் பதிவுகள் சண்டிலிப்பாயிலும்

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட பகுதிகளில் உள்ள தொழில் தேடுவோர் விவரங்கள் பதியும் நடவடிக்கை அந்தந்த கிராம அலுவலர் அலுவலகங் களில் இன்று திங்கட் கிழமை இடம்பெறவுள்ள தாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி யு.யசோதா தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள மேற்படி பதிவு நடவடிக்கையில் குறித்த பகுதியில் உள்ள தொழில் தேடுவோர் பதிவுகளை மேற்கொள்ளலாம் எனவும் பதிவு செய்யப் படவுள்ள விவரங்களின்படி பொருத்தமான துறைகளில் தொழில் வாய்ப்புக்கள் பெற்றுக்கொடுக்க ஏற்பாடுகள் மேற் கொள்ளப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிருஷ்ணராஜா உதயராஜ்
B.A (Hons)
SPL-in Philosophy

2009 ஆம் ஆண்டு க.பொ.த (உ/த) பரீட்சையில் 3 A பெற்று மாவட்ட நிலை 15 இனைப் பெற்று பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கு தெரிவாகி பேராதனைப் பல்கலைக் கழகத்தின் 77 ஆவது பொதுப் பட்டமளிப்புவிழாவில் இளங் கலைமாணிப் (Secound uper Divicion) பட்டத்தினைப் பெற்ற கிருஷ்ணராஜா உதயராஜ் அவர்கள் மேன்மேலும் பல பட்டங்கள் பதவிகளைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அத்தைமார் குடும்பம் காந்தமலர் தயாபரன் இராசலிங்கம் மகேந்திரன்
மச்சான்மார் குடும்பம் யமுனா ஜெயசங்கர் லோகேஸ்வரன் மேகநேசன்
4ஆம் வட்டாரம், வேலணைகிழக்கு, வேலணை.



### ஆதன உரிமையை உறுதிப்படுத்தல்

யாழ்ப்பாண மாவட்டம் நல்லூர் பிரதேசசபை நல்லூர் உபஅலுவலக எல்லைக்குட்பட்ட வட்டாரம் 06 முருகன் வீதி, 82ஆம் இலக்க ஆதனமானது நல்லூர் பிரதேசசபை ஆதனவரிப்பதிவேட்டில் பொதுக்கிணறு எனவும் ஆதன சொந்தக்காரரது பெயர் நல்லூர் பிரதேசசபை எனவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆதனம் தொடர்பாக ஆட்சேபனைகள் இருப்பின் இன்றிலிருந்து 30 நாள்களுக்குள் உரிய ஆவணங்களுடன் எழுத்து மூலம் நல்லூர் பிரதேசசபையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.30 நாள்களுக்குள் ஆட்சேபனைகள் கிடைக்காதவிடத்து பொதுக்கிணற்றுடன் சேர்ந்துள்ள இவ்வாதனத்தை வேறுதேவைகளுக்குப் பயன்படுத்துவதற்கு நல்லூர் பிரதேசசபையால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இது தொடர்பாக எழும் பிரச்சினைகளுக்கு நல்லூர் பிரதேசசபை பொறுப்பல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தவிசாளர்
நல்லூர்பிரதேசசபை
28.06.2015

(16384)(7.9)



### விடத்தல் விநாயகர், காவாக்குளம் வைரவர் ஆலய வருடாந்த பொங்கல் விழா-2015

ஆலய அடியார்களே!

பூநகரி தம்பிராய்க் கிராமத்தில் வரலாற்று முக்கியத்துவத்தைப் பெற்ற மேற்படி ஆலயங்களின் வருடாந்த பொங்கல் விழா இன்று (29.06. 2015) திங்கட்கிழமையும் 30.06.2015 செவ்வாய்க்கிழமையும் நடை பெறவுள்ளதால் உபயகாரர்கள் பக்த அடியார்கள் அனைவரையும் தவறாது பங்கு பற்றி பொங்கல் விழாவினைச் சிறப்பிப்பதோடு, இறைவனின் இஷ்டசித்திகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் அன்புடன் அழைக் கின்றோம்.

எம்பெருமானின் பக்த அடியார்களே! இந்த விழாக்காலங்களில் ஆசாரசீலர்களாக வருகை தந்து இயன்ற சரீர உதவிகளையும், சிவத் திரவியங்களையும் உதவி மானிடப் பிறப்பின் கிடைத்தற்கரிய பேற்றினை யாவரும் பெற்றுய்ய வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

29.06.2015 திங்கட்கிழமை விடத்தல் விநாயகர் ஆலயப் பொங்கல்

30.06.2015 செவ்வாய்க்கிழமை காவாக்குளம் வைரவர் ஆலய பொங்கல் (இரவு)

அனைவரும் வருக! அருளைப் பெறுக!

(57143)(10.6.3)

ஆலய பரிபாலன சபை - விடத்தல் விநாயகர்,
காவாக்குளம் வைரவர் ஆலயம், தம்பிராய், பூநகரி.



### வீதி, பூந்தோட்ட சோலர் விளக்குகள்
Solar Street & Garden Lights




விமின் கட்டண செலவின் பயமின்றி வீதிகள், ஒழுங்கைகள், ஆலயவெளிவீதிகள், பாடசாலைகள், கலாசார மண்ட பங்கள், பொதுஇடங்கள் Hotel வெளிப்பகுதிகள் தீர்த்தடாகங்கள், கடற்கரையோரங்கள் போன்ற பல.
*15 வருடங்களுக்கு மேல் பாவனைக்காலம்.
*வயறிங் இல்லை/பராமரிப்பு இல்லை/ தானியங்கி
*Lighting time Around 8-12 Hours

யாழ்ப்பாணம் 077 312 6712
வவுனியா 077 742 5973
Hot Line: 077-3076409

MICRO PC SYSTEMS
#115C, W.A. Silva MW, Colombo 06, Sri Lanka
Tel: (94) 114 00686 | Fax: (94) 112 367 675
E-mail: mail@micropcsystems.com
facebook.com/MicroPcSystemsPvtLtd

Go Solar! Save Money! Clean Enrgy & Green Sri Lanka!





30 ஆண்டுகால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்
1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....
யாழ் கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்) Nail art
- முக அழகுக் கலை (Facials) Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- மெஹந்தி போடுதல் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,



மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

- (B) பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 05-07-2015
ஞாயிறு காலை 9.30 மணி
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 06-07-2015
திங்கள் காலை 9.30 மணி
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு கடந்த வியாழக்கிழமை உதயன் பணிமனையைப் பார்வையிட வந்தனர் கிளி. உருத்திரபுரம் மகா வித்தியாலய மாணவர்கள்.(ற-10)

## திருமலை நகரை சுத்தமாக்க நேற்றுச் சிரமதானப் பணிகள்



திருகோணமலை, ஜூன் 29

திருகோணமலை நகரத்தை சுத்தமாகவும், சுற்றுச் சூழலை நட்புறவுடன் பராமரித்தலும் என்னும் செயற்திட்டத்தின் கீழ் நேற்றுச் சிரமதானப் பணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது. கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்ணாண்டோவின் ஆலோசனையின் பேரில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகம் மாவட்ட செயலகத்துடன் இணைந்து இதனை முன்னெடுத்திருந்தது. 18 நிறுவனங்களைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் இதில் பங்கெடுத்திருந்தனர்.

இதன் ஆரம்ப நிகழ்வு கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் முன்னபாக இடம்பெற்றது. இதில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அகமட், கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி, வீதி போக்குவரத்து வீடமைப்பு அமைச்சர் ஆரியவதி கலபதி மாகாண பிரதம செயலாளர் அபயகுணவர்த்ன மற்றும் செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள் என பல அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மயான வளாகம், மீன் சந்தை. கோட்டை வீதிப் பகுதி, உட்துறைமுக கடலோரம், மற்றும் முக்கிய வீதிகளின் இருமருங்குகள் சுத்தமாக்கப்பட்டதுடன். கழிவு களும் அகற்றப்பட்டன. சாரணர்களும் முதலுதவி படையணியினரும் இவ் வேலைத் திட்டத்தில் இணைந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த முதலமைச்சர், இத்திட்டமானது இன்று திருகோணமலை மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டிருகின்றது. கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் இதனைக் கொண்டு சென்று சுத்தமான சுகாதாரமான சூழலை கிழக்கு மாகாணத்தில் ஏற்படுத்துவதற்கு அனைவரும் முன்வர வேண்டும். – என்றார். (ற)

## திண்மக்கழிவுப் பொறிமுறையை பார்வையிட்ட யாழ்.உறுப்பினர்கள்

திருகோணமலை, ஜூன் 29

கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளால் முன்னெடுக்கப்படும் திண்மக்கழிவு பொறிமுறை செயற்றிட்டங்களை யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபை அலுவலர்கள் 30 பேர் பார்வையிட்டு திரும்பியுள்ளனர்.

ஐ.நா.யுனொப்ஸ் நிறுவன அனுசரணையின் கீழ் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பொன்னுத்துரை குகநாதன் தலைமையில் சென்ற உள்ளூராட்சி அலுவலர்களே மூன்று நாள் கள தரிசிப்பையும், அனுபவ பகிர்வுகளையும் பெற்றுக்கொண்டு யாழ். திரும்பியுள்ளனர்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி சபை அலுவலர்கள் உட்பட 30பேர் கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளின் திண்மக் கழிவுப் பொறிமுறை, மீள்சுழற்சிப் பாவனை மற்றும் உக்காத கழிவுகளை நிலத்தில் புதைக்கும் திட்டம் உட்பட பல பயன்தரு கருத்திட்டங்களை நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தலைமையில் 5 தலைப்புக்களில் திண்மக்கழிவு பொறிமுறை உபாயம் தொடர்பான கலந்தாய்வு முதலில் இடம்பெற்றது.

இதன் பின்னர் மட்ட க்களப்பு மாநகரசபை மற்றும் உள்ளூராட்சி சபைகளின் திண்மக்கழிவு பொறிமுறை செயற்றிட்டம் தொடர்பான அனுபவங்களை உள்ளூராட்சி சபைகளின் பிரதி ஆணையாளர், சபைச் செயலாளர்கள் விளக்கப் படத்துடன் விவரங்களை முன்னளித்தனர்.

இதன் பின்னர் ஐ.நா.யுனொப்ஸ் நிறுவன திண்மகழிவு பொறிமுறை விசேட நிபுணர் எஸ்.சிவகுமார் தலைமையில் சிறந்த செயற்றிட்டங்கள் பார்வையிடப்பட்டு விளக்கங்கள் அளிக்கப்பட்டன.


இதற்காக மட்டக்களப்பு மாநகர சபை திருப்பெருந்துறை திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு சிறப்பு விளக்கங்கள், கருத்தாடல்கள் இடம்பெற்றன.

இதன்பின்னர் மட்டக்களப்பு நில நிரப்புத் தளம் புனரமைக்கப்பட்டு வரும் மட்டக்களப்பு கொடுவாமடு பிரதேசத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, ரூபா 140 மில்லியன் செலவில் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டம் விளக்கமளிக்கப்பட்டது.

இறுதியாக உன்னிச்சைக் குளத்திலிருந்து மட்டக்களப்பு மாவட்டம் முழுவதுமான குடிதண்ணீர்த் திட்டம் சுத்திகரித்து குளாய் மூலம் விநியோகிக்கப்படும் பிரதேசம் காண்பிக்கப்பட்டு விளக்கமளிக்கப்பட்டதைதொடர்ந்து மேற்படி செயற்றிட்டம் நிறைவுபெற்றது.

இதேவேளை, யாழ்.மாவட்டத் துக்கான திண்மகழிவு பொறிமுறை செயற்றிட்டம் இன்னும் இரண்டு மாதங்களில் எவ்வாறான நிதியீட்டத்துக்கு ஊடாக விரைவில் முன்னெடுக்கப்படும் என்பது குறித்து ஐ.நா.யுனொப்ஸ் திண்மக் கழிவு சிறப்பு நிபுணர் எஸ்.சிவகுமார் விளக்கமளித்தார். (ற)

## வெளிக்கள உத்தியோகத்தருக்கு இதுவரை மோ.சைக்கிள் இல்லை



மன்னார், ஜூன் 29

மன்னார் மாவட்ட அரச திணைக்களங்களில் பணியாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் சிலருக்கு மானிய அடிப்படையிலான மோட்டார் சைக்கிள்கள் இதுவரையில் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச திணைக்களங்களில் பணியாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மானிய அடிப்படையிலான மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் திட்டம் கடந்த அரசினால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. நாட்டின் வட பகுதிகளிலுள்ள அரச திணைக்கள வெளிக்கள உத்தியோகத்தர்கள் விசேட வங்கிக் கடன்கள் மூலம் மோட்டார் சைக்கிள்களுக்கான பணத்தைச் செலுத்தியிருந்தனர். இதன்படி பெருமள [illegible] வெளிக்கள உத்தியோகத்தர்கள் [illegible] மோட்டார் சைக்கிள்களை பெற்றுக்கொண்டுள்ள போதும் அவை இன்னும் சிலருக்கு கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களில் வெளிக்கள உத்தியோகத்தர்களாக பணியாற்றும் சுமார் 710 பேருக்கு மோட்டார் சைக்கிள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் 190 பேருக்கு இதுவரையில் மோட்டார் சைக்கிள்கள் கிடைக்கவில்லை. வாகம் பெற்றவர்களில் சுமார் 560 ற்கும் அதிகமானவர்கள் ஆண்கள் எனவும் 150 பெண் வெளிக்கள உத்தியோகத்தர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள்களுக்காக பணம் செலுத்தி சுமார் ஏழு மாதங்களுக்கு மேலாகின்ற போதும் இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாக இல்லை என வாகனம் கிடைக்காதவர்கள் சலிப்புடன் தெரிவித்துள்ளனர். (ற-10)

## ஆயுள்வேத எக்ஸ்போ நிகழ்வு அடுத்த மாதம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

தேசிய வணிகர் கழக அனுசரணையுடன் 'ஆயுள்வேத எக்ஸ்போ – 2015' நிகழ்வு அடுத்த மாதம் 3ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் திருமதி சி.துரைரட்ணம் தெரிவித்துள்ளார்.

மு.ப 9 மணி முதல் பி.ப 5 மணிவரை நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கண்காட்சி, விற்பனை, சர்வதேச ஆயுள்வேத மாநாடு ஆகியன நடைபெறவுள்ளதாகவும் குறித்த நிகழ்வு உள்நாட்டு, வெளிநாட்டு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நிகழ்வில் நடைபெறவுள்ள பாரம்பரிய ஆயுள்வேத மாநாட்டில் பங்கேற்பதற்கு பதிவு செய்யப்பட்ட தனியார் ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தருக்கு 4 ஆயிரம் ரூபாவும் அரச சேவையில் உள்ள ஆயுள் வேத உத்தியோகத்தருக்கு 3 ஆயிரத்து 500 ரூபாவும் கட்டணமாக அறவிடப்படவுள்ளது. இந்தத் துறைசார்ந்த ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரும் பங்குபற்றலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-10)


## மரண அறிவித்தல்

### ராசமணி மித்திரன்



இல.179, பாங்ஷால் வீதி, குருநகரைச் சேர்ந்த ராசமணி மித்திரன் 26.06.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ராசமணி மற்றும் கறுத்தம்மா தம்பதியரின் மகனும் ஆனந்தியின் அன்புக் கணவரும் கனிஸ்ரியா, பிறின்சியா, வீரன், கலேனா, கனோஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுறேகன், சுரேகாந் ஆகியோரின் மாமனாரும் சுமித்தின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (29.06.2015) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் புனித யாகப்பர் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின் பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக் கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.179, பாங்ஷால் வீதி, குருநகர்.

(61430)(3.6.9)


தகவல்: குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது மொபைல் சாதனங்களுக்கான iPhone 6 iOS 9 பீட்டா 1 பதிப்பை அண்மையில் அப்பிள் நிறுவனம் வெளியிட்டிருந்தது. சில புதிய அம்சங்களை உள்ளடக்கியதாக வெளியிடப்பட்ட இந்தப் பதிப்பில் உள்ள குறைபாடுகள் நீக்கப்பட்டு தற்போது iOS 9 பீட்டா 2 பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை இதன் ஒரிஜினல் பதிப்பை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் அறிமுகம் செய்வதற்கு அப்பிள் நிறுவனம் எதிர்பார்த்துள்ளது.

# iOS 9 பீட்டா 2 பதிப்பு





# நீரிழிவு நோயாளிகளுக்கு கைகொடுக்கும் புதிய கண்டுபிடிப்பு

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குறித்த கால இடைவெளியில் இன்சுலின் ஊசி போடப்படுவது அவசியமாகும். எனினும் அவசர தேவைகள் மற்றும் ஊசிகள் கிடைக்காதவிடத்து உடனடியாகப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வகையில் ஸ்மாட் பாச் (Smart Patch) எனும் புதிய இன்சுலின் பட்டி ஒன்று அமெரிக்க ஆராச்சியாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

4 செண்ரி மீற்றர்கள் நீளமான இந்தப் பட்டியில் மிகவும் நுண்ணிய ஊசிகள் காணப்படுவதுடன் இவற்றினூடாகவே இன்சுலின் செலுத்தப்படுகின் றது. மேலும் இவற்றில் குருதியில் உள்ள குளுக்கோசின் மட்டத்தை அறிந்து கொள்வதற்கு விசேட சென்சாரும் பொருத்தப்பட்டுள்ளது.

இந்தச் சென்சார் குருதியிலுள்ள குளுக்கோசின் மட்டம் மிகவும் உயர்வாக காணப்படுகின்றது என்று தெரிவித்தால், இன்சுலின் தானாகவே வெளியேறி குருதியில் கலக்கும் வகையில் Smart Patch வடிவமைக்கப்பட்டுள்ளது.

# விசிறிகள் இல்லாமல் காற்றாடி

விசிறிகள் இல்லாமல் காற்றாடி எப்படி இயங்கும்? அப்படியான ஒரு காற்றாடியை அறிமுகப்படுத்தியுள்ளது டைசன் என்கிற அமெரிக்க நிறுவனம். ஓவல் வடிவில் இருக்கும் இந்த இயந்திரத்தில் சாதாரண மின் விசிறிகளைப் போல இறக்கைகள் கிடையாது. குளிர்ந்த காற்று அல்லது வெப்பமான காற்று இரண்டையும் இந்த இயந்திரத்தின் மூலமே பெற்றுக் கொள்ள முடியும். காற்றாடி இயங்கும் சத்தம் கூடக் கேட்காது.

காற்று வீசும்போது விசிறிகளுக்கு இடையில் கைகளைக் குறுக்கே கொடுத்து விடுவோம் என்கிற பயமும் இல்லை. தானியங்கி சென்சார்கள் உடனடியாக காற்றாடி இயங்குவதை நிறுத்தி விடும்.

மேலும் பிளேடுகள் இல்லையென்பதால் பயமும் இல்லை. சுத்தம் செய்வதும் எளிது. அறையின் வெப்ப நிலைக்கு ஏற்ப தானியங்கி ஒன்– ஓவ் டைமர் உள்ளதால் நடு இரவில் எழுந்துகொள்ள வேண்டிய அவசியம் கூட இல்லை. இந்த இயந்திரத்தின் கீழ்ப் பகுதி வழியாக உட்செல்லும் காற்று எமது தெரிவுக்கு ஏற்ப குளிர்ந்த காற்றாகவோ, வெப்பக் காற்றாகவோ மேற்புறம் மூலம் வெளி வருகிறது. ஒரே திசையில் குவிந்து வீசுவது போலவோ அல் லது அறை முழுவதும் படர்ந்து வீசுவது போலவோ தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் முடியும்.




முருங்கன், நானாட்டான் பகுதி
மாணவர்களுக்கான தரம் 5 இலவசக் கருத்தரங்கு

முன்னணி பத்திரிகையான உதயன் IMSESO அமைப்புடன் இணைந்து
புலமைச்சுடர் மூலம் மன்னார் வலயக்கல்வி அலுவலகத்தின்
அனுமதியுடன் நடத்தும் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

இடம் : மோட்டக்கடை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
காலம் : 01.07.2015 புதன்கிழமை காலை 8.30 மணி

வளவாளர்கள் : வவுனியா மாவட்ட முன்னணி ஆசிரியர்
என்.எஸ்.தீபன்
மன்னார் மாவட்ட முன்னணி ஆசிரியர்
ஜி.கயன்
கிளிநொச்சி மாவட்ட முன்னணி ஆசிரியர்
என்.சுரேஸ்

மேலதிக தொடர்புகளிற்கு :
0778874221
0714273035
(கருத்தரங்கு இணைப்பாளர்கள்)

ஊடக அனுசரணை :
தொலைக்காட்சி வசந்தம் TV
பத்திரிகை சுடர் ஒளி

அனைத்து மாணவர்களையும் பங்குபற்றி பயன்பெறுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

இணை அனுசரணை : ஒளிஅரசி
பிரதான ஏற்பாடு : 5 புலமைச்சுடர்
பிரதான அனுசரணை : உதயன் தமிழ் தேசிய நாளிதழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே நாளில் 3 நாடுகளில் தாக்குதல்






பரிஸ்,ஜூன் 29
ஒரே நாளில் டுனிசியா, குவைத், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் நேற்று முன்தினம் நடத்தப் பட்ட தாக்குதல்கள் ஐ.எஸ். அமைப்பின் சதித்திட்டமாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸின் லியான் நகரில் உள்ள இரசாயனத் தொழிற்சாலை ஒன்றில் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் பலர் காயமடைந்தனர். இது தொடர்பாக பொலிஸார் ஒருவரைக் கைது செய்துள்ளனர். அவரது கையில் ஐ.எஸ் கொடி இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இதேபோன்று டுனிசியா நாட்டின் கடற்கரையில் தீவிரவாதி ஒருவர் நடத்திய தாக்குதலில் இதுவரை 37 பேர் உயிரிழந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. பின்னர் பொலிஸார் தாக்குதல் நடத்தி அவரைச் சுட்டுக்கொன்றுள்ளனர்.

இறுதியாக குவைத்தின் மசூதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 25 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 200 இற்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மசூதியில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு மட்டுமே ஐ.எஸ் தீவிர வாதிகள் பொறுப்பேற்றுள்ளனர். இந்த நிலையில் இந்த மூன்று தாக்குதல்களும் ஐ.எஸ். அமைப்பினர் திட்டமிட்டு நடத்தியதாக இருக்கலாம் என்று பலர் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர்தான் தங்களைப் பின்பற்றுவர்களிடம் றம்ழான் மாதத்தை அழிவின் மாதமாக மாற்ற வேண்டும் என்று ஐ.எஸ். அமைப்பினர் தெரிவித்திருந்தனர் என்றும் கூறப்படுகிறது. (ஐ)

## வத்திகான் ஒப்பந்தம் கையெழுத்தானது



வத்திகான்,ஜூன் 29
பாலஸ்தீனத்தை தனி நாடாக அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கும் தனது நடவடிக்கையை உறுதி செய்யும் நடவடிக்கையாக பாலஸ் தீன அரசுடன்முறையானஒப்பந்தம்ஒன்றில் வத்திகான் கையொப்பமிட்டுள்ளது. தனது இந்த நடவடிக்கை இஸ்ரேலியர்களுக்கும் பாலஸ்தீனர்களுக்கும் இடையிலான சமாதானத்தை ஊக்குவிக்கும் என்று வத்திக்கான் தெரிவித்துள்ளது.

பாலஸ்தீன அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசங்களில் கத்தோலிக்க தேவாலயச் செயற்பாடுகளை இந்த ஒப்பந்தம் மேம்படுத்தும். இந்த நடவடிக்கை அவசரமான ஒன்று என்று வர்ணித்திருக்கும் இஸ்ரேலிய அரசு, வத்திக்கானுடனான தனது உறவை இது பாதிக்கும் என்றும் எச்சரித்துள்ளது.

ஆனால் இந்த ஒப்பந்தத்தை வரவேற்பதாக பாலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பாலஸ்தீன அரசை 2013 ஆம் ஆண்டு வத்திகான் முதன்முதலாக அங்கீகரிப்பதாக அறிவித்தது. அந்த அங்கீகாரத்தை கடந்தமாதம் முறையான ஒப்பந்தத்தின் மூலம் உறுதி செய்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்தியாவில் 44 கோடி மக்கள் வறுமையில்

புதுடில்லி,ஜூன் 29
இந்தியாவில் 44 கோடிப் பேர் வறுமைக்கோட்டுக்கு கீழ் இருப்பதாக யுனிசெப் இன் ஆய்வு அறிக்கை தெரிவித்துள்ளது. உலகம் முழுவதும் 160 கோடி மக்கள் வறுமையில் சிக்கி வாடுகின்றனர் எனவும் யுனிசெப் வெளியிட்ட ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள ஆய்வறிக்கையில், உலகம் முழுவதும் 160 கோடி மக்கள் வறுமையின் பிடியில் சிக்கித் தவித்து வருகின்றனர். தெற்கு ஆசிய நாடுகளில் ஆப்கானிஸ்தானில் தான், வறுமையில் வாடுவோரின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. அதற்கு அடுத்த இடத்தில் இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளம், பூட்டான் மற்றும் இலங்கை ஆகியவை உள்ளன.

இந்தியாவில் குறிப்பாக பீகார், ஜார்க்கண்ட், மத்திய பிரதேசம், உத்தரப்பிரதேசம் சட்டீஸ்கர், ஒடிசா, ராஜஸ்தான், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் 44 கோடி பேர் வறுமையின் பிடியில் வசிக்கின்றனர். தெற்கு ஆசியாவிலேயே மிகவும் ஏழ்மையான பகுதி பீகார் மாநிலம் என்றும் தெரியவந்துள்ளது.

மேலும், இந்தியாவில் கேரளா, தமிழ்நாடு, இமாச்சல் பிரதேசம், பஞ்சாப், மிசோராம், கோவா மற்றும் டில்லி ஆகிய மாநிலங் களில் வறுமையில் வாடுவோரின் தொகை குறைவாக இருப்பதாகவும் தெரிய வந்துள்ளது. (ஐ)

## தீவிரவாதிகளின் தாக்குதல் முறியடிப்பு



லண்டன், ஜூன் 29
இங்கிலாந்தின் தலைநகர் லண்டனில் மொர்டன் பகுதியில் இராணுவத்தின் அணிவகுப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் தற்கொலைத்தாக்குதல் நடத்த ஐ.எஸ். தீவிரவாதிகள் திட்டமிட்டிருந்தனர். அந்தத் தகவல் இங்கிலாந்து உளவுத் துறைக்குக் கிடைத்தது.

அதனைத் தொடர்ந்து பொலி ஸார் அதி தீவிரமாகச் செயற்பட்டு ஜுனைரு உசேன் என்ற தற்கொலைப் படைத் தீவிரவாதியை கைது செய்தனர். பிர்மிங் காமை சேர்ந்தவர் ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தை சேர்ந்த அவரிடம் பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளனர்.

ஈராக் மற்றும் ஆப்கானிஸ் தானில் அங்குள்ள இராணுவ வீரர்கள் பணிபுரிந்த போது அங்கு தீவிரவாதிகளையும், பொது மக்களையும் கொன்று குவித்தனர். தற்போது இங்கு திரும்பி வந்துள் ளனர்.

அவர்களைப் பழி வாங்கத் திட்டமிட்டோம். இராணுவ அணிவகுப்பின் போது எனது உடலில் குண்டுகளைக் கட்டி கூட்டத்துக்குள் குதித்து வெடிக்கச் செய்து அதன் மூலம் அவர்களை கொல்லத் திட்டமிட்டேன். அதற்கான உத்தரவை சிரியாவில் உள்ள ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தலைவர்கள் எனக்கு பிறப்பித்து இருந்தனர் என விசாரணையில் அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் இந்த அதிரடி நடவடிக்கையின் மூலம் இராணுவ அணி வகுப்பில் நடைபெற இருந்த தற்கொலைத் தாக்குதல் முறியடிக்கப்பட்டது. (ஐ)

## அல்-பாப் தாக்குதலில் 50 பேர் படு கொலை

சோமாலியாவில் அல் –பாப் நடத்திய தாக்குதலில் குறைந்தது 50 பேர் கொல்லப்பட்டிருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

சோமாலியாவில் உள்ள ஆபிரிக்க ஒன்றியத்தின் இராணுவ முகாம் மீது கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட அந்தத் தாக்குதல் சம்பவத்தை ஐ.நா சபையின் செயலாளர் நாயகம் பான் கீ– மூன் கண்டித்துள்ளார். இந்தத் தாக்குதலில் உயிரிழந்த புருண்டி நாட்டின் அமைதிப் படையினருக்கு அறிக்கை ஒன்றில் அவர் அஞ்சலி தெரிவித்துள்ளார். அதில் உயிரிழந்தவர்களுக்கு ஐரோப்பிய ஒன்றியமும் தமது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளது.



சோமாலியத்தலைநகர்மொகாடிவுடன் பாய்டோ நகரை இணைக்கும் சாலை ஒன்றில் அமைந்துள்ள இந்த இராணுவத் தளத்தின் மீது இஸ்லாமியக்குழுவான அல் –பாப் மேற் கொண்ட தாக்குதலில் குறைந்தது 50 படையினர் உயிரிழந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

முஹமது நபியின் கௌரவத்துக்கு இழுக்குஏற்படுத்தியமை ஒன்றுக்காக பழிவாங்கும் நோக்கிலேயே இந்தத் தாக்குதலை தாம் மேற் கொண டதாக அந்த குழு தெரிவித்துள்ளது. (ஐ)

## குவைத்தில் துக்கதினம்





குவைத், ஜூன் 29
குவைத் பள்ளிவாசல் ஒன்றில் நடை பெற்ற தாக்குதலில் 27 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

குவைத்தில் ஷியா முஸ்லிம் பள்ளிவாசலில் தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலில் தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 27 பேர் கொல்லப்பட்டனர். அதற்காக ஒரு நாள் துக்கதினம் அங்கு கடைப் பிடிக்கப்பட்டது.

அந்தத் தாக்குதலில் இருநூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். குவைத்தில் ஷியா பள்ளிவாசல் மீது மேற்கொள்ளப்பட்ட முதல் தாக்குதல் இதுவாகும்.

இந்தத்தாக்குதலை தாமே மேற் கொண்டதாக இஸ்லாமிய அரசு தீவிரவாதக் குழு தெரிவித்திருக்கிறது. ஷியா முஸ்லிம்கள் மத விரோதிகள் என இந்தக் குழு கருதுகிறது.

தாக்குதல் அச்சம் காரணமாக நாட்டில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 600 நாய்கள் தற்கொலை

லண்டன்,ஜுன் 29
பிரிட்டனில் 600 நாய்கள் தற்கொலைக்கு முயன்றுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஸ்கொட்லாந்தின் டன்பார்ட்னஷிரில் உள்ள பேய் நடமாடும் தற்கொலைப் பாலம் ஒன்று உள்ளது. அந்தப் பாலத்தில் இருந்து நாய்கள் குதித்துள்ளன, அதில் 50 நாய்கள் உயிரிழந்துள்ளன.
மேலும், மீட்கப்பட்ட நாய்களை பரிசோதித்த கால்நடை மனோதத்துவ மருத்துவர்கள், நாய்களுக்கு எந்தவித நோயும் இல்லை, நல்ல உடல்நலம் மற்றும் சாதாரண மன நிலையில் இருந்தன. நாய்கள் அனைத்தும், நீண்ட உடலமைப்புடன் ஒரே இனத்தைச் சேர்ந்தவை என்று கூறியுள்ளனர்.
சம்பவம் நடந்த பகுதியில், 19 ஆம் நூற்றாண்டை சேர்ந்த ஓவர்டன் மாளிகை உள்ளது.
அதில் வசித்த பெண்ணின் ஆவி அந்தப் பகுதியில் உலவுவதாகவும், நாய்களின் தற்கொலை முயற்சிக்கு அந்த ஆவியே காரணம் என்றும் அந்தப்பகுதி மக்கள் கூறிவருகின்றனர்.
தற்போது, இந்தச் செய்தி பிரிட்டன் மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)






அமெரிக்காவின் அனைத்து மாகாணங்களிலும் ஓரினச்சேர்க்கை திருமணத்துக்கு சட்டபூர்வமாக அனுமதியளிக்கப்படுகிறது என்று உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளதை அடுத்து அந்த நாட்டு மக்கள் அதனை வெகு விமரிசையாகக் கொண்டாடி வருகின்றனர். (ஐ)

# பூங்காவில் தீ விபத்து

## 516 பேர் காயம்

தைபே, ஜுன் 29
தைவான் நாட்டின் தலைநகர் நியூ தைபேயில் வாட்டர் பார்க் என்ற கேளிக்கை பூங்காவில் கலர் பிளே ஆசியா என்ற கேளிக்கை கொண்டாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
அ[illegible]ந விழாவின்போது நடனம், இ[illegible] உள்ளிட்ட கேளிக்கை நிகழ்ச்சிகள் நடைபெறும். அதில் இளைஞர்களும், இளம் பெண்களும் ஒ[illegible]ர் மீது ஒருவர் வண்ணப் பொடிக[illegible] வீசி விளையாடுவார்கள். அ[illegible] சுமார் ஆயிரத்துக்கும் மேற்ப[illegible]ர்கள் கலந்து கொண்டனர்.
அ[illegible] போது யாரும் எதிர்பாராத வி[illegible]க வண்ணப் பொடிகளில் இ[illegible]து பயங்கரமான தீச்சுவாலை க[illegible]ளியேறி பூங்காவைச் சூழ்ந்து கொ[illegible]ண்டது. அதனால் அங்கு ப[illegible]மும், பரபரப்பும் ஏற்பட்டது.
உ[illegible] அங்கு வர வழைக்கப்பட்ட தீ[illegible]பு படையினர் தீயை அ[illegible]த்தனர். ஆனால் தீவிபத்தில் 51[illegible]ர் காயம் அடைந்தனர்.
அ[illegible]ளில் 194 பேரின் நிலைமை க[illegible]லக்கிடமாக உள்ளது. 8 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
காயம் அடைந்த அனைவரும் 20 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது குறித்து பூங்கா பொறுப்பாளர் லு ஷாங்ஜி மற்றும் 2 ஊழியர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். கவனக் குறைவாக இருந்ததாக அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஐ)





## புடினுடன் ஒபாமா ஆலோசனை

வொஷிங்டன்,ஜுன் 29
ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் அபாயகரமான செயற்பாடுகள் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மற்றும் ரஷ்ய ஜனாதிபதி புடின் ஆகியோர் தொலைபேசியில் ஆலோசனை நடத்தியுள்ளனர்.
ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியதாக வெள்ளை மாளிகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அப்போது, ஐ.எஸ். பயங்கரவாதிகள் ஆக்கிரமிப்பால் சிரியாவில் நிலவும் சூழல், உக்ரைன், சிரியா மற்றும் ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தம், மத்திய கிழக்கு நாடுகளின் நிலைவரம், நேட்டோ படை களைக் குறைப்பது உள்ளிட்டவை குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



## ஈரானில் புதிய சட்டம்

டேஹ்ரான்,ஜுன் 29
தத்து எடுத்து வளர்த்த மகளை தந்தை திருமணம் செய்யலாம் என்று ஈரானில் புதிய சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.
ஈரானில் சிறுவர்கள் திருமணம் அதிகரித்து வருகின்ற நிலையில், அவர்களைப் பாதுகாப்பதற்காக புதிய சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. அதில் தத்தெடுத்து வளர்க்கும் மகளை வளர்ப்புத் தந்தையே திருமணம் செய்து கொள்ளலாம் என்ற பிரிவும் உள்ளது.
ஆனால் அந்தப் பெண் அவரை விட 13 வயது குறைந்த வளாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையும் விதிக் கப்பட்டுள்ளது. இந்தச் சட்டப் பிரேரணை நாடாளுமன்றில் கொண்டு வரப்பட்டது. அதற்கு ஆதரவாக உறுப்பினர்கள் வாக்களித்தனர்.
எனவே அந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இருந்தாலும் ஈரானில் பாதுகாவலர் சபையின் ஒப்புதலுக்கு அந்தப் பிரேரணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
ஈரானில் கடந்த 2010 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 10 முதல் 14 வயதுக்குட்பட்ட 42 ஆயிரம் சிறுவர்களுக்குத் திருமணம் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நபிகளை இழிவுப்படுத்திய 9 பேருக்கு சாவுத் தண்டனை

அபுஜா,ஜுன் 29
நைஜீரியா நாட்டில் இஸ்லாமிய இறைத் தூதரான முகமது நபிகளை இழிவுபடுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட 9 நபர்களுக்கு அந்த நாட்டின் நீதிமன்றம் சாவுத் தண்டனை விதித்து அதிரடியாகத் தீர்ப்பளித்துள்ளது.
இஸ்லாமிய மதம் பெரும்பான்மையாக உள்ள கானோ நகரில், சில மாதங்களுக்கு முன்னர் இஸ்லாமிய இறை தூதரான முகமது நபிகளை அவமதிக்கும் செயலில் சிலர் ஈடுபட்டதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.
அந்த முறைப்பாட்டைத் தொடர்ந்து, அ[illegible]த விவகாரத்தில் தொடர்புடைய ஒரு பெண் உட்பட 9 பேரை பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.
9 பேரின் மீது சுமத்தப்பட்ட குற்றங்களை அவர்கள் ஒப்புக்கொண்டதாகக் கூறப்படுகிறது. எனினும், அந்த முறைப்பாடு தொடர்பான விரிவான தகவலை பொலிஸார் வெளியிடவில்லை.
இந்த வழக்குத் தொடர்பான விசாரணை நேற்று ரகசிய இடத்தில் நீதிபதிகளின் முன்னிலையில் நடைபெற்றது.
நபர்களின் மீதுள்ள குற்றம் நிரூபிக்கப்பட்டதால், 9 பேருக்கும் சாவுத் தண்டனை விதிப்பதாக நீதிபதி உத்தரவிட்டுள்ளதாக கானோ நகர பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.
இந்த சாவுத் தண்டனை தொடர்பாக குற்றவாளிகள் மேன் முறையீடு செய்வார்கள் என்பது குறித்து எந்தத் தகவலும் வெளியாகவில்லை.
நைஜீரியாவில், குற்றவியல் நீதிமன்றங்கள் செயற்பட்டு வந்தாலும், மதம் தொடர்பான அரசு சார்ந்த நீதிமன்றங்களும் இஸ்லாமியத்துக்கு எதிராகச் செயற்படுபவர்களைத் தண்டித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தீவிரவாதிகள் மீண்டும் தாக்குதல் நடத்தக்கூடும்

### பிரான்ஸ் பிரதமர் எச்சரிக்கை

பாரிஸ்,ஜுன் 29
பிரான்ஸ் நாட்டில் தீவிரவாதிகள் மீண்டும் தாக்குதல் நடத்தக்கூடும் என்று அந்த நாட்டின் பிரதமர் மானுவல் வால்ஸ் எச்சரித்துள்ளார்.
பிரான்சின் லியான் நகர் அருகே செயின்ட்–குவென்டின்–பல்லேவியர் பகுதியில் இரசாயனத் தொழிற்சாலையில் நேற்று முன்தினம் தீவிரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டது.
அதில் ஒருவர் தலை துண்டித்து கொல்லப்பட்டார். மேலும் பலர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதல் தொடர்பாக ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.
இந்தத் தாக்குதல் தொடர்பாக பிரான்ஸ் பிரதமர் மானு வல் வால்ஸ் கூறிய தாவது:– இந்தத் தாக்குதல் பிரான் ஸில் ஒருவிதமான பதற்றத்தை ஏற்படுத்தி விட்டது.
மக்கள் தீவிரவாதத் தாக்குதல் அச்சத்தின் கீழ் பல ஆண்டுகள் வாழ்வது என்பது மிகவும் கடினமான ஒன்று. தீவிரவாதிகள் மீண்டும் தாக்குதல் நடத்த வாய்ப்புக்கள் உள்ளன என்று தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ். வேம்படி மகளிர் கல்லூரி பாடசாலைத் தினத்தையும், நிறுவுனர் நாளையும் முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

# யாழ்ப்பாணப் பெண்கல்வி வளர்ச்சியும்,

## அதற்கு உரமூட்டிய வேம்படி மகளிர் கல்லூரியும்


பழைய மாணவி,
திருமதி. த. தயாபரன்
(ஆசிரியை)
*யாழ் .கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்.*


◆ அறிமுகம் :–
கல்வி என்பது உடலிலிருந்தும் உள்ளத்திலிருந்தும், ஆன்மாவிலிருந்தும் நல்லவற்றை வெளியே கொண்டு வருவதற்கு உதவுகின்றது என மகாத்மாகாந்தி கல்விக்கு விளக்க மளித்துள்ளார். உடல், அறிவு, உணர்ச்சி என்பவற்றை சீரான முறையில் இயங்கச் செய்து தனது குடும்பம், சமூகம் என்பவற்றை முன்னேற்ற கல்வியறிவு இன்றியமையாததாகும். இக் கல்வியானது புதிய விழுமியம் உடையதாகவும், மனிதத்துவத்தை வளப்பதாகவும், முழு மனிதனை தோற்றுவிப்பதாகவும் அமைய வேண்டும். மனிதனை மனிதப் பண்புள்ளவனாக மாற்றுகின்ற கல்வியானது ஆண், பெண் இருபாலாருக்கும் அவசியமானதாகும். நாட்டிற்கு நற்பிரஜைகளை உருவாக்கும் பரந்த நோக்குடையதாக யாழ்ப்பாணக் கல்வி மரபு பெண்கல்விக்கு முக்கிய இடத்தை வழங்கி வருகின்றது.

◆ வரலாற்று நோக்கில் யாழ்ப்பாணப் பெண்கல்வி :–
இலங்கையின் கல்விப் பாரம்பரியத்தை பின்வரும் காலகட்டங்களாக பொதுவாக நோக்க முடிகின்றது.
◆ பூர்வீககால கல்வி நிலைமை
◆ ஐரோப்பியர் ஆட்சிக்கால கல்வி நிலைமை
◆ சுதந்திர இலங்கையின் கல்வி நிலைமை

◆ பூர்வீககால பெண்கல்வி :–
இந்து மரபுவழிப்பட்ட யாழ்ப்பாணச் சமூகத்திலே கல்வியின் நோக்கு ஆன்மீகமாகவே காணப்பட்டது. இறுக்கமாகப் பேணப்பட்ட நிலமானிய அமைப்பு மேல் சாதி ஆண்களுக்கே கல்விக்கு முன்னுரிமையளித்தது. பெண்ணானவள் தந்தை, கணவன், பிள்ளைகளை சார்ந்தவளாய் குடும்பம் சார் அறிவை மட்டுமே பெற்றிருந்தாள். மக்கட்பண்பு, ஒழுக்கப்பண்பு, முருகியல் பண்பு, சமையற்கலையில் அறிவைப் பெற்றிருந்தார்கள் என நம்பப்பட்டது. திண்ணைப் பள்ளிகளின் உருவாக்கம் பெண்கள் கேள்வி ஞானத்தால் சில விடயங்களை அறிய வழிவகுத்தது.

◆ ஐரோப்பியர்கால பெண்கல்வி நிலைமைகள் :–
போர்த்துக்கேயர் கல்விச் சமத்துவத்தை ஏற்றுக்கொண்டவராக காணப்பட்டனர். கத்தோலிக்க மிசனறியினர் ஆலயங்கள் சார்ந்து பாடசாலையை அமைத்த பொழுது ஆண், பெண் வேறுபாடு காட்டப்படவில்லை. யாழ்ப்பாணத்தின் கிழக்குக் கரையில் டொமினிக்கன் சபையினர் நிறுவிய கன்னியாஸ்திரி மடம் பெண் கல்விக்கான முதலாவது கல்விச்சாலையாகும். எனினும் பாரம்பரிய கல்வி மரபு முழுமையாகப் புறக்கணிக்கப் படாமை, அந்நிய சூழலில் பெண் பிள்ளைகளை கல்விகற்க அனுப் புவதில் அக்கறை காட்டாமையால் போர்த்துக்கேயர்கால பெண்கல்வி எதிர்பார்த்த வளர்ச்சிப்போக்கை எட்டவில்லை.
ஒல்லாந்தர் ஆட்சியில் ஆரம்பக் கல்வியைக் கட்டாயப்படுத்தினர். 1934 இல் யாழ்ப்பாணத்தில் இயங்கிய ஆதரவற்றோர் பாடசாலையில் 21 பெண்களும் 1937 இல் 47 பெண்களும் தொடர்ந்து இவ் எண்ணிக்கை அதிகரித்துச் சென்றுள்ளது.
பிரித்தானியர் காலத்தில் பெண் கல்வி நிலைமைகள் முனைப்புப்பெற்றிருந்தன.
◆ 1934 இல் 5 பெண்களுக்கு திருமதி. பேர்சிவல் யாழ் நகரில் கல்வி அளித்தார். பின் வேம்படி வளவில் 1838 இல் பெண்களுக்கு பாடசாலை அமைக்கப்பட்டது.
◆ 1865 இல் விடுதியுடன் கூடிய உடுவில் கிராமத்தில் பாடசாலை ஒன்றினை நிறுவினர்.
◆ 1875 இல் று.சு வின்ஸ்ரனும் பாரியாரும் இணைந்து பருத்தித்துறை உயர்விடுதிப் பெண் பாடசாலையை அமைத்தனர்.
◆ வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, உடுப்பிட்டி பெண் விடுதிப் பாடசாலை என்பன பெண்கல்வியின் வளர்ச்சிக்கு பெரிதும் பங்களிப்புச் செய்கின்றன.

◆ யாழ்ப்பாணப் பெண்கல்வியில் சுதேசிகளின் பங்களிப்பு :–
சைவ மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக முன்னின்று உழைத்தவர்களுள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சேர்.பொன்.இராமநாதன், திருமதி. விசாலாட்சி அம்மாள் சிவகுரு நாதர், வைத்திய கலாநிதி க. சபாபதி ஆகியோர் முறையே சைவப்பிரகாச வித்தியாசாலை, இராமநாதன் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளை உருவாக்கியுள்ளனர்.
◆ சுதந்திர இலங்கையில் பெண் கல்வி :–
இலவசக்கல்வி, தாய்மொழி வழிக் கல்வி, கிராமங்களில் மத்திய கல்லூரி களின் தோற்றம், பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டமை யாழ். சமூகப் பெண்கல்விச் சிந்தனையில் ஏற்பட்ட வரவேற்கத்தக்க மாற்றங்கள் காரணமாக பெண் கல்வி நிலைமைகள் துரித வளர்ச்சி கண்டன.
இதன் பயனாக ஆரம்ப, இடைநிலைக்கல்வி கற்கும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்தது. ஆண்களுக்கு சமமாக உயர்கல்வி வாய்ப்புக்கள் அதிகரித்தன. பல்கலைக்கழக அனுமதியிலும் ஆண்களைவிட பெண்கள் அதிகளவில் காணப்படுகின்றனர்.
கலை, மனிதப் பண்பியல் துறைகளில் மட்டுமன்றி பொறியியல், மருத்துவத் துறையிலும் பெண்கள் தொகை அதிகரித்துள்ளது. எனினும் உயர் பதவிகளைப் பெறுவதில் பால்நிலை வேறுபாடுகள் இன்னமும் காணப்படவே செய்கின்றன.

◆ யாழ்ப்பாணப் பெண்கல்விக்கு உரமூட்டிய வேம்படியின் தோற்றமும் வளர்ச்சியும் :–
◆ வேம்படியின் பிதாமகர் பேர்சிவலின் பணிகள் :–
மதம் பரப்பும் நோக்குடன் பிரித்தானியாவிலிருந்து இலங்கை வந்த மிஷனரிமார்களுள் அருட்தந்தை டாக்டர் பீற்றர் பேர்சிவல் ஒருவராவார்.
இவர் 1926 இல் தனது 23 ஆவது வயதில் வெஸ்லியன் மிஷனரியில் இணைந்து யாழ் குடாநாட்டில் கல்வி, மருத்துவம், சமூகப்பணிகளை செவ்வனே ஆற்றினார்.
1830 இல் சுவிசேஷப் பணிக்காக கல்கத்தா சென்ற பேர்சிவல் டாக்டர் என்பவர் மூலம் கல்வி நடவடிக்கையில் பல அனுபவங்களைப் பெற்று மீண்டும் 1832 இல் இலங்கைக்கு வந்தார்.
1834 இல் தனது பணிகளைத் தொடர்ந்த இவர் யாழ்ப்பாண மெதடிஸ் ஆரம்பப் பள்ளியை உயர் கல்வி கற்கும் பள்ளியாக உருவாக்கினார். இதுவே யாழ். மத்திய கல்லூரி மற்றும் பருத்தித்துறை மெதடிஸ்ட் மகளிர் கல்லூரி என்பன ஆகும்.

◆ மத்திய கல்லூரி அதிபராக இருந்த காலத்தில் யாழ் மாவட்ட கல்வி நடவடிக்கையை ஒழுங்கு படுத்தினார்.
◆ ஆசிரியர்களுக்கு பயிற்சியும், கிராமிய ஆரம்பப் பள்ளிகளை நிறுவியும் பணியாற்றினார்.
◆ பெண்களின் கல்வி உரிமையை விட்டுக்கொடுக்க விரும்பாத பேர்சிவல் 1834 இல் 5 பெண் களுடன் மிஷன் வீட்டில் வைத்து கல்வியூட்டியும் 1837 இல் பெண்களுக்கென ஒரு மகளிர் கல்லூரியையும் ஆரம்பித்தார்.
◆ தமிழ்மொழிக்கும் அளப்பரிய பணியை ஆற்றிய பேர்சிவல் யாழ்ப்பாணப் பெண்கல்விக்கு உரமூட்டியவர்களுள் மகத்தானவர் ஆவார்.

◆ வேம்படியின் தோற்றமும் வளர்ச்சியும் :–
பெண்கள் கல்வி கற்பது பெண்மைக்கு இழுக்கு என்ற மனப்பாங்கு நிலைபெற்றிருந்த காலத்தில் பேச்சிவலும் பாரியாரும் தமது அயராத முயற்சியால் பெண்களுக்கென தனியான உயர்கல்வி கற்க யாழ். வேம்படி மகளிர் கல்லூரியை 1938 யூன் 29 ம் திகதி உருவாக்கினார்.
பெண்களின் உள்ளார்ந்த ஆற்றலை வெளிக்கொணரச் செய்ய வரப்பிரசாதமாக அமைந்த இக்கல் லூரி மருத்துவம், கல்வித்துறை, பொதுத்துறை, கணக்கியல், சட்டம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் தமிழ் விற்பன்னர்களை உருவாக்கி வருகின்றது.
ஆரம்ப காலங்களில் (1838 1949) ஆங்கிலப் பெண்மணிகளை அதிபர்களாகக் கொண்டிருந்த இப்பாடசாலை இன்று சுதேச அதிபர்களின் நிர்வாகத்திறமையால் புதுப் பொலிவு பெற்று 2000 த்திற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட தேசிய பாடசாலையாகத் திகழ்கின்றது.
1995 இன் இடப்பெயர்வால் உருக்குலைந்த இப்பாடசாலையை மெருகூட்டிய பெருமை திருமதி. க. பொன்னம்பலம் அவர்களையே சாரும். பௌதிக வள அபிவிருத்தி, மாணவர்களின் படிப்படியான அதிகரிப்பு, வினைத்திறனான செயலாற்றுகைகள்,
விளைதிறன்மிக்க வெளியீடுகளும், விளைவுகளும் என்பன பெண் கல்வியின் உன்னத நிலையையே எடுத்துக்காட்டுகின்றன.
பல தனியார் பாடசாலைகளை 1961 இல் அரசு பொறுப்பேற்றமையால் அவற்றின் தரம், தராதரம் என்பன கேள்விக்குறியாகியுள்ள போதிலும் வேம்படி தனது தனித்துவமான பாணியில் தொடர்ந்தும் பெரு வளர்ச்சி கண்டு வருகின்றது. பொதுப் பரீட்சைகளில் மிக உயர்வான பெறுபேறுகளையும், இணைப்பாடவிதான செயற்பாடுகளில் தேசிய நிலையில் முன்னணிவகிப்பதையும் காணமுடிகின்றது.
ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சையில் உயர் சித்தி பெறும் மீத்திறன் மாணவரை உள்வாங்கும் இப்பாடசாலை மருத்துவம், பொறியியல், முகாமைத்துவம், சித்த மருத்துவம், சட்டம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், விவசாயம், கலை, தாதியல் போன்ற பல்வேறு துறைகளுக்கும் வருடாவருடம் பல மாணவர்களைத் தொடர்ந்தும் அனுமதி பெறவைப்பது குறிப்பிடத்தக்கது.

◆ நிறைவுரை :–
மேற்கூறப்பட்ட விடயங்கள் பெண் கல்வியின் வளர்ச்சிப்போக்கை எடுத்துக்காட்டுவதாக அமைகின்ற போதிலும் இன்றைய யாழ்ப்பாணக் கலாசாரத்தில் சமூகச் சீர்கேடுகளான பாலியல் துஷ்பிரயோகம், போதைவஸ்துப்பாவனை, கொலைகள், தற்கொலைகள் போன்றவற்றிலிருந்து பெண்களைப் பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பும் கடமையும் ஆசிரியர்களுக்கு பெரும் சவாலாகவே உள்ளது. எனவே யாழ்ப்பாண பண்பாட்டையும், விழுமியங்களையும் சிதைத்து விடாது தொடர்ந்து பேணும் வகையில் அறிவுசார் சமூகம் விழிப்புணர்வு பெற்று செயலாற்ற வேண்டியது காலத்தின் தேவையாகின்றது. ஆரோக்கியமான செயற்பாடுகள் மூலமே ஆரோக்கியமான சந்ததியினரை உருவாக்க முடியும். இதற்கு அடித்தள மிடுவதாக தொடர்ந்தும் பாடசாலைக் கல்வி அமைய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போக்குவரத்தும் பொலிஸாரும்

**யாழ்.** ஆஸ்பத்திரி வீதியில் நோயாளர்களைப் பார்வையிட வருபவர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

தற்போது நோயாளரைப் பார்வையிடுவதற்குச் செல்பவர்களுக்கென யாழ்.மாநகரசபையால் ஒரு நிழற்குடை அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதனுள் மனிதத்தன்மையற்றவர்களால் மோட்டார் சைக்கிள்கள் நிற்பாட்டப்படுகின்றன.

கடமையில் இருக்கும் தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அந்த நிழற்குடையின் கீழ் வரிசையாக வரும் மக்களை அனுமதித்தால் மட்டும் ஒழுங்காக வருவார்கள். ஆனால் மாலை 4.30 மணியாகியதும் கும்பலாக வீதியில் நிற்கிறார்கள். இந்தக் கும்பலினுள் ஓட்டோ சாரதிகள் மேலும் மக்களைக் கொண்டு வந்து இறக்கிவிடுகிறார்கள். அத்துடன், ஓட்டோ கட்டணத்தையும் அதிலேயே வைத்துப் பெற்றுக்கொள்வதனால் மேலும் நெரிசல் ஏற்படுகிறது.

இதைத் தவிர மினிபஸ்கள், தனியார் பஸ்கள் அந்த நடுவீதியில் வைத்து மக்களை ஏற்றுகிறார்கள். குழந்தைகள், கைக்குழந்தைகளுடன் தாய்மார்கள், முதியோர்கள், பெண்கள் என எல்லோரும் அந்தக்கடும் வெயிலில் வீதியை மறித்துக் கொண்டு நிற்கிறார்கள். என்றோ ஒரு நாள் விபத்து ஒன்று ஏற்பட்டு பெரிய உயிரிழப்பு ஏற்படப் போகின்றது. அதன் பின்னரே ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டுவர்.

போக்குவரத்துப் பொலிஸார் அந்த இடத்தில் காணப்படுவதே இல்லை. இத்தனைக்கும் இங்கிருந்து 50 மீற்றர் தூரத்திலேயே யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையம் அமைந்துள்ளது.

பஸ் நிலையத்திலிருந்து தாதியர் பயிற்சிக் கல்லூரி வரைக்கும் நடைபாதை உள்ளது. இந்த நடை பாதை விளிம்பில் கொழும்பில் உள்ளதுபோல், இரும்புப் பைப்புகளினால் 3 அடி அல்லது 4 அடி வேலி அமைக்கலாம்.

யாழ். மாநகர சபை இதனைச் செய்து அவற்றில் தனியார் நிறுவனங்கள் விளம்பரம் செய்வதற்கு வாடகைக்குவிட்டு வருமானத்தைப் பெறலாம்.

இதனால் மக்கள் வீதிக்கு இறங்காமல் நடைபாதையிலேயே போக வைக்கலாம். குறிப்பாக பார்வையாளர்கள் உட்செல்லும் வாசலுக்கு நேரே வீதிக்கு இறங்காதவாறு வேலி அமைக்கலாம்.

மினிபஸ்களும் ஓட்டோக்களும் இந்த வாசலுக்கு முன் மக்களை வீதியில் வைத்து ஏற்றி இறக்குவதைப் போக்குவரத்துப் பொலிஸார் கட்டுப்படுத்தி தண்டம் அறவிட வேண்டும்.

அல்லது தற்போது வைத்தியசாலை உத்தியோகத்தர் சென்று வருவதற்கென பருத்தித்துறை வீதியில் தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கும், விக்ரோறியா வீதிக்கும் நடுவே வாசல் ஒன்று உள்ளது. அங்கு போதிய இட வசதியும் உள்ளது. அதனை நோயாளரைப் பார்வையிட வருபவர்கள் செல்ல அனுமதிக்கலாம்தானே?

லயன்ஸ் கழகம், ரோட்டறிக் கழகம், வங்கிகள் போன்றவற்றை அணுகினால் அவர்கள் காத்திருக்கும் மண்டபம் மற்றும் தடுப்புக்கள், கதவுகள் போன்றவற்றை வைத்தியசாலை வளாகத்தினுள்ளே அமைத்துத் தருவார்கள்.

நோயாளர்களும் அவர்களைப் பார்வையிட வருபவர்களும் மனிதர்களே. வைத்தியசாலையில் இருக்கும்போது இருந்தவர்களுக்குப் புரியும். எம்மை உறவினர்களோ, நண்பர்களோ வந்து பார்க்கும்போது எவ்வளவு மகிழ்ச்சியும், நிம்மதியும் ஏற்படுகிறதென்பது.

எனவே இதில் சம்பந்தப்பட்ட போக்குவரத்துப் பொலிஸார், யாழ்.மாநகரசபை, போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் ஆகியோர் அரச அதிபரின் தலைமையின் கீழ் ஒன்றுகூடி இதற்கு ஒரு சிறந்த தீர்வை எட்ட வேண்டும். தாமதிக்கும் ஒவ்வொரு நாளும் விபத்து ஏற்பட்டு உயிரிழப்புகளை ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளேயே அதிகரிக்கும்.

*கி.செல்லத்துரை*

## வட்டுக்கோட்டையில் எரிபொருள் நிரப்பு நிலையம்

### வாசகர் திருமுகம்



**அ**ராலியூடான 789இலக்க மினிபஸ்ஸில் பெரிய எண்ணெய்க்கானுடன் வந்த ஒருவர் தமது பகுதி விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் எனப்பலரும் தமது தொழிலுக்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்வதில் சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் மண்ணெண்ணை வாங்குவதற்காக சித்தன் கேணிக்குச் செல்வதாகவும் தெரிவித்தார். தமது பிரதேசத்தில் சங்கானை கூட்டுறவுச் சங்கத்தின் மூன்று கிளைகளில் மண்ணெண்ணை விற்பனை இடம் பெறுகின்ற போதிலும் மேற்கூறப்பட்ட தேவைகளுக்குப் போதுமானதாக இருப்பதில்லை எனவும் அவர் குறைபட்டுக்கொண்டார்.

நாட்டில் இன்று வாகனங்களின் தொகை அதிகரித்துள்ளது. இதனால் அவைகளுக்குத் தீனி போடும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் காட்டில் நல்ல மழை பெய்கிறது. அந்த வகையில் இவை நட்டத்தில் இயங்கும் வாய்ப்புக்ளும் இல்லை எனலாம்.

நவீன மயப்படுத்தப்பட்டு, மெருகூட்டப்பட்டு கவர்ச்சிகரத் தோற்றத்தைக் கொண்ட தனியாரின் எரிபொருள் நிலையங்களுக்கு சமாந்தரமாக உள்ளதற்கு வள்ளிசாக இயங்கும் கூட்டுறவுச்சங்கங்களினது எரிபொருள் நிலையங்கள் எரிபொருள் தேவையை பூர்த்தி செய்து வருகின்றன.

வட்டுக்கோட்டை, கோட்டைக்காடு, அராலி ஆகிய இடங்களில் வதியும் மக்களது எரிபொருள் தேவையைக் கருதி வட்டுக்கோட்டைச் சந்தியில் ஒரு எரிபொருள் நிலையம் அமைக்கப்படின் அங்குள்ளோர் மட்டுமல்ல பிரபலமான அந்தச் சந்தியூடாக 784 இலக்க வழித்தடத்தினூடாக காரைநகர் கோவில்கள், கசூரினா கடற்கரை ஆகியவற்றுக்குச் செல்லும் வாகனங்கள் மூலம் கணிசமான வருமானமும் கிடைக்கும்.

கூட்டுறவுத்திணைக்களத்தின் அனுசரணை, ஆதரவு பெற்று சங்கானை பல நோ.கூட்டுறவுச் சங்கம் ஒரு காணியைக் கொள்வனவு செய்து எரிபொருள் நிலையம் அமைத்தால் நல்லதல்லவா? மேற்படி சங்க அங்கத்தவர்கள், பாவனையாளர்கள், நலன் விரும்பிகள் ஒரு காணித் துண்டைக் கொள்வனவு செய்து சங்கத்திற்கு அன்பளித்தால் என்ன? சங்கத்தின் எதிர்காலமும் நன்றாக அமையும்.

*த.நாராயணசாமி , மாவடி*

### கேலிச் சித்திரம்



நன்றி: லங்காதீப

## ஒருநாள் போதை எதிர்ப்பு போதவே போதாது

இலங்கையில் மது, போதைப் பொருள் பாவனை அதிகளவு உள்ள போதும் அதி உச்ச பாவனையைக் கொண்ட மாகாணமாக வட மாகாணம் கொடிகட்டிப் பறக்கிறது. இதனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார். மாகாண சபையினரும் இடையிடையே அதனை வலியுறுத்துகின்றனர்.

போதைப் பாவனையைத் தடுத்து நிறுத்துவது போதை விற்பனையைத் தடுப்பது என்பது சாதாரண விடயமல்ல என்றாலும் அதனைக் கட்டாயம் தடுக்க வேண்டிய அவசர நிலைமை ஏற்பட்டுள்ளது. தவிர்க்க முடியாத விடயங்களுள் இதுவும் ஒன்றாகிதடு அல்லது எனது ஆதிக்கத்தை பின்னர் என்னாலேயே கட்டுப்படுத்த முடியாது என்று மது, போதைப் பொருள்களே சவால் விடுவதாக அவற்றின் பாவனையும் விற்பனையும் பயன்படுத்துபவரின் நிலைமையும் தற்போது உள்ளது.

வடக்கில் திட்டமிட்டு போதைப் பொருள்கள் விநியோகிக்கப்படுகிறது தற்போது அனைவருக்கும் தெரிந்த ஒரு விடயமாகி விட்டது. ஆனால் அவ்வாறு தெரிந்தும் என்ன நடவடிக்கை எடுத்தனர்? அல்லது ஏதாவது நடவடிக்கைக்கான செயற்திட்டங்கள் நகர்த்தப்படுகிறதா என்றாலும் அதுவும் இல்லை என்ற நிலையில் அனைவருமே இடம் கிடைக்கும் போதெல்லாம் வாய்ச் சவடால் விடுவதாக கருத்துக் கூறிவிடுகின்றனர். கருத்துக் கூறுவது வேண்டிய நடவடிக்கையை வலியுறுத்தி என்றாலும் எந்தவொரு நடவடிக்கையும் இன்னும் இல்லை என்பது கவலைக்குரிய விடயமாகவுள்ளது.

கடந்த வார இறுதியில் மாணவர்கள் போதைப் பொருளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து வடக்கில் கவனவீர்ப்பு போராட்டங்களை முன்னெடுத் தனர். அன்றைய நாளுக்கு அது திருப்தியாக இருந்தது. அதன் பின் னைய நாள்களுக்கு என்ன செய்வது?

ஏனெனில் போதைக்கு எதிரான விழிப்புணர்வு என்பது – அதனைத் தடுப்பது என்பது பத்திரத்தில் கையொப்பமிட்டதும் கட்டளை போகும் அடுத்த விநாடியே தடுக்கப்படும் என்று கூறவோ அல்லது அதிரடியாக நடத்தி முடிப்பதோ அல்ல. அதற்குச் சாத்தியமுமில்லை.

போர்க் காலத்தில் போர் ஆயுதங்கள் குறிப்பாக வடக்கில் – தமிழர் பரப்பில் எப்படியெல்லாம் பயன்படுத்தப்பட்டதோ அதே வகையில் தற்போது போதைப் பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆக போர் ஆயுதங்கள் என்ன பணிகளைச் செய்யப் பயன்படுத்தப்பட்டதோ அதே பணிகள் தற்போது போதைப் பொருள்கள் மூலமாகச் செய்யப்படுகிறது.

தமிழர் தரப்பில் தமிழர்களுக்கு எதிராக, பிறத்தவருடன் தமிழ் ஒட்டுக் குழுக்களும் இணைந்து எவ்வாறு செயற்பட்டிருந்தனவோ அவ்வாறே தற்போதும் தமிழர் தரப்பில் தமிழர்களுக்கு எதிராக, பிறத்தவரும் தமிழ் ஒட்டுக் குழுக்களும் சேர்ந்து போதைப் பொருள்களை வைத்துக் கொண்டு போரை நடத்திக் கொண்டிருக்கின்றன என்பதனை அழுத்தம் திருத்தமாக நாம் உணரத் தவறக்கூடாது.

எனவே போதைக்கு மதுவுக்கு எதிரான விழிப்புணர்வு என்பது போதைப் பொருள்களை விற்பனை செய்பவர்கள், அவற்றை விநியோகம் செய்பவர்கள், அவற்றை வடக்குக்கு எடுத்து வருபவர்கள், அவர்களது வடக்கிலுள்ள விற்பனை முகவர்கள், விநியோக முகவர்கள் உள்ளிட்ட பலருடனான போர். அந்தப் போரை நாம் உடனடியாகச் செய்து முடிக்கமுடியாது. போதைக்கு எதிரான தடுப்ப தற்கான விழிப்புணர்வு என்பது போர் போன்றதே. அதனை நாம் ஒரு நாளில் செய்வதன் ஊடாக ஒரு நாளில் விழிப்புணர்வு ஊட்டுவதன் மூலமாக செய்துவிட முடியாது என்று யாழ்ப்பாணத் திலுள்ள மருத்துவர்கள் ஆணித்தரமாக வலியுறுத்துகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை மாணவர்கள் போதைக்கு எதிராகச் சிறப்பாக விழிப்புணர்வை மேற்கொண்டனர். அவ்வாறு ஒரு நாளில் செய்துவிட்டுப் பின்னர் அடுத்த வருடம் போதைக்கு எதிரான தினத்தில் விழிப்புணர்வு செய்வது என்பது ஒருவகையிலும் பயன்தரவல்லதல்ல. எனவேதான் அது பற்றிய தொடர்ச்சியான விழிப்புணர்வு கட்டாயம் வேண்டும் என்று மருத்துவர்களும் வலியுறுத்துகின்றனர்.

இது மக்களுடன் மக்களாகச் சேர்ந்து நின்று சமூகத்தை அழிக்கும் கெட்ட கிருமிகளது வேலை என்பதனை முதலில் புரிந்து கொள்ளுங்கள். அத்தகைய கெட்ட கிருமிகளை அவர்களை அண்மித்துள்ள நல்லவர்கள் கண்டறிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறெல்லாம் போராட்டம் வடக்கில் முன்னெடுக்கும் நிலையிலும் சில நாள்களுக்கு முன்னர் சுன்னாகத்தைச் சேர்ந்த இருவர் 900 இற்கும் மேற்பட்ட மதுப் போத்தல்களை சட்டவிரோதமாக அதுவும் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை அவர்களது சமூகம் இனியாவது கவனிக்க வேண்டும். அவ்வாறானவர்களை சமூகம் ஒதுக்கி வைக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் சமூகத்துக்குத் தம்மை நல்லவர்களாக அடையாளம் காட்டிக் கொண்டு நடக்கும் நச்சுக் கிருமிகள். அவர்களைச் சட்டம் எந்தளவுக்கு தண்டிக்கிறதோ என்பதற்கப்பால் சமூகமும் – சமூகத்திலுள்ள நாங்களும் கட்டாயம் உரிய வகையில் கவனிக்க வேண்டும்.

போதைப் பொருள்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு கடற் படையிடம் வழங்கப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது உரிய முறையில் செயற்படட்டும்.

அது வரை வடக்கிலுள்ள பொறுப்பு மிக்க வர்களின் விழிப்புணர்வு வாராந்தம் என்றாலும் தொடரட்டும்.

**பத்தி எழுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஊழலற்றதாக தேர்தல் நடந்தேற வேண்டும்

**2015** ஆம் ஆண்டு 8 ஆம் திகதி நாட்டு மக்களால் அளிக்கப்பட்ட தீர்ப்புக்கு அமைவாகவே மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானார். அவர் மக்களுக்களித்திருந்த வாக்குறுதியின் பிரகாரம் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முன்யை அரசின் மீது ஊழல், இலஞ்சம், நிர்வாகச் சீர்கேடு போன்ற பல்வேறு குற்றச் சாட்டுகள் முன்வைக்கப்பட்டு அவைகளுக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி தேர்தலுக்கான பரப்புரைகளின் போது வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருந்தன. மஹிந்த அரசின் தன்னிச்சையான எதேச்சாதிகார குடும்ப ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றும் வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருந்தன சிறுபான்மை மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் ஒழிக்கப்பட்டு நீதி கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

உண்மையில் சொல்லப்போனால் பதவியில் இருப்பதற்கான 100 நாள் அவகாசத்தில் பல்வேறு உள்கட்சிச் சிக்கல்களுக்கு மத்தியிலும் ஜனாதிபதியும் அவர் அமைத்த ஐ.தே.க. ஆதிக்கம் கொண்ட சிறுபான்மை அரசும் ஒரு சில வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளனர். வேறும்பல வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும் நிர்வாக சிக்கல்கள், சட்டப் பிரச்சினைகளால் ஏற்பட்ட தடங்கல்களாலும், கால அவகாசம் போதாமையாலும் தொடர்ந்து முன்னெடுக்க முடியாமல் போயுள்ளன. நிறைவேற்றிய வாக்குறுதிகளில் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைக் குறைப்பதற்கான 19 ஆவது திருத்தம் முக்கியமானது.

இந்த நிலைமையில்தான் பொதுத்தேர்தல் ஒன்றுக்கு போகவேண்டிய கட்டாய சூழ்நிலை உருவாகியுள்ளது.

இந்தத் தேர்தலானது தென்னிலங்கையைப் பொறுத்தவரை பெரிய கட்சிகளுக்கிடையில் மும்முனைச் சவலாக அமையும் என்று பலரும் நினைக்கிறார்கள். ஐ.தே.கவும், ஜனதா விமுக்தி பெரமுனையும் தனித்து போட்டியிடக்கூடும் என்ற நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள்தான் இழுபறி தெரிகின்றது. ஜனாதிபதியும் அந்தக் கட்சியின் தலைவருமான சிறிசேன கட்சியை ஒருங்கிணைப்பதற்கான பெருமுயற்சியில் இறங்கியுள்ளார். அதே சமயம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவிக்கான வேட்பாளராகக் களமிறக்க அவருக்கு சார்பான சுதந்திரக்கட்சியினர் மட்டுமன்றி அவர் தயவை நாடி நிற்கும் சிறிய கட்சிகளும் முயன்று வருகின்றனர். மஹிந்த தரப்பினருடன் நடத்தப்படுகின்ற பேச்சுக்கள் பயனளிக்காது போனால் சுதந்திரக்கட்சி இரண்டு நிலைகளை எதிர்நோக்க நேரும் அல்லது இரண்டாகப் பிளவுபடும் சாத்தியமும் காணப்படுகின்றது.

மலையகத்திலும் தென்னிலங்கையின்ஏனைய பகுதிகளிலும் வாழ்கின்ற சிறுபான்மையினத்தவர்கள் எடுக்கக்கூடிய நிலைப்பாடு சிக்கலாகவே தோன்றுகின்றது. அவர்களில் சிலர் ஐ.தே.கவுடன் சார்ந்திருக்கும் நிலையில் இ.தொ.கா. போன்ற கட்சிகளின் நிலைப்பாடு அதற்கு மாறானதாகவே தென்படுகின்றது. சுதந்திரக்கட்சியுடன் 20ஆவது திருத்தம் தொடர்பாக முரண்பட்டுள்ள முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடும் தெரியவில்லை.

ஐ.தே.க வின் தலைவர் கருத்துப்படி மீண்டும் விரிவானதொரு இணைப்பாட்சி ஏற்படக்கூடும் என்பதும்கூட சாத்தியமாகத் தோன்றுகிறது.

இவ்வாறு - தேர்தலையொட்டிய களநிலையானது குழப்பம் நிறைந்து காணப்பட்டாலும், கடந்த காலங்களைப்போல, பதவியிலிருந்த கட்சிகள் அரச வளங்களைப்பயன்படுத்திக் கொண்டு சதிராட்டம் போடமுடியாத நிலையொன்று ஏற்பட்டிருப்பது திருப்தி தருகிறது. அந்த வகையில் 19ஆவது திருத்தம் தேர்தல் ஆணையாளருக்கு போதிய அதிகாரங்களை வழங்கியுள்ளது. தேர்தல் அறிவிக்கப்பட்டவுடனேயே இதனை நினைவூட்டியுள்ள தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, தேர்தல் சட்டங்களை எவர் மீறினாலும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்துள்ளார். அந்த வகையில் முன்னர் ஜனாதிபதித் தேர்தலை மிகத் திறமையாக நடத்தி மதிப்புக்குரிய வரா[illegible] அவர் இந்த பொதுத் தேர் தலையும் வெற்றி[illegible]ரமாக[illegible] ஊழல்களுக்கு இடம் கொடுக்காமல[illegible] நடத்திமுடிப்பார் என்று எதிர் பார்க்கலாம்.

# ஜெனிவா சாட்சியங்களுக்கு சர்வதேசத்தின் பதில் என்ன?




■சேரலாதன்

வன்னியில் இடம்பெற்ற இறுதிப்போரின்போது வெள்ளைக் கொடிகளுடன் சரணடைந்தவர்களுக்கு நிகழ்ந்த கொடூரமான முடிவு தொடர்பாக அவர்களின் உறவினர்கள் ஜெனிவாவில் விரிவாக எடுத்துரைத்துள்ளனர். மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் அவர்கள் வழங்கிய சாட்சியங்கள் அங்கு கூடியிருந்தவர்களையும் கண்கலங்க வைத்து விட்டது.

இறுதிப்போரின்போது தமிழர்கள் எதிர்கொண்ட கொடிய அனுபவங்கள் உலக வரலாற்றில் மிகவும் மோசமானவை. அங்கு அரசுப் படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் போர் இடம்பெற்றதாகக் கூறப்பட்டபோதிலும் அதிகளவு பாதிப்புக்களை எதிர்கொண்டவர்கள் பொது மக்களே என்பதை உலகமே அறியும். பலநாடுகளின் உதவியுடன் இலங்கை அரசால் நடத்தப்பட்ட இறுதிப் போரின் போது தனது நாட்டுக் குடிமக்களாகிய தமிழர்கள் பாதிப்புக்களை எதிர்கொள்ளப்போகின்றனர் என்பதை அரசுத் தலைவர்களோ, படைகளை நடத்திச் சென்றவர்களோ சிறிதும்கூடக் கவனத்தில் கொள்ளவில்லை.

அதிலும் போர் விதிமுறைகளுக்கு அமைவாக வெள்ளைக்கொடிகளை ஏந்தியவாறு படையினரிடம் சரணடையச் சென்ற புலிகள் இயக்கப் போராளிகளுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் மிகக் கொடியவை. அவர்களில் பலர் குரூரமான வகையில் கொலை செய்யப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது உண்மையாக இருக்குமானால் இதைவிட மோசமான மனித உரிமை மீறல் இருக்கவே முடியாது. இவை தொடர்பான சர்வதேச விசாரணைகள் இடம்பெறும் போது இலங்கை அரசு எதைச் சொல்லிச் சமாளிக்கப் போகின்றது என்பதுதான் தெரியவில்லை.

ஜெனிவாவில் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் ஐ.நா.மனித உரிமைகள் சபையின் கவனத்தை நிச்சயம் ஈர்க்கும் என்பதில் ஐயமில்லை. இதனால் இலங்கை அரசு மேலும் நெருக்கடிகளை எதிர்கொள்ளப் போகின்றது. போர்க்குற்றங்களும், மனித உரிமை மீறல்களும், மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் நடந்தன என்றாலும் அரசு என்ற வகையில் மைத்திரி தலைமையிலான இலங்கை அரசு பொறுப்புக்கூற வேண்டிய நிலையில் உள்ளது. ஏற்கனவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செப்ரெம்பர் மாதம் வரை இலங்கை அரசுக்கு அவகாசம் வழங்கிய போதிலும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலைக் காரணம் காட்டி மேலும் அவகாசத்தை கோரும் எண்ணம் இலங்கை அரசிடம் இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

அரசுகள் மாறினாலும் பொறுப்புக் கூறுவதில் மாற்றங்கள் இருக்க முடியாது. ஆனால் ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைகளின்போது போர்க்குற்றம் தொடர்பாக எவரும் பாதிப்படைவதைத் தான் ஒரு போதுமே அனுமதிக்கப் போவதில்லை யென மைத்திரி கூறியமை தற்போது நினைவுக்கு வருகின்றது. மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்கள் மீதும் மைத்திரி இதுவரை உறுதியான நடவடிக்கைகளை எடுத்ததாகத் தெரியவில்லை. ஒரு நெகிழ்வுத் தன்மையான போக்கையே அவர் கடைப்பிடித்து வருகின்றார். ஆகவே இறுதிப் போரில் நடந்ததாகக் கூறப்படும் மோசமான சம்பவங்கள் தொடர்பாக அவர் பக்கச்சார்பின்றி நடந்துகொள்வாரென எதிர்பார்ப்பது மடமைத் தனமாகும். இந்த விடயத்தைப் பொறுத்த வரையில் மஹிந்தவின் வழியிலேயே மைத்திரியும் செல்லப் போகின்றார். ஏனென்றால் பெரும்பான்மையின மக்களின் வெறுப்பைச் சம்பாதிப்பதற்கு அவரால் துணியவே முடியாது.

ஆகவே சர்வதேச சமூகம் இறுதிப் போரின்போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நேரம் இப்போது கனிந்து விட்டது என்றே கூறவேண்டும்.

ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பல மாதங்கள் கடந்து விட்டன. ஏற்கனவே இலங்கையின் புதிய அரசு தனது பதிலை அளிப்பதற்கு அவகாசமும் கோரியுள்ளது. இதற்கு மேலும் சந்தர்ப்பங்களை வழங்குமாறு கோரிக்கை விடுப்பது நியாயமானதாகத் தெரியவில்லை.

பெரும்பான்மையின அரசியல் தலைவர்களைப் பொறுத்தவரையில் போர் வெற்றியை மாத்திரமே அவர்கள் கவனத்தில் கொண்டுள்ளனர். ஆனால் போரின்போது தமிழ் மக்களுக்கு நேர்ந்த இன்னல்கள் தொடர்பாக அவர்கள் சிறிதும் கவனத்தில் கொள்வதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் சரணடைந்து காணாமற்போன புலி உறுப்பினர்களின் உறவினர்கள் ஜெனிவாவில் வைத்து வழங்கிய சாட்சியங்கள் ஏதோவொரு வகையில் சர்வதேசத்தின் மனச்சாட்சியை உலுக்கி விடுமென எதிர்பார்க்கலாம். இனியும் சர்வதேசம் இலங்கை விவகாரத்தில் மெத்தனமாக இருக்குமாயின் அது இலங்கைத் தமிழருக்கு இழைக்கின்ற அநீதியாகவே பார்க்கப்படும்.



> ❝ சர்வதேச சமூகம் இறுதிப் போரின்போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நேரம் இப்போது கனிந்து விட்டது என்றே கூறவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சி மலர்வதற்கு ஜனாதிபதிக்கு இன்னும் ஆழமான பார்வை வேண்டும்

■ சரா

பலத்த இடி முழக்கங்கள், மின்னல்கள், காற்றுடன் கூடிய பெருமழை இவற்றிடையே ஆந்தைகள், கோட்டான்களின் அலறல்கள், காட்டு மிருகங்களின் உறுமல்கள், கர்ச்சனைகள், நாய், நரிகளின் ஊளையிடல்கள், காட்டுத் தவளைகளின் கத்தல்கள் என்ற இவையனைத்தும் ஓய்ந்து போனதன் பின்னர் அப்பாடா என்று ஆசுவாசப் பெருமூச்சை விட்டு ஓடோடிச் சென்று சாய்மானக் கதிரையில் அமர்ந்து ஒரு மனிதன் அமைதியடைந்த உணர்வொன்றே, 19 ஆவது அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேறியதும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஏற்பட்டிருக்கக் கூடும் என்று கூறினால் அது மிகப் பொருத்தமானதாகவே இருக்கும் எனக் கருத முடிகிறது. அந்தப் 19 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற விடாது அதற்கு எதிராக அதிகாரப் பேராசை கொண்ட இந்த நாட்டின் கேடு கெட்ட அரசியல்வாதிகளினால் ஏற்படுத்தப்பட்டிருந்த குழப்ப நிலைப்பாடுகளை மேற்குறிப்பிடப்பட்டிருந்த சம்பவத்துடன் ஒப்பிட லாம்.

நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னைய தினம் வரையிலும்அதேபோன்ற சஞ்சலத்தை, மனக்குழப்பத்தை, இனம்புரியாத பீதியை அதே அரசியல்வாதிகள் 20 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிராக ஏற்படுத்தி வந்திருந்தனர். இது, நாட்டின் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தி அவர்களை ஐக்கியப்படுத்தி ஜனநாயக நல்லாட்சியொன்றுக்கு அடித்தளத்தை அமைத்துவிடுவதற்கு அரும்பாடுபட்டு வரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குப் பெரும் சவாலாக மாறியிருந்தது.அன்று 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிராக எழுந்திருந்த நிலைப்பாட்டை எதிர்கொண்டு அதன் அவசியத்தை ஒட்டுமொத்த நாட்டுக்கும் தெளிவாக உணர்த்திவிடுவதற்காக, மனதைத் தொட்டு ஆழமாகச் சிந்திக்க வைக்கும் உணர்வு பூர்வமான உரைகளை நாடாளுமன்றத்தில் ஆற்றியிருந்தார் ஜனாதிபதி மைத்திரிபால. அந்த உரைகளின் மூலம் தெளிவைப் பெற்றிருந்த மக்களுக்கு எதிராகத் தாம் செயற்படுவதானது தமக்கே குழி பறித்துக் கொள்வதற்குச் சமமானது என்பதை அதற்கு எதிராக நின்ற இந்த நாட்டின் சீர்கெட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அரசியல்வாதிகளும்கூட உணர்ந் திருந்தார்கள் என்பது இறுதியில் 19 ஆவது அரசமைப்புத்திருத்தம் தடை யின்றி நிறைவேறியிருந்ததன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந் தது. அந்த வகையில் இது விடயத் தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவின் விவேகம் மிக்க அணுகு முறை அவரது அரசியல் முதிர்ச்சி யைச் சிறப்பாக வெளிப்படுத்தி யிருந்தது. கடந்த 26ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படும் வரையிலும் தற்போது புதிய தேர் தல் முறைமையொன்றைக் கொண்டு வரும் 20 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிராகவும் நாட்டிலும் நாடாளுமன்றத்திலும் சலசலப்புக்களையும் குழப்பங்களையும் சுயநல அரசியல் வியாபாரிகளான அதே அரசியல்வாதிகள் ஏற்படுத்தி இருந்ததைக் கண் கூடாகவே காணமுடிந்திருந்தது. மைத்திரி – ரணில் அரசின் மீது அபாண்டமான பொய்களைச் சுமத்தி அரசைக் கவிழ்த்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமர் பதவியிலிருந்தும் துரத்தியடித்து சுதந்திரக் கட்சி, ஐக்கிய முன் னணி இணைந்த எதிர்க்கட்சியை அரச தரப்பாக்கி விடுவதும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவை எப் பாடுபட்டேனும் பிரதமர் கதிரையில் அமர்த்தி வைத்து அதிகாரங்கள், வரப்பிரசா தங்களைப் பெற்று தமது பழைய கையாட்களின் துணையோடு தமது அரசியல் வியாபாரத்தை நடத்திச் செல்வதே அவர்களின் ஒரே குறிக்கோளாகி இருந்தது. ஆனால் ஒன்று, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆரம்பத்திலேயே இவர்களை ஓரம் கட்டி விட எண்ணியிருந்திருப்பாரானால், ஜனாதிபதிக் கதிரையில் அமர்ந்த அடுத்த தினத்திலேயே நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டிருந்தால் இவ்விதம் ஆட்டம் போடும் மோசடிப் பேர்வழிகளான இந்தச் சீர்கெட்ட அரசியல்வாதிகள் அனைவரதும் கொட்டத்தை அடக்கி விட்டிருக்க முடிந்திருக்கும். இன்று அவர்கள் மூலையில்முடங்கிப்போய் பேச்சற்று இருக்கும் நிலையே உருவாகியிருக்கிறது.





> **மைத்திரி அரசின் மீது தமிழ் மக்களுக்கு - குறிப்பாக தமிழ்பேசும் மக்களுக்கு நம்பிக்கையில்லை என்ற தமிழ்த் தலைவர்கள் முன்வைத்துள்ள கருத்து வெளிப்பாடுகள் மற்றும்அதை யொட்டிய தமிழ் பேசும் மக்களின் அவசியம் தீர்த்து வைக்கப்பட வேண்டியுள்ள மிக முக்கியமான பிரச்சினைகளில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காத்திரமான கவனம் செலுத்துவதன் ஊடாக அவரது ஐக்கியப்பட்ட நல்லாட்சிக் கனவு நனவாக சாதகமான ஏராளமான வாய்ப்புக்கள் தாமாகவே உருவாகக் கூடும்.**

கடந்த 14 ஆம் திகதி தம்ப தெனியாவில் இடம்பெற்றிருந்த நாடு தழுவிய சுதந்திரக் கட்சிச் செயற்பாட்டாளர்களுக்கு அறிவூட்டும் மாநாட்டில் வைத்து ஆற்றியிருந்த உரையில் தாம் நினைத் திருந்தால் பதவியேற்ற அடுத்த நாளிலேயே சுதந்திரக்கட்சியை ஒரு பொருட்டாகக் கருதாது நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டிருக்க முடியும் எனவும் ஆனால் தாம் அதைச் செய்திருக்கவில்லை எனவும் அது நடந்திருக்குமானால் பலம்மிக்கதொரு ஐக்கிய தேசியக் கட்சி அரசொன்றுக்குத் தாம் தலைமைதாங்கியிருக்க நேர்ந்திருக்கும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்ததை இங்கு குறிப்பிட்டாக வேண்டியுள்ளது. எவ்வாறானாலும் ஜனாதிபதியின் இந்தத் திடீர் நாடாளுமன்றக்கலைப்பு அந்தப் பழைய சீர்கெட்ட அரசியல்வாதிகளுக்கு நல்லதொரு பலத்த அடியாகும்.

மறுபுறத்தில் மைத்திரி அரசின் மீது தமிழ் மக்களுக்கு – குறிப்பாக தமிழ்பேசும் மக்களுக்கு நம்பிக்கையில்லை என்ற தமிழ்த் தலைவர்கள் முன்வைத்துள்ள கருத்து வெளிப்பாடுகள் மற்றும்அதையொட்டிய தமிழ் பேசும் மக்களின் அவசியம் தீர்த்து வைக்கப்பட வேண்டியுள்ள மிக முக்கியமான பிரச்சினைகளில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காத்திரமான கவனம் செலுத்துவதன் ஊடாக அவரது ஐக்கியப்பட்ட நல்லாட்சிக் கனவு நனவாக சாதகமான ஏராளமான வாய்ப்புக்கள் தாமாகவே உருவாகக் கூடும் என்பதை மனதில் நிறுத்தி எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் ரணில் தரப்பினர் மிக ஆழமாகச் சிந்தித்து விவேகத்துடன் செயற்படுவதிலேயே இந்த நாட்டில் மீண்டுமொரு ஜனநாயக நல்லாட்சிக்கு வழி பிறப்பது தங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



- ✱ உனது நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும், அதைக் குறித்து கவலைப் பட வேண்டாம். இலட்சியத்தைப் பற்றிக் கொண்டு முன்னேறியபடியே இரு.
- ✱ மற்றவர்களுக்கு நன்மை செய்வது புண்ணியம், தீமை செய்வது பாவம்.
- ✱ மனிதன் எந்த அளவுக்கு உயர்ந்தவனாகிறானோ அந்த அளவுக்கு அவன் கடுமையான சோதனைகளையும் கடந்து சென்றாக வேண்டும்.
- ✱ கீழ்த்தரமான தந்திரங்களினால் இந்த உலகில் மகத்தான காரியம் எதையும் சாதித்துவிட முடியாது. இது எனது உறுதியான நம்பிக்கை.
- ✱ கோழைகளுடனோ அல்லது அர்த்தமற்ற அரசியலுடனோ எனக்கு எந்தவிதத் தொடர்பும் இல்லை. கடவுளும் உண்மையும் தான் இந்த உலகிலுள்ள ஒரே அரசியல். மற்றவை எல்லாம் வெறும் குப்பை.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 3 | 8 | 1 | 9 | 2 | 7 | 5 | 6 |
| 2 | 6 | 5 | 8 | 7 | 4 | 1 | 3 | 9 |
| 7 | 1 | 9 | 6 | 5 | 3 | 4 | 2 | 8 |
| 6 | 2 | 1 | 9 | 4 | 8 | 3 | 7 | 5 |
| 9 | 5 | 3 | 2 | 6 | 7 | 8 | 1 | 4 |
| 8 | 7 | 4 | 5 | 3 | 1 | 6 | 9 | 2 |
| 5 | 8 | 7 | 3 | 2 | 6 | 9 | 4 | 1 |
| 1 | 4 | 2 | 7 | 8 | 9 | 5 | 6 | 3 |
| 3 | 9 | 6 | 4 | 1 | 5 | 2 | 8 | 7 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | 3 | | 5 | | | 1 |
| | 9 | | | 8 | | | 2 | |
| | | | 6 | | 1 | | | |
| | 8 | | | | | | 7 | |
| 1 | | 7 | | 5 | | 2 | | 9 |
| | 6 | | | | | | 8 | |
| | | | 2 | | 9 | | | |
| | 1 | | | 6 | | | 9 | |
| 9 | | | 5 | | 3 | | | 4 |

**சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளை யும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.**

## நாளை

**ஆனி-15**
**செவ்வாய்க்கிழமை**
**30.06.2015**
**திதி: திரயோதசி**
**மு.ப. 10.01 வரை**
**நட்சத்திரம்: கேட்டை**
**பி.இ.04.34 வரை**
**சுபநேரம்:**
10.26-11.56 வரை
**இராகுகாலம்:**
02.56-04.26 வரை

## தாய்ப்பால் கொடுப்பதால் கிடைக்கும் 10 நன்மைகள்

**மாதவிடாயை தாமதப்படுத்தும்**
தாய்ப்பால் புகட்டுவது குழந்தை பேற்றுக்குப் பின் தாய்மார்களுக்கு மாத விடாய் ஏற்படுவதைத் தாமதப்படுத்துகிறது. அதாவது பெண்களின் கருப்பையில் அண்டம் உருவாவதைத் தாமதிக்கிறது.

**உளவியல் ரீதியான பிணைப்பு**
தாய்ப்பால் புகட்டுவதால் தாய்க்கும், சேய்க்கும் உடல் ஆரோக்கியம் மட்டுமல்லாமல், உளவியல் ரீதியாகவும் பிணைப்பு ஏற்படும்.
சுயமரியாதை அதிகமாகும் தாய்ப்பால் கொடுப்பதால், அது தாயிடத்தில் சுய மரியாதையை ஊக்குவிக்கிறது.



**எளிமையான வேலை**
தாய்ப்பால் புகட்டுவதால் உணவு வழங்கும் உபகரணங்களைக் கழுவி, சுத்தப்படுத்தி, தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை.

**எளிய உணவு**
தாய்ப்பால் மிகவும் சிக்கனமானதும் கூட. எப்படியெனில் செயற்கையாக ஆரோக்கிய உணவுகள் புகட்ட முற்படுதல் அதிக செலவை ஏற்படுத்தும். மேலும் அது சராசரி குடும்பச் செலவில் மூன்றில் ஒரு பங்கு பிடிக்கும்.

**புற்றுநோயை தடுக்கும்**
தாய்ப்பால் புகட்டுவது மார்பகம் மற்றும் கருப்பையில் புற்றுநோய் ஏற்படுவதைத் தடுக்கிறது.

**எடை குறையவும் உதவும்**
தாய்ப்பால் குழந்தை பேற்றுக்குப் பின் தாய்மார்கள் உடலில் எடையை இழக்கவும் உதவுகிறது.

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 100 | 100 | 60 | 80 | 60 | 80 | 40 |
| கத்தரி | 50 | 50 | 50 | 50 | 40–60 | 80 | 80 | 25 |
| கரட் | 150 | 180 | 160–250 | 160 | 240–260 | 280 | 220 | 240 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 50 | 60 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 140 | 120 | 140 | 120 | 180 | 120 | 140 | 120 |
| பாகல் | 150 | 160 | 160 | 180 | 160 | 160 | 160 | 130 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 100 | 100 | 100 | 120 | 120 | 65 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 120 | 100 | 120 | 120 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 120 –160 | 140 | 140 | 180 | 200 | 140 |
| பூசணி | 30 | 30 | 40 | 30 | 30 | 40 | 60 | 15 |
| தக்காளி | 90 | 100 | 90 | 80 | 80 | 120 | 80 | 60–70 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 50 | 50–60 | 40 | 80 | 30–35 |
| கீரை | 10 | 20 | 30 | 10 | 15–20 | 20 | 30–35 | 10 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 35 | 20 | 40 | 10–15 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 120 | 160 | 160 | 180–200 | 200 | 200–220 | 220 |
| புடோல் | 60 | 80 | 60 | 80 | 80 | 60 | 80 | 70 |
| கோவா | 80 | 100 | 80 | 100 | 80–100 | 120 | 80 | 70 |
| வெண்டி | 120 | 100 | 100–140 | 120 | 140 –160 | 120 | 120 | 70 |
| போஞ்சி | 160 | 220 | 140 | 180 | 240 | 320 | 240 | 140 |
| லீக்ஸ் | 140 | 160 | 160 | 140 | 160 | 240 | 160 | 140 |
| தேங்காய் | 50 | 40 | 60 | 40–50 | 50–60 | 40 | 35–50 | 40 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 120 | 90 | 90 | 100 | 120 | 120 |
| தேசிக்காய் | 120 | 100 | 120 | 140 | 120 | 100 | 160 | 100 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 30 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 130 | 160 | 120–140 | 160 | 200–240 | 200 | 200 | 120 |
| இராசவள்ளி | 120 | 140 | 120 | – | 100–120 | 160 | 180 | – |
| முருங்கைக்காய் | 600 | 400 | 600 | 350 | 500–600 | 400 | – | 300 |

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 800 | 800 | 800 | 600 |
| நண்டு | 300 | 450 | 400 | 400 | 300 | 450 |
| கணவாய் | 550 | 600 | 600 | 600 | 600 | 500 |
| பாரை | 550 | 600 | – | 500 | 600 | 370 |
| சுறா | 600 | 600 | – | 650 | 1000 | – |
| சீலா | 300 | 450 | 500 | 400 | 500 | – |
| விளை | 600 | 450 | 400 | 550 | 600 | 350 |
| சூரல் | 300 | 350 | 400 | 400 | 300 | 300 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 600 | – |
| கிழாக்கன் | 650 | 800 | 400 | 500 | 300 | – |
| ஒரா | 350 | 400 | 300 | 450 | 400 | 300 |
| திரளி | 250 | 200 | 200 | 300 | 200 | – |
| நகரை | 200 | 300 | 200 | 300 | – | 300 |
| ஆடை | 150 | 150 | 100 | 120 | 200 | 100 |
| ஒட்டி | 250 | 300 | – | 300 | 300 | 250 |
| திருக்கை | 150 | 400 | 100 | 250 | 400 | 140 |
| பாலை | 400 | 300 | 300 | 500 | 400 | – |
| வாழை | 100 | 250 | – | 300 | – | – |
| கொய் | 80 | 250 | 100 | 120 | 100 | – |
| மதனம் | 100 | 300 | 280 | 250 | – | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்களால் எதிர்காலம்

## எண் 1 சூரியன்

இவர்கள் மன்னர் போல பரிவாரம், மெய்ச் காவலர்கள், பட்டத்து அரசி, காதல் பெண்கள், அரண்மனை போன்ற வீடு, தேர்போல வாகனம், தனக்கென்று கூட்டம், தொண்டர்கள் என அனைத்தையும் உடையவர்கள். கற்றவர்களான இவர்கள் வீரமும் உடையவர்கள். மண், மனை உடையவர்கள், மாற்று நாட்டினர்கள், தூதர்கள் சூழவாழ் வார்கள். குடும்பம் இரண்டு உடையவர்கள். புத்திரர்களால் பிரச்சினையும், நண்பர்களால் பலமும், மனைவியர் அடங்கி வாழக்கூடிய ஆளுமையும், தர்மம், நீதி நேர்மை, சரியான தீட்சண்யம் உடையவர்கள். சிவப்பு இரத்தினம் இவர்களுக்கு ராசியானதாகும். சந்திர எண் 2, குரு எண் 3 என்பன ராசியானவை. எண் 4, எண் 7 இவர்களுக்கு நன்மை தராது. திங்கள், ஞாயிறு நல்ல நாள்கள் ஆகும். வெற்றி வாகைசூடி விரும்பியவற்றை அடைந்து நெருப்புப் போல பிரகாசம் உடையவர்களாக இவர்கள் இருப் பார்கள். எண் 8 இனால் தூண்டி விடப்படுவார்கள். ஆன்மபலம், பங்காளிகள் அதிகம் உடையவர்கள்.



## எண் 2 சந்திரன்

தாய் இல்லாமல் நாம் இல்லை. தானேயாரும் பிறப்பதில்லை. எண் 2 சந்திரன் என்ற பூமியில் தாய்க்குச் சொந்தமானது. ஆங்கில மாதத்தின் 2, 11, 20, 29 ஆம் திகதிகளில் தோன்றியவர்கள் பலன் பெறும் எண் 2 ஆத்மாவான சூரியனே மனதுக்கும் காரணம் ஆகி தனது ஒளியைப் பிரதிபலிக்கும் சந்திரன் இதமான தாய் எண் என்று சொல்லலாம். தலைமைத் தொழிற்காரர்களாக தொழிலைச் செய்வார்கள். சமூகநலத் தொழிலாக இவை இருக்கும். இதம், சௌகரியம் அழகு, நாகரிகம், அமைதி, மன்னிக்கும் குணம் எல் லோருடனும் சேர்ந்து பங்கிட்டு பகிர்வு கொள்ளும் குணம் உடையவர்கள். இவர்கள் நிலவு போல அழகான தோற்றம் உடையவர்கள். முத்து கடலில் பிறக்கும், இதைப் பட்டைதீட்ட வேண் டிய அவசியம் இல்லை.

இவர்களும் உலகியலுக்கு நல்முத்தாக இருப்பார்கள். பாத்திரத்தின் வடிவைத் தனது வடிவமாகப் பெற்றிருப்பார்கள். தங்களுக்கு என்று தனித்துவம் இராது கொள்கை பரப்பும் செயல் உடையவர்கள். வேண்டாத எண் 7. அதிர்ஷ்ட இரத்தினம் முத்து, வழிபட வேண்டிய தெய்வம் அம்பாள். நாள் பௌர்ணமி. கொள்கைப் பிடிப்பில் நம்பிக்கை வேண்டும். எழுத்துத் தொழில், கலைப் படைப்புக்களை அவர்கள் செய்வார்கள். இளம் கலர் எப்போதும், நன்மை தரும். எண் 8 நல்ல வேலையாளாக அமையும், எண் 3 ராஜ யோகத்தை வளர்க்கும். நான்கு பக்கங்களிலும் இவருக்கு உதவிகள் உண்டாகும். முகம் வசியம் உடையவர்கள்.

## எண் 3 குரு

எண் மூன்று புத்தி, புத்திரம், புகழ் இவற்றைக் கொடுக்க வல்லது. ஆங்கில மாதத்தின் 3, 12, 21, 30 ஆம் நாள்களில் தோன்றியவர்களின் எண் குரு எண் மூன்று ஆகும். மூப்பில்லாத இளமை உடையவர்கள், அறிவால் ஆளுமை உடையவர்கள். சத்திரம், அறக்கட்டளைகள், தர்மச்சாலைகள், கல்லூரி, கல்வித் தளங்களை நிர்வாகம் செய்வார்கள். வயதான தாய், தந்தைக்கு கட்டுப்படுவார்கள். புத்திரர்கள், பேரக்குழந்தைகளின் விளக்காக வாழ்வார்கள். உலகியலுக்கு தாங்கள் எடுத்த முடிவை ஒட்டியே வாழ்வார்கள். தவசியாக தீர்க்க தரிசனம் உடையவர்களாக, தளராத முயற்சியால் வெற்றிக் கொடி நாட்டியவர்கள். இவர்களுக்கு இனிய எண் 9. 2, இரத்தினம் மஞ்சள் புஷ்பராகம், மஞ்சள் நிறம் சிறப்புடையது. தெய்வமும், நாட்டுப் பற்றும் தனது இரு கண் எனக் கருதுவார்கள். வேண்டாத எண் 3. நிச்சயமாக இந்த எண்ணால் குழப்பம் உடையவர். இறந்த பின்னும் இருந்து கொண்டிருக்கும் செயல் உடையவர்கள்.

# ஆண்களை எரிச்சலூட்டும் பெண்களின் செயல்கள்

உலகில் உள்ள அனைவருக்குமே ஒருசிலவற்றில் அதிகப்படியான விருப்பம் இருக்கும். அத்தகைய அதிகப்படியான விருப்பத்தால், அதனைப் பெறுவதற்கும், பின்பற்றுவதற்கும் அதிக ஆர்வம் செலுத்துவதால், எம்முடன் பழகுபவர்களுக்கு அது பொறுமையை இழக்கச் செய்து, சில சமயங்களில் எரிச்சலூட்டும் படியாகவும் இருக்கும். இவற்றில் பெண்களின் செயல்கள் தான் ஆண்களைக் கோபமூட்டும். உதாரணமாக, பெண்களுக்கு மேக்கப் போடுவது மிகவும் பிடிக்கும். ஆனால் ஆண்களுக்கு அது சுத்தமாக பிடிக்காது. இது போன்று பெண்களுக்குப் பிடித்து ஆண்களுக்கு பிடிக்காத பல செயல்கள் உள்ளன.

வெளியே செல்வதற்கு 10–15 நிமிடம் போதுமானது. ஆனால் பெண்கள் வெளியே செல்ல வேண்டுமெனில் குறைந்தது 1 மணிநேரம் எடுத்துக் கொள்வார்கள். இதனால் நீண்ட நேரம் காத்திருப்பதால், ஆண்கள் வெறுப்படைந்துவிடுவார்கள்.

அதுமட்டுமின்றி, அவ்வாறு புறப்பட்டு வந்த பின், தாம் எப்படி இருப்பதாகவும் பெண்கள் கேட்பார்கள். அப்போது ஆண்கள், பெண்களின் மனது குளிரும் வகையில் சொன்னாலும் சரி, சொல்லாவிட்டாலும் சரி, அதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அதிக நேரம் காத்திருந்ததை விட, கேட்ட கேள்விக்குச் சரியாக பதிலளித்தும் பெண்கள் ஒப்புக் கொள்ளர்தது, ஆண்களுக்கு கோபத்துடன் எரிச்சலையும் உண்டாக்கும்.

பெண்களின் செயல்களில் முக்கியமான ஒன்று மேக்கப் போடுவது. பெண்கள் எங்கு செல்லும் போதும், நன்கு அழகாகப் பொலிவோடு இருக்க வேண்டும் என்று நினைப்பார்கள். அதனால் முகத்தை அழகுடன் வெளிப்படுத்துவதற்கு மேக்கப்பை போடுவார்கள். ஆனால் ஆண்கள் இயற்கை அழகையே விரும்புபவர்கள். சொல்லப்போனால் மேக்கப் போடும் பெண்களை விட, மேக்கப் போடாத பெண்களிலேயே ஆண்களை எளிதில் கவர முடியும். ஆகவே அளவான மேக்கப் போடுவது இயற்கையான அழகை வெளிப்படுத்துவதோடு, கவர்ச்சியாகவும் இருக்கும்.

எப்போதும் ஆரம்பத்தில் பெண்கள் கூச்சப்பட்டு, பசித்தாலும் அளவாகவே சாப்பிடுவார்கள். ஆனால் அதுவே நன்கு பழகி விட்டால், நன்கு ஒரு கட்டுக் கட்டுவார்கள். இவ்வாறு நன்கு எதற்கும் கூச்சப்படாமல் இருப்பவர்களையே ஆண்களுக்கு பிடிக்கும். அதைவிட்டு சரியாகச் சாப்பிடாமல் இருந்தால், ஆண்களுக்கு மனதில் ஒருவித எதிர்மறை எண்ணங்கள் உண்டாகும். அதுமட்டுமன்றி ஆண்கள் எப்போதும் தம்முடன் இருப்பவர்கள், எந்த ஒரு கூச்சமுமின்றி நன்கு வயிறு நிறையச் சாப்பிட வேண்டும் என்று நினைப்பார்கள். ஆகவே கூச்சப்படாமல் எப்போதும் போன்று நடக்க வேண்டும்.

பெண்களுக்கு எவ்வளவு தான் வீட்டில் துணிகள் இருந்தாலும், புது ஆடைகள் வாங்குவதில் உள்ள நாட்டம் குறையாது. அதிலும் ஒருமுறை மனதில் வாங்க வேண்டும் என்று நினைத்து விட்டால், என்ன வாங்க வேண்டும் என்று யோசிக்கவே 30 நிமிடங்கள் எடுத்துக் கொள்வார்கள்.

இந்த நேரத்தில் மட்டும் ஆண்கள் பெண்களின் கைகளில் மாட்டிக் கொண்டால், பொறுமையையே ஆடையாக அணிந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால், சண்டைகள் வந்து வீடே இரண்டாகிவிடும். அதுமட்டுமன்றி, அவர்களுடன் போகும் போது கூடவே கிரடிட் கார்டும் எடுத்துச் செல்ல வேண்டி வரும்.

இயற்கையாகவே பெண்களுக்கு சுய அன்பானது அதிகம் இருக்கும். மேலும் எந்த நேரமும் நன்கு அழகாகவே காணப்பட வேண்டும் என்பதால் அழகு மீது அதிக கவனம் கொள்வார்கள். அதனால் தான் அவர்கள் மேக்கப் செய்வதற்கு அதிக நேரம் எடுத்துக் கொள்கின்றனர். அதிலும் கூந்தல் என்று வந்துவிட்டால், கூந்தலை எப்படியெல்லாம் நாகரிகமாகச் சீவலாமோ, அவை அனைத்தையும் முயற்சித்து பார்ப்பார்கள். அவ்வாறு முயற்சிப்பது தவறல்ல. ஆனால் அது நமது துணைக்கு பிடிக்கிறதா என்று பார்த்ச் செய்வது நல்லது. ஏனெனில் அவர் தான் எப்போதும் உங்களுடன் இருப்பவர். ஆகவே அதை மறக்காமல் நடப்பது நல்லது.

மேற்கூறியவாறு பெண்களின் செயல்கள் இல்லாமல் இருந்தால், நிச்சயம் அனைத்து ஆண்களுக்கும் அவர்களை மிகவும் பிடிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டலாம் வாங்க






மீன்கொத்தி உலகமெங்கும் பரவலாகக் காணப்படும் ஒரு பறவையினமாகும். ஏறத்தாழ 90 வகையான மீன்கொத்தி இனங்கள் உலகில் உள்ளன. இவை பெரிய தலைகளும், நீண்ட கூரிய அலகுகளும், குட்டைக் கால்களும், சிறு வால்களும் கொண்டவையாகும். எடுப்பான நிறங்கள் கொண்ட இந்த மீன்கொத்தி இனங்களின் வகைப்பாட்டில் மூன்று குடும்பங்கள் உள்ளன. நீர்நிலையருகில் வாழும் மீன்கொத்திகள் சுழியோடி சிறு மீன்களைப் பிடித்து உண்கின்றன. தவளைகள், பூச்சிகளையும் உண்கின்றன. இவற்றின் கண்கள் நீருள்ளும் வெளியேயும் பார்க்கக் கூடியதான முட்டைவடிவ வில்லையைக் கொண்டுள்ளன. மர மீன்கொத்திகள் ஊர்வனவற்றைப் பிடித்துண்கின்றன. எல்லா வகையான மீன்கொத்திகளும் தாம் பிடித்த இரையை மரத்தில் அடித்தோ கல்லில் வீழ்த்தியோ கொன்று உண்கின்றன. மீன்கொத்திகள் உலகில் புவிமுனைப் பகுதிகள், மிக வறண்ட சில பாலைவனங்களைத் தவிர எல்லாப் பகுதிகளிலும் காணப்படுகின்றன. சில இனங்கள் பசிபிக் பெருங்கடலின் தெற்கு கிழக்குப் பகுதிகளில் உள்ள தீவுகளிலும் காணப்படுகின்றன. ஐரோப்பாவிலும் வடஅமெரிக்காவில் மெக்சிக்கோவுக்கு வடக்கிலும் சிறிய எண்ணிக்கையிலான மீன்கொத்தி இனங்களே காணப்படுகின்றன.



# முல்லாவிடம் இருந்த சக்தி



தற்பெருமை பேசுவார்களைக் கண்டால் முல்லாவுக்குப் பிடிக்காது. அவர்களை எவ்விதமாவது மட்டந்தட்ட அவர் முயற்சி செய்வார். ஒருதடவை ஒரு மதச் சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக வெளிநாட்டில் இருந்து மதத்தலைவர்கள் சிலர் வந்திருந்தார்கள். அவர்கள் மக்கள் மத்தியில் சொற்பொழிவாற்றும் போது மதத்தைப் பற்றியோ கடவுளைப் பற்றியோ அதிகம் பேசமால் தங்களுக்கு அதிசய சக்திகள் உண்டு என்றும் தாங்கள் விரும்பினால் நீரில் நடக்க முடியும், நெருப்பில் புகுந்து வெளிவர முடியும், மணலைக் கயிறாக திரிக்க முடியும் என்றும் சுய புராணத்தைத் தம்பட்ட மடித்தே காலத்தை ஓட்டினர். கடைசியாக நன்றி கூறுவதற்காக வந்த முல்லா தனக்கும் சில கச்திகள் உண்டு என்றும் குறிப்பாக நல்ல இருளில் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் வழிநடக்க முடியும் என்றும் கூறினார். 'விளக்கே இல்லாமல் அடர்ந்த காட்டில் கூட நல்ல இருளில் முல்லாவால் நடந்து செல்ல முடியுமா? என்று மதத்தலைவர்கள் கேட்டனர். 'முடியும்' என்று முல்லா கூறினார். அன்று இரவு உணவுக்குப் பிறகு, முல்லாவின் அந்த சிறப்பு ஆற்றலைப் பரிசோதனை செய்து பார்ப்பது என்று முடிவாயிற்று. மதத் தலைவர்களும் உள்ளுர் பிரமுகர்கள் சிலரும் காட்டில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஆங்காங்கே நின்று முல்லா வின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அன்று உண்மையிலேயே இருள் மிகவும் அதிகமாக இருந்தது. மிகவும் அருகில் இருக்கும் பொருள் கூட கண்களில் படவில்லை. குறுக்கும் நெடுக்குமாக நிற்கும் மரங்களை அடையாளம் கண்டு முல்லா எவ்வாறு இருளில் வருகிறார் என்று பார்க்க எல்லோரும் ஆவலோடு காத்துக் கொண்டிருந்தனர். சற்றுநேரம் கழித்து முல்லா ஒரு கைவிளக்கை எடுத்துக் கொண்டு நடந்து வந்தார். இது என்ன? கைவிளக்கு வெளிச்சத்தில் நடந்து வருகிறீர், இருளில் அல்லவா நடப்பதாகச் சவால் விட்டீர் என்று மற்றவர்கள் கேட்டனர். நண்பர்களே, எவ்வளவு பயங்கர இருளாக இருந்தாலும் எனக்குக் கண் நன்றாகத் தெரியும், ஆனால் நடந்து வருவது நான்தான் என்று உங்களுக்கெல்லாம் தெரிய வேண்டாமா? எனக்குப் பதிலாக வேறு ஆளை நடக்க விட்டு நான் உங்களை ஏமாற்றி விட்டேன் என்ற அவப்பெயர் நாளை வரக்கூடாதல்லாவா? அதனால் என்னை நீங்கள் அடையாளம் கண்டு பிடிப்பதற்காகத்தான் கைவிளக்குடன் நடந்து வந்தேன் என்றார் முல்லா. பிறகு முல்லா 'அன்பார்ந்த மதத் தலைவர்களே உங்களிடமெல்லாம் ஏதேதோ அமா னுஷ்ய சக்தி இருப்பதாகக் கூறினீர்களே அதற்கு எனது சக்தி ஒன்றும் இளைத்த தல்ல' என்றார் முல்லா. தங்களை மட்டம் தட்டவே இப்படி ஒரு நாடகத்தை முல்லா ஆடினார் என்பதை மதத் தலைவர்கள் உணர்ந்து கொண்டனர்.

# தெரிந்து கொள்வோம்

- ஐம்புலனறிவு எல்லா உயிர்களுக்கும் ஒரே மாதிரி இருப்பதில்லை.
- பறவைகளுக்குப் பார்வைச் சக்தி அதிகம். வானத்தில் வட்டமிடும் பருந்து, தரையில் உள்ள பல்லியைக் கூடப் பார்த்து அதன் மீது பாய்ந்து பற்றிக்கொள்ளும்.
- வேட்டையாடும் விலங்குகளுக்குப் பார்வைச் சக்தி குறைவு. ஆனால் மோப்ப உணர்வு மொட்டுக்கள் சராசரியாக 22 கோடி என்ற அளவில் உள்ளன.
- மனிதர்களுக்கு வாசனையை உணரும் மொட்டுகள் 50 லட்சம் உள்ளன. பத்தாயிரம் வெவ்வேறு விதமான வாசனைகளை மனிதர்களால் பிரித்து அறிய முடியும்.
- உயிர் வாழ்வதற்கு எல்லா உணர்வுகளும் வேண்டும் என்பதில்லை. செடிகள் வெளியிடும் கரியமில வாயுவை உண்டு வாழும் ஒரு புழு உள்ளது. அதற்கு அந்த ஒரு வாசனை மட்டுமே தெரியும்.
- ஒவ்வோர் உயிரினமும் தமது உடலிலிருந்து தனித்தனி வாசனையைக் காற்றில் கலக்கிறது. வண்ணத்துப்பூச்சி தனது வாசனையால் பல மைல்களுக்கு அப்பால் உள்ள தனது இணையைக் கவரும்.

# அனுபவத்தின் விலை

ஒருமுறைகப்பல் ஒன்று பழுதடைந்துவிட்டது. கப்பல் சொந்தக்காரன் பல திருத்துநர்களைப் பணிக்கு அமர்த்தியும் கப்பல் இயந்திரத்தை சரி செய்ய அவர்களால் முடியவில்லை. சலிப்படைந்த கப்பல் சொந்தக்காரன் பத்திரிகையில் அறிவித்தல் செய்தான். ஒரு வாரத்தின் பின்னர் ஒரு வயோதிபத் திருத்துநர் கப்பல் இயந்திரத்தைப் பழுது பார்த்து தருவதாக முன் வந்தார். முதலில் இயந்திரத்தை நன்றாகச் சுற்றிச் சுற்றிப் பார்த்தார். அந்த வயோதிபர் செய்வதை கப்பல் சொந்தக்காரனும் அவதானித்துக்கொண்டிருந்தான். வயோதிபத் திருத்துநர் ஒரு சுத்தியலினால் இயந்திரத்தின் சில பகுதி களை இலேசாகத் தட்டினார். இயந்திரம் இயங்கத் தொடங்கியது. எல்லோரும் சந்தோசப்பட்டார்கள். கப்பல் சொந்தக்காரன் வயோதிப திருத்துநரை பாராட்டிவிட்டு கூலி எவ்வளவு என்று கேட்டார் அதற்கு வயோதிபர் நான் கணக்குப் பார்த்துவிட்டு பின்னர் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார். ஓரிரு நாள்களில் வயோதிபரிடம் இருந்து கப்பல் சொந்தக்காரனுக்கு பற்றுச்சீட்டு வந்தது. அதைக்கண்ட கப்பல்காரன் அதிர்ச்சி அடைந்தான். ஐம்பதாயிரம் ரூபா கேட்டு பற்றுச்சீட்டு அனுப்பி இருந்தார் வயோதிபர். நீங்கள் சுத்தியலினால் சில இடங்களில் தட்டினீர்கள், அதற்கு இவ்வளவு



கூலியா ? என்று கேட்டான் கப்பல்காரன். அதற்கு அந்த வயோதிபர் சுத்தியலினால் அடிப்பதற்குரிய கூலி வெறும் ஐம்பது ரூபாய்தான், ஆனால் எங்கே அடிப்பது என்பதற்கு கூலி 49,950 ரூபா என்றுபதில்சொன்னார். ஆம் அன்பர்களே வாழ்வில் சில நிமிடங்களில் நாம் எடுக்கும் முடிவு பெரும் வெற்றியைத் தந்துவிடலாம், அந்த அனுபவத்தை பெறுவதற்கு வாழ் நாள் முழுவதும் சிந்திக்க வேண்டியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மனிதம்' பிரார்த்தனை நிகழ்வு வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று



யாழ்ப்பாணம், ஜூன், 29

பொதுமக்கள் ஒன்றிணைந்து நடத்திய 'மனிதம்' பண்பாட்டு விழுமியங்களுடனான வாழ்வுக்கான பிரார்த்தனை நிகழ்வு நேற்று யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. காலை 10 மணிக்கு மௌன அஞ்சலி பிரார்த்தனையுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டு உரையாற்றியதுடன் 'மனக் காயங்களும் குணமாக்கலும்' எனும் தலைப்பில் வைத்திய கலாநிதி எஸ்.சிவதாஸ், 'தியானமும் மன அமைதிக்கான வழிபாடும்' எனும் தலைப்பில் த.நந்தகுமார், 'மனிதத்தின் மொழி அன்பே' எனும் தலைப்பில் அருட்தந்தை ரவிச்சந்திரன் அடிகளார், 'மனிதமே சட்டம்' எனும் தலைப்பில் தேவை நாடும் மகளிர் அமைப்பின் இணைப்பாளர் சட்டத்தரணி திருமதி ஆ.கார்த்திகா, 'சமூகச் சவால்களும் நம் சிறுவர்களும்' எனும் தலைப்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கு.கௌதமன், 'மெய் திறன்களை வளர்ப்பதில் ஆன்மீகம்' எனும் தலைப்பில் கோப்பாய் ஆசிரிய கலாசாலைப் பிரதி அதிபர் ச.லலீசன், 'வன்முறையற்ற சமுதாய உருவாக்கலுக்கு கூட்டுப்பொறுப்பு அவசியம்' எனும் தலைப்பில் பெண்கள் அபிவிருத்திக்கான இணைப்பாளர் ந.உதயணி, 'மனிதனே தர்மம்' எனும் தலைப்பில் யாழ் சின்மயா மிசன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி யாக்ரத் சைத்தன்ய சுவாமிகள், 'மனிதம் வளர்ப்போம்' எனும் தலைப்பில் அருட்சகோதரி ரூப ராணி ஜோசப் ஆகியோர் உரையாற் றினார்.

நிகழ்வில் திருச்சிலுவை கன்னியர் சபையினரின் பிரார்த்தனை, யாழ் சின்மயா மிசன் ஸ்வராஞ்சலி அணியினரின் பஜனை, செயற்திறன் அரங்க இயக்கத்தின் சக்திகொடு', சு.கோபிதாஸின் 'மனிதமும் இசையும்' வயலின் இசை, வைத்திய கலாநிதி சி.சஜீவனின் 'மாறுவோம் மகிழ்வோம்' தியான வழிபாடு ஆகியன நடைபெற்றன.

இங்கு உரையாற்றிய யாழ் மாவட்ட அரச அதிபர்,

இன்றைய காலகட்டத்தில் இப்படியான நிகழ்வுகள் காலத்தின் தேவையாகின்றன. இன்று நாங்கள் மனிதம் தொலைத்தவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். பணத்துக்காக வாழ்கின்றோம். பணத்துக்காக மற்றவர்களை மதிப்பதை விடுத்து எதையும் செய்யத் துணிகிறோம். மனிதத்தைப் பேணுவதற்கு மக்களால் முடியாது போன பட்சத்தில் கடவுளால் முடியும் என்றே இந்த நிகழ்வு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இன்றைய காலத்தில் பல சமூக பிறழ்வுகளை காணக் கூடியதாக உள்ளது. வழிதவறுகின்ற நிலைதான் இவ்வாறான சமூகப் பிறழ்வுகளுக்கு காரணம். இரக்க மற்றவர்களாகவும் உதவும் குணம் அற்றவர்களாகவுமே இன்று நாம் வாழ்கிறோம். விலங்குகளுக்கு கூட இல்லாத கொடூர சிந்தனை உடையவனாக மனிதன் செயற்படுகின்றான். அவற்றை விடுத்து மனிதத்தை மதித்து வாழவேண்டும். – என்றார். (ற–10)


# வருடாந்த மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன், 29

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளைமறுதினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ச்சியாக 15 தினங்கள் நடைபெறவுள்ளன. உற்சவங்களில் ஜூலை மாதம் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ற–10)

# நானாட்டான் பனை, தென்னை வள சங்கத்தின் வெள்ளிவிழா நிகழ்வுகள்

*நேற்றுமுன்தினம் நடைபெற்றன*



மன்னார், ஜூன் 29

நானாட்டான், முசலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய அலுவலக கட்டிட திறப்பு விழாவும்,25 ஆவது ஆண்டு வெள்ளி விழா நிகழ்வும் நேற்று முன்தினம் உயிலங்குளம் பெரிய கட்டைக்காட்டில் அமைக்கப்பட்ட புதிய அலுவலகத்தில் இடம் பெற்றது. நானாட்டான்,முசலி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கத்தின் தலைவர் வே.கதிரேசன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக வடமாகாண விவசாய கமநல சேவைகள் அமைச்சர் பொ.ஐங்கரநேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண மதுவரி உதவி ஆணையாளர் வி.கிறிஸ்ரியோசப், மன்னார் கூட்டுறவு அபிவிருத்தி உதவி அணையாளர் கே.ரவீந்திரநாதன், மன்னார் மதுவரி திணைக்கள பொறுப்பதிகாரி ரி.நந்தகுமார், மன்னார் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.விஜயகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வடமாகாண விவசாய கமநல சேவைகள் அமைச்சர் பொ.ஐங்கரநேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சபை உறுப்பினர் வைத்தியகலாநிதி ஜீ.குணசீலன் ஆகியோர் இணைந்து வைபவ ரீதியாக அலுவலக கட்டடத்தை திறந்தனர்.

அதைத் தொடர்ந்து நானாட்டான், முசலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தின் வெள்ளி விழா மலர் வைபவ ரீதியாக வெளியீடு செய்யப்பட்டதோடு சங்கத்தில் இது வரை சேவை செய்த தலைவர்கள்,ஓய்வு பெற்ற பணியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ற–10)

# கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

கிளிநொச்சி, ஜூன் 29

கிளிநொச்சியில் அமைந்துள்ள இலங்கை தொழிற்பயிற்சி நிலையத்தில் புதிய பிரிவுகள் எதிர்வரும் ஜூலை மாதம் ஆரம்பமாகவுள்ளன. தகவல் தொடர்பாடற் தொழில்நுட்பம், கணினி வன்பொருள் திருத்துநர், அழகுக் கலை மற்றும் சிகை அலங்காரம், தையல், அலுமினியம் பொருத்துநர் ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அவற்றுக்கான விண்ணப்பப் படிவங்களை நேரடியாகப் பெற்றோ அல்லது தொலைபேசி வாயிலாகவோ பதிவுகளை மேற்கொள்ளலாம் என நிலையப் பொறுப்பாளர் உ.தினேஸ் குமார் தெரிவித்துள்ளார். (ற–10)


## முதலாம் ஆண்டு நினைவில்



மண்ணில்
24.11.1936

விண்ணில்
29.06.2014

அமரர் இராயப்பு பாக்கியநாதர்

அன்பு தனில் ஓங்கி நின்றீர்
பண்பு தனில் பணிந்து நின்றீர்
நேச மதில் நிலைத்து நின்றீர்
நெஞ்சம் தனில் நிறைந்து நின்றீர்
மனம் தனில் சுமையை தந்து
விழி வழி நீர் சொரிய வைத்து
வேதனையில் வேக வைத்து
இறையடி ஏகியதேன்
ஓராண்டு கழிந்த பின்னும்
ஒழிந்ததில்லை உம்முருவம்
பல ஆண்டு கழிந்தாலும்
பாசமுகம் விலகாது
இறைவா! எம் உறவின் உயிரை
காண்பது எப்போது
என்றும் உங்கள் நினைவுச் சமுத்திரத்தில்
மூழ்கும் உம் உறவுகள்

இல. 29, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்.

## துயர் பகிர்கின்றோம்

எமது பாசமிகு குடும்பநண்பரும்
முதுபெரும் நாதஸ்வரக் கலைஞருமான



இசைமேதை
கலாநிதி கே.எம்.பஞ்சாபிகேசன்

அவர்களின் மறைவு எமக்கு அதிர்ச்சியாகவும் பேரிழப்பாகவும் அமைந்துள்ளது.

அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

சங்கத்தானை,
சாவகச்சேரி.

V.S. சபாரத்தினம்
குடும்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளிகளுக்கு இடையிலான வலய நிலை விளையாட்டு விழா

தென்மராட்சி, ஜூன் 29
தென்மராட்சி பிரதேச முன்பள்ளிகளுக்கிடையிலான வலய நிலை விளையாட்டு விழா கடந்த வியாழக்கிழமை மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது
குடும்ப முன்பள்ளிகளிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் வலய நிலைப் போட்டிகளில் கலந்து கொண்டனர்.
போட்டிகளில் 17 முன்பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர்.
வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) திருமதி சி.சிவநாதன் தலைமையில் நடைபெற்ற போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சுகிருஸ்ண குமாரும் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் செல்வி கு.சுஜாதாவும் செலான் வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் இ.யூடி ஸ்ரீஸான் றொட்றிக்கோவும் கலந்துகொண்டனர். (ற-9)


## மரண அறிவித்தல்

### திருமதி நாகபூசனி ஆறுமுகம்

கில்னர்லேனைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகபூசனி ஆறுமுகம் 28.06.2015 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் சசிதரன் (கட்டடக்கலை நிபுணர்), காலஞ்சென்ற சசிகாந்தன்(வைத்தியர்), மந்தாகினி(ஆஸ்திரேலியா) சுபாங்கினி(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு த்தாயாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

17A, வண்டவாலோஸ், தேகிவளை, கொழும்பு.

தகவல்:
ச. இந்திரகுமார்
S.சிதம்பரநாதன்
T.P: 011 272 5011

## மரண அறிவித்தல்

### திருமதி மேரிறோசா அன்ரன் கனோஸ்



நவாலி தெற்கு அரசடியைப்பிறப்பிடமாகவும் வில்லூன்றி பிள்ளையார் கோயிலடி சோலைபுரம் நாவாந்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிறோசா அன்ரன் கனோஸ் (27.06.2015) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பாவிலுப்பிள்ளை-திரேசம்மா தம்பதியரின் ஏக புதல்வியும்அன்ரன் கனோசனின் மனைவியும்,காலஞ்சென்ற மேரிதிரேசா, மற்றும் அலன்(யாழ் போதனா வைத்தியசாலை), ஆன் (ஆசிரியர்-முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சஜீவனின் அன்பு மாமியாரும் யோசெப் மரியநாயகம், வேதநாயகம், கிறிஸ்துராசா காலஞ்சென்ற நீக்கிலாஸ் இராசநாயகம் மற்றும் மரிய பெர்னாண்டோ, செல்வநாயகம், லூயிஸ் பேரின்பநாயகம், அரசநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (29.06.2015) திங்கட்கிழமை நாவாந்துறை புனித நீக்கிலஸ் தேவாலயத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வில்லூன்றிப்பிள்ளையார் கோயிலடி,
சோலைபுரம்,
நாவாந்துறை. (61440)

தகவல் :-
கணவர் ,பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### தெய்வானை(வள்ளிப்பிள்ளை) தில்லையம்பலம்

தோற்றம்
1934
10
04



மறைவு
2015
06
28

குரும்பைகட்டி புலோலி தென்மேற்கு புலோலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வானை தில்லையம்பலம் 28.06.2015 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்
அன்னார் காலஞ்சென்ற கந்தையா தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும் துரைராசா (ஓய்வுநிலை ஆசிரியர், (யா/ஹாட்லிக் கல்லூரி) சிவதேவி, சிவபாக்கியம், ஜெயமணி, கனகம்மா(பரிசாரகர் கோப்பாய் அரசினர் வைத்தியசாலை), ஸ்ரீஸ்கந்தராசா(மின்தூக்கி இயக்குநர் யாழ் போதனா வைத்தியசாலை), சிவயோகமணி, மகேந்திரராசா ஆகியோரின் அன்புத்தாயாரும் கௌரி(ஓய்வுபெற்ற ஆசிரியர் யா.நெல்லியடி மத்திய கல்லூரி) லோகநாதன், சோமசேகரம், கதிர்காமத்தம்பி காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் தங்கவடிவேல், சிவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் சசிக்கண்ணன்(கட்டட ஒப்பந்தகாரர்) சிவகுருநாதன்(பொலிஸ் பயிற்சிக்கல்லூரி) ஆனந்தவேல் ஜெயகாந்தன்(மின் வாசிப்பாளர் இ.மி.ச பருத்தித்துறை), சிவநந்தினி, சிவதர்சினி(யாழ்.பல்கலைக்கழகம்), சிவரஞ்சினி, ஜெயந்தன், சிவதர்சன், சிவரூபன், கபிலன், கேசவன், உதயதீபன்(கனடா), தேனுசன், ஜீவனா, நிதுர்சன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2015) திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மந்திகை கருகம்பன் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குரும்பை கட்டி,
புலோலி. (c 16256)

077 154 2176

தகவல் :-
குடும்பத்தினர்.


# மிகப்பழமை மிக்க பள்ளிவாசல் புனர்நிர்மாணத்தின் பின் திறப்பு

ஏறாவூர், ஜூன் 29
ஏறாவூரில் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட 400 வருடங்கள் பழமைவாய்ந்த ஆற்றங்கரை முஹைதீன் ஜும்மா பள்ளிவாசல் பாரம்பரிய கட்டமைப்பை மாற்றாமலும் மேலதிக விஸ்தரிப்புடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. இந்தப் புனரமைப்புப் பணிகளுக்கு சிறிலங்கா ஹிறா பவுண்டேஷன் நிறுவனமும் பள்ளிவாசல் நிர்வாகமும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளன.
புனர்நிர்மாணம் செய்யப்பட்ட பள்ளிவாசல் கடந்த வியாழக்கிழமை இரவு இஷாத் தொழுகையுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஏறாவூர் ஆற்றங்கரை முஹைதீன் ஜும்மா பள்ளிவாசல் நிர்வாக சபைத்தலைவர் தாஹிர் ஹாஜியார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறிலங்கா ஹிறா பவுண்டேஷன் நிறுவனத்தின் பணிப்பாளரும், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் கலந்து கொண்டார்.
இதன் போது எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வுக்கு 'றைஹானுல் கவ்ம்' எனும் சமூகத்தின் நறுமணம் வீசும் செடி எனும் பட்டம் ஏறாவூர் ஆற்றங்கரை முஹைதீன் ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகத்தினால் வழங்கப்பட்டது.
இந்த நிகழ்வில் முன்னாள் கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் சுபைர்,கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் றிஸ்வி, முன்னாள் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் செய்னுத்தீன் உட்பட உலமாக்கள்,ஊர்பிரமுகர்கள், புத்திஜீவிகள், கல்வியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-10)




# தேஜோமயானந்தா பிறந்த தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 29
உலக சின்மயா மிஷன் தலைவர் பூஜ்ய குருஜி சுவாமி தேஜோமயானந்தாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு குரு பாதுஹா பூஜை, பஜனை மற்றும் சத்சங்கம் ஆகியன நடத்தப்படவுள்ளன.
இந்த நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பி.ப 5.15 மணிக்கு இல 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரிலுள்ள யாழ்ப்பாணசின்மயாமிஷன் ஆச்சிர மத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரதசைதன்யசுவாமிகள்தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-10)

# மஹிந்தவை சீண்டும் ரணில்

*பிரதமர் வேட்பாளராகக் களமிறங்குமாறு அழைப்பு*

கொழும்பு, ஜூன் 29
எதிர்வரும் பொதுத் தேர்தலில் பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவதற்கு களமிறங்குமாறு தான் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
தம்புள்ளை, ஐக்கிய தேசிய கட்சி அமைப்பாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.
தேர்தலுக்கு அஞ்சுவதென்றால் வீட்டோடு இருக்குமாறும் பிரதமர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.
கடந்த ராஜபக்ஷ ஆட்சியை தேர்தலின் மூலம் தோல்வியடைய



செய்ததாகவும், இம்முறை பொது தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியை குழி தோண்டி புதைக்கவுள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

# கட்சி தாவிய எவருக்கும் ஐ.தே.கவில் இடமில்லை

*லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 29
ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து விலகியவர்களுக்கு கட்சியில் மீண்டும் இடம் இல்லை என லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.
கண்டி பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
கடந்த காலங்களில் தனிப்பட்ட சுயநலன்களுக்காக பலர் கட்சியை விட்டு சென்று விட்டார்கள்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பலர் தற்போது வரையில் ஐக்கிய தேசிய கட்சியின் ஊடாக எதிர்வரும் பொது தேர்தலில் போட்டியிடுவதற்கு கோரிக்கை முன்வைத்துள்ளனர்.
எதிர்வரும் நாள்களில் கட்சியை விட்டு சென்றவர்களை மீண்டும் கட்சியில் இணைத்துக் கொள்ளப் போவதில்லை- என்றார். (ற)

# திருக்கோணேஸ்வரர் ஆசி பெற்ற மைத்திரி

கொழும்பு, ஜூன் 29
திருகோணமலைக்கு சென்ற ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்களுள் ஒன்றான திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.
திருகோணமலை கடற்படை தளத்தின் புதிய இரண்டுமாடிக் கட்டடத்தை அங்குரார்ப்பணம் செய்வதற்காக ஜனாதிபதி மைத்திரி நேற்றுமுன் தினம் திருமலை சென்றிருந்தார்.
இதனையடுத்து கோணேஸ்வரர் ஆலயத்திற்கும் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.



ஜனாதிபதியுடன் அவரது பாரியார் ஜெயந்தி சிறிசேன மற்றும் அரச உயர்மட்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சிதையாது பாதுகாப்பது கடமை

## அதி.வணக்கத்துக்குரிய டானியல் தியாகராஜா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29

தலைமைக்குக்கட்டுப்பட்டு,தலைமை யாரை வேட்பாளர்களாகக் களமிறக்குகின்றதோ அவர்களை ஆதரித்து நாம் வெற்றி பெறச் செய்ய வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கின்ற கூட்டை குலைப்பதற்கு பல ஏதுக்கள் தோன்றி வருகின்றன. எந்த வொரு சந்தர்பதிலும், இந்தக் கூட்டை சிதையவிடாமல் பாதுகாப்பது தமிழ் மக்களின் கடமை. இவ்வாறு தென் னிந்திய திருச்சபையின் பேராயர் அதி.வணக்கத்துக்குரிய டானியல் தியாகராஜா தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அலுவலகம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குகையிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தக் கட்சி அலுவலகம் திறப்பு காலத்தின் தேவையானது. இலங்கைத் தமிழ ரசுக் கட்சியும், வட்டுக்கோட்டையும் ஒன் றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்று மையின் சின்னம். ஒருமைப்பாட்டின் குறியீடு. ஐக்கியத்தின் வெளிப்பாடு. தமிழர் ஒருமைப்பாட்டை – ஐக்கி யத்தை – ஒருங்கிசைவை இல்லாமல் செய்வதற்கு பலவித ஏதுக்கள் இந்தக் காலத்திலே தோன்றி வருகின்றன. அதி கரிக்கவும் செய்கின்றன. ஆனால் நாம் எப் போதும் திடசங்கற்பம் பூண்டு இதனை, சிதைக்கப்படாத வண்ணம் பாதுகாப்பது, எப்போதும் தலையாய கடமை.

தலைமைத்துவத்திற்கு கட்டுப்படுவோம். கீழ்ப்படிவோம். அது முக்கியம். அந்தத் தலைமைத்துவத்தைப் பலப்படுத்தி – உரப்படுத்தி அதை வெற்றி பெறச் செய்வோம். கூட்டமைப்பு இன்று முக்கியம். எதிரி எள்ளளவும் நுழைய முடியாத வண்ணம் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். தலைமைத்துவம் என்ன சொல்லுகின்றதோ கீழ்ப் படிவோம். கேட்டுக் கொள்வோம். ஏனென்றால், எங்கள் ஒற்றுமை நிலை நாட்டப்பட வேண்டும். கட்சி யாரை வேட்பாளர் என்று அறிவிக்கின்றதோ அவர்களுக்கு நாம் ஆதரவு வழங்க வேண் டும்.கட்சித் தலைமைப் பீடம் சரி யானவர்களைத் தேர்வு செய் யும். அதனை நாம் ஏற்றுக் கொள்ளுவோம். இவர் வர வில்லை, அவர் வரவில்லை என்று சொல்லாமல், கட்சி – கட்சித் தலைமைப்பீடம் இது தாரக மந்திரம். இதனை நாம் ஏற்றுக் கொள்வோம். இதனை ஏற்றுக் கொண்டால், எதிரி எள்ளளவும் நுழைய முடியாது. இதனை மனதில் கொள்ள வேண்டும் – என்றார்.

(ற-5,101)

# மஹிந்தவை அரசியலுக்கு அழைக்கின்றார் நாமல்

மனிதத்தின் பெறுமதியை கற்றுத்தந்த நீ, மீண்டும் எம்மக்களுக்காக அரசியலுக்கு வர வேண்டும். – இவ்வாறு நாமல் ராஜபக்ஷ தனது தந்தைக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

தன்னுடைய முகப்புத்தகத்தில் பதிவொன்றை வெளியிட்டுள்ளார் நாமல் ராஜபக்ஷ. அதிலேயே அவர் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

அதில் அதிகாரம் இல்லாத காலத்தில் மக்கள் தமது தந்தையை இவ்வளவு நேசிப் பார்கள் என எதிர்பார்க்கவில்லை. மக்கள் என் தந்தை மீது அளவு கடந்த மதிப்பையும் பாசத்தையும் வைத்துள்ளார்கள். அவர்கள் உங்களை ஆட்சிக்கு வருமாறு அழைக்கின்றார்கள்.

அதிகாரம் இல்லாத தருணத்தில், மக்கள் உன்னை இவ்வ ளவு நேசிப்பார்கள் என நாம் ஒரு போதும் நினைக்கவில்லை.

மனிதத்தின் பெறுமதியை சொல்லித் தந்த தந்தையே நாம் உன்னிடம் கற்றுக்கொள்கின்றோம், மீண்டும் வருக. அதுவே மக்களின் பிரார்த்தனை. அன்னை பூமியை ஆற்றுப்படுத்துவதற்கு மீண்டும் வருக... – இவ்வாறு அவர் தனது முகப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

(ற)

**வேலையாள் தேவை**

மானிப்பாயில் இயங்கிக்கொண்டிருக்கும் ஸ்தாபனத்துக்கு கணினிப்பதிவாளர் (Data Entry), விற்பனையாளர் (அனுபவமுள்ள பெண்கள் மட்டும்)தேவை.

(65444) தொடர்பு:- 075 048 9689

**ஐன்ஸ்டீன் சயன்ஸ் அக்கடமி**

தரம் 6-11, கணிதம் & விஞ்ஞானம்
வவுனியாவில்
*தனி,குழுவகுப்புக்கள்
*ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனம்.
விரைவில் புதிய பிரிவுகள் ஆரம்பம்
பதிவுகளுக்கு : 077 407 7073
வைரவ புளியங்குளம்,
ஒக்ஸ் போட் ரியூசன் அருகில்

# 4 - 5 மணித்தியாலத்துக்கு ஒருவர் தற்கொலை முயற்சி

## யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தினர் தகவல்

யாழில் ஒவ்வொரு 4–5 மணித்தியாலங்களுக்கு ஒருவர் வீதம் தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டு வைத்திய சாலையில் சேர்க்கப்படுகின்றனர். அதற்கு போதைப் பாவனையும் காரணமாக அமைகின்றது. – என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் போதை வஸ்து பாவனை மற்றும் கடத்தலுக்கு எதிரான ஊடகவியலாளர் மாநாடு நேற்று போதனா வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அதிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

கடந்த காலங்களை விட தற்போதுள்ள ஜனாதிபதியும், அரசும் போதைப் பொருள்கள் எதிர்ப்பு தொடர்பான நடவடிக்கைகளில் உறுதியாக உள்ளனர். ஆனால் போதைப் பொருளின் பாதிப்பு தொடர்பான புள்ளி விவரம் அதிகரித்துச் செல்கின்றது.

இலங்கையில் 1980 ஆம் ஆண்டில் 580 ஆக இருந்த போதைப் பொருள் பாவனை 2013 ஆம் ஆண்டில் 65 ஆயிரத்து 938 ஆக உயர்வடைந்துள்ளது. 23 வருட காலப்பகுதிக்குள் 20 மடங்கு உயர்வை போதைப் பாவனை காட்டியுள்ளது.

போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானோர்களை அதிலிருந்து மீட்ப தற்கு மருந்துகள், ஆலோசனைகள் மட்டும் போதாது. தீவிர கண்காணிப்புடன் கூடிய சிகிச்சைமுறை அவசியம். போதைப்பாவனையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீண்ட காலம் கண்காணிப்புடன் கூடிய சிகிச்சை யை வழங்க உரிய இடங்கள் உருவாக்கப்படவேண்டும்.

வடபகுதியில் ஆரம்பகாலத்தில் அதிகளவில் பரீட்சயமற்ற போதைப் பொருள்கள் இன்று பரவலாக உபயோகிக்கப்படுகின்றன. இதை துர்ப்பாக்கிய நிலையென்றே கூறவேண்டும்.

ஒருவர் போதைப்பழக்கத்துக்கு ஆளாகும்போது அவர் மட்டும் பாதிக்கப்படவில்லை அவருடன் சேர்ந்து அவர் குடும்பம், சமூகம் என்பனவும் பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக இளவயதினரை மையப்படுத்தி விற்பனை செய்யப்படும் போதைவஸ்துக்கள் தொடர்பில் அனைத்துத் தரப்பினரும் விழிப்பாக இருத்தல்வேண்டும்.

எமது சமூகத்தை ஆயுதமாகத் தாக்கி அழிக்கும் போதைப் பொருள்களில் இருந்து எதிர்கால சமுதாயத்தைப் பாதுகாக்க அனைவரும் அணிதிரளவேண்டும்.

யாழ் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் உள்ள கட்டில்கள் தற்கொலை முயற்சியாளர்களால் நிர ம்பி வழியும் அபாய சூழலில் நாம் வாழ்கின்றோம். எனவே சமூகத்தின் அனைத்து மட்டத்தினரும் ஒன்றிணைந்தால் மட் டுமே போதை என்ற ஆயுதத்தில் இருந்து எமது சமுதாயத்தை விடுவிக்கலாம்– என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-10,4)

# அபயராம தரப்பை ஒருபோதும் இணைத்துக் கொள்ள மாட்டோம்

*அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு*

அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து ஆட்சியமைக்கத் தயாராக இருப்பதாக தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, ஆனால் மோசடியில் ஈடுபட்ட அப யராம தரப்பினரை ஒருபோதும் தம்முடன் இணைத்துக்கொள்ள மாட்டோம் என தெரிவித்துள்ளார்.

கும்புருப்பிட்டிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்துள்ள மங்கள இதனைக் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியானது தனித்துப் போட்டியிட்டு நாடாளுமன்றில் அதிக ஆசனங்களைப் பெற்றுக்கொண்டு தனியாக ஆட்சிசெய்ய முடியுமென்ற போதிலும், இந்த நாட்டிற்கு ஒற்றுமையான அரசியலே தேவையாகவுள்ள காரணத்தால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உட்பட அனைத்து கட்சிகளையும் இணைத்து ஆட்சியமைப்போம் என கூறியுள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அதிக பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கும் என அவர் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது ஆதரவாளர்களான தினேஸ் குணவர்தன, வாசுதேவ நாணயக்கார, பந்துல குணவர்த்தன, பிரசன்ன ரணதுங்க, விமல் வீரவன்ஸ உள்ளிட்டோர் அடிக்கடி அபயராமையில் கூடி அரசுக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர்.

(ற).




**பகிரங்க வேண்டுகோள்**

கரைச்சி பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் காணப்படும் சந்தைகளில் வரி அறவீட்டில் ஈடுபட்ட இருவர் பணமோசடி செய்தமை இனங்காணப்பட்டுள்ளது. எனவே தங்களது பகுதியில் வரிப்பண அறவீடு தொடர்பாகவும், வேறு மோசடிகள் தொடர்பான பிரச்சினைகள் இருப்பின் தவிசாளர் 077 484 3248, செயலாளர் 077 467 6541, தலைமை அலுவலகம் 021 228 5761 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகொள்ளவும். அல்லது செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என்ற முகவரிக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

செயலாளர்,
கரைச்சி பிரதேச சபை,
கிளிநொச்சி.

(c 16254)

# கட்சிகளின் செயலாளர்களுக்கு மஹிந்த தேசப்பிரிய அழைப்பு

கொழும்பு, ஜூன் 29

எதிர்வரும் ஜூலை மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள விசேட கலந்துரையாடலில் அனைத்துக் கட்சிகளின் செயலாளர்களையும் கலந்துகொள்ளுமாறு தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அழைப்பு விடுத்துள்ளார்.

பொதுத் தேர்தலுக்கான அழைப்பு விடுக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வார காலத்துக்குள், தேர்தலில் போட்டியிடுவதா? இல்லையா? என்பது தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகள், தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்க வேண்டும் என்பது தேர்தல் சட்டமாகும்.

அதேபோன்று, கட்சிகளின் தற்போதைய சின்னங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவதாயின் அதனையும், அந்த ஒரு வார காலத்துக்குள்ளேயே மேற்கொள்ள வேண்டும்.

இவ்விடயங்கள் தொடர்பிலும் மேலும் சில விடயங்கள் குறித்தும், மேற்படி கலந்துரையாடலின் போது ஆலோசிக்கவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்தது.

(ற)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.தே.க. எதிர்ப்பே எமது கொள்கை

*இப்படிக் கூறுகின்றார் ரட்ணசிறி*

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பு கொள்கையே எமது கொள்கை என முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

பண்டாரகம பிரதேசத்தில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிரதிநிதிகள் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாம் அன்றும் இன்றும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான கொள்கைகளையே பின்பற்றுகின்றோம். சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றி பெறச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். – என்றார்.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசொன்றை அமைக்கும் நோக்கில் இந்தக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

பந்துல குணவர்தன, குமார வெல்கம, அனுர பிரியதர்சன யாப்பா, டிலான் பெரேரா உள்ளிட்ட பலரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர். (ற)

## மஹிந்தவை வெற்றிபெற வைக்க பிரபாகரன் இல்லை

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

மஹிந்த ராஜபக்ஷவை தேர்தலில் வெற்றி பெற வைப்பதற்கு இம்முறை நாட்டில் பிரபாகரன் இல்லை என ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில்கலந்துகொண்டுகருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிறிலங்கா சுதந்திர கட்சியில் இன்று பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. கூட்டணியில் சிலர் மஹிந்தவை பிரதமராக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வலியுறுத்துகின்றார்கள்.

மீண்டும் மஹிந்த ராஜபக்ஷவை அதிகாரத்திற்குக் கொண்டு வந்து பழைய முறையிலேயே ஊழல் மோசடிகளை மேற்கொண்டு வெள்ளை வான் கலாசாரத்தை ஆரம்பித்து இந்த நாட்டில் ஆட்சி செய்வதே சிலருக்கு அவசியமாக இருக்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியை மீண்டும் அதிகாரத்துக்கு கொண்டு வந்து மீண்டும் இந்நாட்டில் குடும்ப ஆட்சியை ஆரம்பிக்க வேண்டுமா? அப்படி இல்லை என்றால் இந்நாட்டில் நல்லாட்சி உருவாக்கி நாட்டின் எதிர்காலத்தை மேம்படுத்த வேண்டுமா என தேர்தலின் போது மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு பிரதமர் வேட்பாளராக வேண்டும் என்றால் தேர்தலில் களமிறங்க வேண்டும். எனினும் அவரை இம்முறை வெற்றி பெற செய்வதற்கு நாட்டில் பிரபாகரன் இல்லை. எனவே இம்முறை மஹிந்த தோற்பது உறுதி.

நான் பிரதமராவதற்கு நினைப்பது சுகபோகம் அனுபவிப்பதற்கல்ல. நாட்டை வளர்ச்சியான பாதைக்குக் கொண்டு சென்று இளைஞர்களுக்கு சிறப்பானதொரு எதிர்காலத்தை பெற்றுக்கொடுப்பதே எனது நோக்கமாகும். – என்றார். (ற)

## கே.பியின் சொத்துக்களை முடக்குவதற்கு நடவடிக்கை

### வெளிவிவகார அமைச்சு கூறுகின்றது

கொழும்பு, ஜூன் 29

விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் குமரன் பத்மநாதனின் சொத்துக்களை முடக்குவதற்கு விசாரணை நடத்தப்பட்டு வருவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சை மேற்கோள் காட்டித் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் கே.பி என அழைக்கப்படும் குமரன் பத்மநாதனின் சொத்துக்களை முடக்குவதற்கான விசாரணைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கூடிய விரைவில் அவரின் சொத்துக்களை முடக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

அதேவேளை குமரன் பத்மநாதன் நாட்டை விட்டு வெளியேறுவதற்கான தடையானது கடந்த பெப்ரவரி மாதம் விதிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் சர்வதேச ரீதியில் இன்னமும் உயிர்ப்புடன் இருப்பதனால் அது குறித்து பூரண கண்காணிப்பு நடத்தப்பட்டு வருவதுடன் புலனாய்வு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

வெளிநாட்டு புலனாய்வு வலையமைப்புக்களுடன் இணைந்து பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.– என்று அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, குமரன் பத்மநாதனை மஹிந்த அரசாங்கம் ஏன் பாதுகாத்து வைத்திருந்தது என கேள்வி எழுப்பியுள்ளார் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர.

கடந்த அரசு கிளிநொச்சியில் தன்னார்வ தொண்டு நிறுவனமொன்றை ஆரம்பித்து அதனை குமரன் பத்மநாதனிடம் ஒப்படைத்தி ருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் பெரியளவிலான சர்வதேச சொத்துக்கள் பற்றிய விவரங்கள் தெரிந்த குமரன் பத்மநாதனை கடந்த அரசு பாதுகாப்புக் கொடுத்து வைத்திருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதி வலையமைப்பு செயற்பட்டு வருவதாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ள நிலையில் மஹிந்த ராஜபக்ஷவும், கோத்தபாய ராஜபக்ஷவும் இவரைப் பாதுகாத்து வைத்திருந்தமைக்கான காரணம் என்ன என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தாவது:-

எமது அரசு குமரன் பத்மநாதன் நாட்டை வெளியேறத் தடை விதித்துள்ளது. அரசு சர்வதேச சமூகத்துடனான உறவுகளை வலுப்படுத்தி வருகின்றது. குமரன் பத்மநாதனை பயன்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளின் சொத்துக்களை முடக்குவதற்கு அத்தனை நடவடிக்கைகளையும் முனைப்புடன் மேற்கொண்டுள்ளோம்.– என்றார்.(ற)

## தேசிய அரசு அமைப்பதில் எந்த மாற்றமும் இல்லை

### பிரதி அமைச்சர் எரான் விக்ரமரட்ன தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 29

தேசிய ஐக்கிய அரசு அமைக்கும் திட்டத்தில் எவ்வித மாற்றமும் கிடையாது என பிரதி அமைச்சர் எரான் விக்ரமரட்ன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னரும் தேசிய ஐக்கிய அரசு அமைக்கும் முனைப்புக்கள் மேற்கொள்ளப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஓகஸ்ட் மாத தேர்தலின் பின்னர் ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்படுவது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதம் முதலே ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலுக்கு ஆயத்தமாகி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் தொடர்பான விசாரணை அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படுவதனை தவிர்க்கவே, நாடாளுமன்றை கலைக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி கோரியது என்ற குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

### மைத்திரியுடன்

சேன் தெரிவித்துள்ளார்.

அமைதியான, ஜனநாயகமான மற்றும் சுபீட்சமான இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமை பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு நல்லாட்சியை ஏற்படுத்துவதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ–சி)

### நாடாளுமன்ற

முன்பு இலங்கையில் இடம்பெற்ற தேர்தல்களில், ஐரோப்பிய ஒன்றியம், பொதுநலவாய அமைப்பு மற்றும் தெற்காசிய கண்காணிப்பு அமைப்பு.ஆகியவை கண்காணிப்பு பணிக்காக அழைக்கப்பட்டிருந்தன. இதேவேளை, சுதந்திரமான, நியாயமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு (பவ்ரல்) தாம் இம்முறை 50 வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை அழைப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. (உ–5)

### தேர்தலை எதிர்கொள்வது

கவுள்ளன என்று அனேகமாக எதிர்பார்க்கப்படுகிறது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம் ஆகியன சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய கட்சிகளுடன் பேச்சு நடத்திய பின்னரே தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றிய தமது இறுதி முடிவை எடுக்கவுள்ளன.

தமிழ் முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கங்கள் ஆகியன ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டியலின் கீழேயே களமிறங்கும் என அறியமுடிகிறது.

மலையக மக்கள் முன்னணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது. அது முடிந்ததும் தேர்தல் தொடர்பில் தமது உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை ம.ம:மு. அறிவிக்கவுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பதுபற்றி இன்னும் முடிவெடுக்கவில்லை. எந்தத் தரப்போடு இணைந்து களமிறங்கு வது என்பதுபற்றி விரைவில் முடிவெடுக்கப்படும் என்று அக்கட்சியின் தலைவர் முத்துசிவலிங்கம் நேற்றுத் தெரிவித்தார். ஜாதிக ஹெல உறுமயவும் தேர்தல் பற்றி இன்னும் இறுதி முடிவை எடுக்கவில்லை.

பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வீடு சின்னத்தில் தனித்துக் களமிறங்கவுள்ளது. ஜே.வி.பியும் தனித்தே போட்டியிடவுள்ளது. பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சியும் தனி வழிப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. விக்கிரமபாகு கருணாரத்ன தலைமையிலான நவசமசமாஜக் கட்சி, சிறிதுங்க ஜயசூரிய தலைமையிலான ஐக்கிய சோசலிஸக் கட்சி ஆகியனவும் தனித்தே களமிறங்கவுள்ளன. தான் யாழ். மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு உத்தேசித்துள்ளார் என சிறிதுங்க ஜயசூரிய குறிப்பிட்டார்.

அதேவேளை, மற்றுமொரு பிரதான அரசியல் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி அமைத்தே தேர்தலில் களமிறங்கவுள்ளது. எனினும், மஹிந்த விவகாரத்தால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இரண்டாக உடையும் நிலை உருவாகியுள்ளதால், தேர்தலில் சு.க. எவ்வாறு போட்டியிடும் என்ற வினாவுக்கு, மஹிந்தவின் முடிவிலேயே பதில் தங்கியுள்ளது எனக் கூறப்படுகிறது.

### தேர்தலில்

லிருந்தே இந்த அரசின் குறைப்பாடுகளைச் சுட்டிக்காட்டி வந்தோம். இவர்கள் மீண்டும் நாட்டில் அசாதாரண நிலையை ஏற்படுத்தவே முயற்சிக்கின்றனர். விடுதலைப் புலிகள் தலைதூக்கும் நிலை உருவாகியுள்ளது.

பொய்யால் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றிய இந்த அரசை மேலும் தொடரவிட முடியாது. ஜனவரி 8ஆம் திகதி பொதுமக்கள் விட்ட தவறை அவர்கள் இம்முறை தேர்தலில் சரிப்படுத்துவார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரசுடன் இணைந்து நாட்டுக்கு எதிராக சூழ்ச்சி செய்துள்ளது. அவர்கள் தேர்தலுக்கு முன்னர் இரகசிய ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளமை தற்போது ஒவ்வொன்றாகத் தெரிய வருகின்றது.

அண்மையில் நாட்டுக்காக வடக்கில் போராடிய இராணுவச் சிப்பாய் ஒருவருக்கு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலி உறுப்பினர்களை சிறையிலிருந்து விடுவிக்க குழு நியமித்து பேச்சு நடத்தப்படுகின்றது. ஆனால், நாட்டுக்காக விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போராடிய சிப்பாய்களை சிறையில் அடைக்கும் நிலை உருவாகியுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள இந்தப் பயங்கரமான நிலையைத் தடுப்பதற்கு மக்களுக்குக் கிடைத்துள்ள இறுதி வாய்ப்பு, எதிர்வரும் பொதுத் தேர்தலாகும். பயங்கரவாதத்திலிருந்து மீட்டு நாட்டைத் தொடர்ந்தும் பாதுகாக்க இன, மத பேதமின்றி மக்கள் அனைவரும் மஹிந்தவுடன் இணைந்து அவரை பிரதமராக்க வேண்டும் – என்றார்.

தேசிய சுதந்திர முன்னணி எக்கட்சியுடன் இணைந்து எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போது, மஹிந்த ராஜபக்ஷ போட்டியிடும் கட்சியிலேயே தமது கட்சி கூட்டணி அமைக்க உள்ளதாகவும் தான் வழமைபோன்று கொழும்பு மாவட்டத்திலேயே போட்டியிடுவார் என்றும் தெரிவித்தார். (உ–சி)

### மஹிந்தவால்

பகிரங்கமாக அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது சுதந்தரக் கட்சியின் பிளவை உறுதிப்படுத்துவதாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

இதனால் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள ஜனாதிபதி, சு.கவின் உயர்மட்ட பிரமுகர்களுடன் தொடர் பேச்சு நடத்திவருகிறார் என்றும், சுசில் பிரேமஜயந்தவின் பொறுப்புகளை முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவிடம் ஒப்படைக்க உத்தேசித்துள்ளார் எனவும் அறியமுடிகிறது. அத்துடன், சு.கவிலுள்ள மேலும் சிலர் மஹிந்த பக்கம் சாயும் நிலையில் இருப்பதால் அவர்களுக்கு கடிவாளம் போடுவது பற்றியும் ஜனாதிபதி கவனம் செலுத்திவருகிறார்.

பொதுத்தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மஹிந்த ராஜபக்ஷ அணிக்கும், மைத்திரிபால சிறிசேன அணிக்கும் இடையில் பனிப்போர் நடந்துவந்தது. நாடாளுமன்ற கலைப்புக்குப் பின்னர் அந்தப் போர் உக்கிரமடைந்துள்ளது.

மஹிந்தவை பிரதமராக்கவேண்டும் என சு.கவிலுள்ள அவரது விசுவாசிகள் வலியுறுத்திவருகின்றனர். இதற்குப் பச்சைக்கொடி காட்ட ஜனாதிபதி மறுத்துவருவதால் மஹிந்த தலைமையில் மூன்றாம் கூட்டணி அமைப்பது பற்றியும் பேச்சு நடத்தப்பட்டுவருகின்றது.

இந்நிலையில், ஜூலை முதலாம் திகதி இது தொடர்பிலான இறுதி முடிவு எட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இரண்டாக உடையுமா? மஹிந்த மூன்றாம் கூட்டணி அமைப்பாரா என்ற பரபரப்பான எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

இதற்கிடையில் இரு தரப்பினருக்குமிடையில் இன்று நடைபெறவுள்ள சந்திப்பில், நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான இறுதிமுடிவு எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பரப்புரைகளை மேற்கொள்வதற்கு மைத்திரிபால சிறிசேன தரப்பு இணங்கியுள்ளபோதிலும் மஹிந்தவைப் போட்டியிட அனுமதிக்க முடியாது எனக் கூறியுள்ளது.

இதை ஏற்கமறுக்கும் மஹிந்த தரப்பு, மஹிந்த ராஜபக்ஷவுக்கு வேட்பாளர் பட்டியலில் இடமளிக்கப்படவேண்டும் என்றும், அவரை பிரதமர் வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகிறது. ஜூலை முதலாம் திகதி நடக்க உள்ள சந்திப்பில் மஹிந்த போட்டியிட மைத்திரிபால இணக்கம் தெரிவிக்காவிடின் தனித்துப் போட்டியிடும் முடிவை மஹிந்த ராஜபக்ஷ அறிவிப்பார் என்றும் கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (உ–சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹிந்தவைப் பிரதமர் ஆக்குவதே குறிக்கோள்

### கூறுகிறார் பஸில்



கொழும்பு, ஜூன் 29

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை, நாட்டின் அடுத்த பிரதமராக்குவதற்கு தான் முழுஅளவிலான பரப்புரைகளில் ஈடுபடப் போவதாக முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியில் அவர்,

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து இன்னமும் முடிவு செய்யவில்லை.

மஹிந்த ராஜபக்ஷவை அடுத்த பிரதமராக்குவதிலேயே எனது முழுக் கவனமும் இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பிய பஸில் ராஜபக்ஷ, தனது சகோதரர் மஹிந்த ராஜபக்ஷவின் மீரிஹான வீட்டில் நீண்ட நேரம் அவருடன் ஆலோசனை நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(த)

## இடமாற்றங்களுக்கு தடை

கொழும்பு, ஜூன் 29

எதிர்வரும் ஜூலை மாதம் 6 ஆம் திகதியில் இருந்து தேர்தல் முடியும் வரை அரச சேவை மற்றும் காவற்துறை சேவையில் சகல இடமாற்றங்களும் தடை செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

ராஜகிரியவில் உள்ள தேர்தல் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அதேவேளை வாக்கு எண்ணும் மையங்களாக இம்முறை பாடசாலைகளை பயன்படுத்துவதில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த காலப்பகுதியில் உயர்தரப் பரீட்சைகள் நடைபெறும் என்பதால், பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு ஏற்படும் இடையூறுகளை தவிர்க்க இதன் மூலம் எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (த)

# இலங்கை உள்ளிட்ட நாடுகளுடன் இணைந்து இந்தியா போர்ப் பயிற்சி

### சீனாவின் ஆதிக்கத்தை முறியடிக்க

புதுடில்லி, ஜூன் 29

இந்தியப் பெருங்கடலுக்குள் சீனாவின் ஆதிக்கத்தை முறியடிக்கும் வகையில், இலங்கை உள்ளிட்ட முக்கியமான ஆசிய பசிபிக் நாடுகளுடன் இந்தியா கடற்படைப் போர்ப்பயிற்சிகளை நடத்தவுள்ளது. ரைம்ஸ் ஒவ் இந்தியா இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் சீனா தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்தி வருகிறது. குறிப்பாக, தனது கடற்படையின் பலத்தை இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தை மையப்படுத்தி வலுப்படுத்தி வருகிறது.

இந்த நிலையில், சீனாவின் இந்த மூலோபாயத்தை முறியடிக்கும் நோக்கில் இந்தியா, ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் உள்ள முக்கியமான நாடுகளுடன் இருதரப்பு கூட்டு கடற்படைப் போர்ப்பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

ஏற்கனவே பிரான்ஸ் கடற்படையுடன் இணைந்து அரபிக் கடல் பகுதியில் இந்தியா, வருண என்ற கூட்டுப் பயிற்சியை கடந்த ஏப்ரல்–மே மாதங்களில் மேற்கொண்டது.



இதையடுத்து, அமெரிக்காவுடன் இணைந்து மலபார் என்ற பெயரிலும், பிரிட்டனுடன் இணைந்து கொங்கன் என்ற பெயரிலும், ரஷ்யாவுடன் இணைந்து இந்திரா என்ற பெயரிலும், இந்தியா போர்ப் பயிற்சிகளை நடத்தவுள்ளது.

அத்துடன், ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் முக்கியமான நாடுகளான, ஆஸ்திரேலியா, இலங்கை, ஜப்பான், இந்தோனேசியா, தாய்லாந்து, மியன்மார், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் கடற்படைகளுடன் இணைந்தும் அடுத்த சில மாதங்களில் இந்தியா போர்ப்பயிற்சிகளை மேற்கொள்ளவுள்ளதாகவும், ரைம்ஸ் ஒவ் இந்தியா செய்தி வெளியிட்டுள்ளது. (த)

## ஆவணங்களின்றி வாகனத்தை செலுத்தியவருக்கு அபராதம்

தென்மராட்சி, ஜூன் 29

ஆவணங்களின்றி வாகனம் செலுத்திய கொடிகாமம் தவசிகுளம் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 11 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வீதிச் சோதனையில் ஈடுபட்ட போக்குவரத்துப் பொலிஸார் இந்த இளைஞரைச் சோதனையிட்ட போது சாரதிய அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வாகன வரி ஆகியவை இன்றி வாகனம் செலுத்தியதைக் கண்டுபிடித்து இவருக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அவர் குற்றத்தை ஒப்பக் கொண்டதையடுத்து மூன்று குற்றங்களுக்குமாக 11 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (த–9)

## சரத் பொன்சேகாவை அழைக்கும் மைத்திரி



[illegible]பு, ஜூன் 29

[illegible]ரும் பொது தேர்தலின் [illegible]னநாயகக் கட்சி தலைவர் [illegible]மார்ஷல் சரத் பொன் [illegible] ஜனாதிபதி மைத்திரிபால [illegible]வின் தரப்பிற்கு இணைத் [illegible]ள்வதற்காக அமைச்சர் [illegible]ஸநாயக்க கலந்துரை [illegible]ளை ஆரம்பித்துள்ளார்.

[illegible]ச்சர் எஸ்.பி.திஸநாயக்க மற் [illegible] அமைச்சர் திலங்க சுமத்தி [illegible]நேற்றுமுன் தினம் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்குத்தொலைபேசி அழைப்பின் ஊடாக ஜனாதிபதியின் கோரிக்கை தொடர்பில் நீண்ட நேரம் தெளிவு படுத்தியுள்ளார்கள்.

ஜனாதிபதியின் கோரிக்கையை நிராகரிக்காத பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, இம்முறை தனித்து போட்டியிட தீர்மானித்துள்ளதாகவும், ஜனாதிபதியின் கோரிக்கை தொடர்பில் கட்சிப் பிரதானிகளை அழைத்துத் தீர்மானித்த பின்னர் கூறுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.(த)

## கோவில்களில் திருட்டு அதிகரிப்பு விசாரணை நடத்துமாறு கோரிக்கை

### பொலிஸ்மா அதிபருக்கு இராஜாங்க அமைச்சர் வேலாயுதம் கடிதம்

கொழும்பு, ஜூன் 29

நாடளாவிய ரீதியில் கோவில்கள் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுவரும் சம்பவங்கள் நாளுக்குநாள் பெருகி வரும் நிலையில், இது தொடர்பில் பொலி ஸார் உடனடி விசாரணைகளைத் தீவிரப்படுத்துமாறு கோரி பெருந் தோட்ட இராஜாங்க அமைச்சர் வேலாயுதம் பொலிஸ்மா அதிபர் இலங்ககோனுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

கடந்த பெப்ரவரி மாதம் முதல், கோயில் உடைப்பும் திருடுதலும் அதிகரித்துவருவதுடன் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் இதுவரை இருபதுக்கு மேற்பட்ட சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

புதிய நல்லாட்சி அரசின் நற் செயற்பாடுகளுக்குக் களங்கம் ஏற்படுத்தும் விதத்தில் இவ்வாறான தொடர் சம்பவங்கள் திட்டமிடப்பட்டு இடம் பெற்று வருகின்றனவா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

எனவே, உங்களு டைய நேரடிக் கண்காணிப்பின் கீழ் முறையான விசாரணைகளை மேற் கொண்டு இதில் சம்பந்தப் பட்டோரை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை பெற்றுக் கொடுப்பது மிக அவசியமும் அவசரமுமான தேவையாகும் என பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை முன்வைத் துள்ளார். (த)

## தங்கம், மதுப் போத்தல்கள் கடத்திய 11 இந்தியர் கைது

கொழும்பு,ஜூன் 29

இலங்கையில் இருந்து தங்கம் மற்றும் மதுபானப் போத்தல்களை கடத்திச் சென்ற இந்திய பிரஜைகள் 11பேர் மதுரை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து சுமார் 35 வெளிநாட்டு மதுபானப் போத்தல்களும் ,24 கரட் தங்கத்தில் செய்யப்பட்ட தங்கச் சங்கிலிகளையும் மதுரை விமான நிலையச் சுங்க அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

மதுரை விமான நிலையத்திற்கு கிடைத்த இரகசியத் தகவலைஅடுத்தே இவை மீட்கப்பட்டதாக விமானநி[illegible] அதிகாரிகள் தெரிவித்துள்ள[illegible] குறித்த சந்தேநபர்கள் கட்டுநா[illegible] சர்வதேச விமான நிலைய[illegible] இருந்து மதுரை நோக்கிச் [illegible] மிகின் லங்கா விமானத்தில் இவ்[illegible] கடத்தல் பொருள்களைக் கொ[illegible] வந்ததாகத் தெரிவிக்கப்பட்ட[illegible] மீட்கப்பட்ட தங்கத்தின் பெறு[illegible] லட்சத்து 55 ஆயிரம் இந்திய [illegible] எனவும்,மதுபான போத்தல்[illegible] பெறுமதி 35ஆயிரம் இந்திய [illegible] எனவும் சுங்க அதிகாரிகள் [illegible] வித்துள்ளனர்.

## பிக்கு எம்.பியின் செயலாளர் கைது

கொழும்பு, ஜூன் 29

கொழும்பு கோட்டைப் பகுதியில் இரவு நேரக் களியாட்ட விடுதிக்கு வந்து செல்வோருக்குப் போதை வில்லைகளை விற்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான பிக்கு ஒருவரின் செயலாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோட்டையில் உள்ள இரவு நேரக் களியாட்ட விடுதி ஒன்றுக்கு வந்து செல்வோருக்கு போதை வில்லைகளை விற்பனை செய்த நாடாளுமன்ற உறுப்பினரான பிக்குவின் நாடாளுமன்ற விவகாரச் செயலாளர் ஒருவரும், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் என 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் போதைப் பொருள் தடுப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இவர்களிடம் இருந்த 48 போதை வில்லைகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அவற்றில் ஒன்றில் பெறுமதி சுமார் 3 ஆயிரத்து 500 ரூபா என போதைப்பொருள் தடுப்புப் பணியகம் கூறியுள்ளது.

போதைப்பொருள் தடுப்புப் பணியகத்தின் பொறுப்பதிகாரி சந்தலால் பத்திரண உள்ளிட்ட குழுவினர் இந்தச் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

அத்துரலியே ரத்ன தேரர், எல்லாவள மேதானந்த தேரர் ஆகியோர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரிவில் இருந்து மீண்டு யாழ். லீக் திரில் வெற்றி



யாழ்ப்பாணம், ஜூன் 29
கண்டி லீக் அணியை வீழ்த்தி யாழ். லீக் அணி தென்கொரிய – இலங்கை நட்புறவுக் கிண்ணத்தினை தன தாக்கிக் கொண்டது.

இலங்கை உதைபந்தாட்ட சம் மேளனம் தென்கொரியா – இலங்கை நட்புறவுக் கிண்ணத்துக்காக நடந்திய 19வயதுப்பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் யாழ்.உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து கண்டி உதைபந்தாட்ட லீக் அணி நேற்றுமுன்தினம் யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் மோதிக் கொண்டது. ஆட்டம் ஆரம்பித்து முதல் 25 நிமிடங்கள் வரையில் பந்து அங்கும் இங்குமாக அல்லோலகல்லோலப் பட்டதுதான் மிச்சம்– கோலெதுவும் பதியப்பட வில்லை. 26ஆவது நிமிடத்தில் கண்டி அணியின்வீரன்இசாறசிகான் தனது வாய்ப்பினை கச்சித மாகப் பயன்படுத்தி கோலாக மாற்ற கண்டியின் ஆதிக்கம் ஆரம்பமானது. பழிதீர்ப்பதுக்காக யாழ். அணியினர் படாதபாடு பட்டபோதிலும் எதுவும் பயனளிக்காத நிலையில் 1:0 என்ற கண்டியின் ஆதிக்கத்துடன் ஆட்டத்தின் முதல் பாதி முடிவுக்கு வந்தது.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் யாழின் ஆதிக்கம் மேலோங்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் கண்டி லீக் அணியின் வீரன் அசங்க பண்டார தனது அணிக்கான 2ஆவது கோலினை பதிவு செய்ய கண்டியின் பக்கம் வெற்றிக்காற்று பலமாக வீசத் தொடங்கியது. ஆன போதிலும் போராட்டத்தைக் கைவிட வில்லை யாழ். லீக். போராட்டத்தின் பயனாக 16ஆவது நிமிடத்தில் யாழின் முதல் கோல் பதிவானது. தற்பொழுது எதுவும் நடக்கலாம் என்ற நிலைமை. 27ஆவது நிமிடத்தில் யாழ். லீக்கின் சுபோதரன் யாழின் இரண்டாவது கோலை விளாச ஆட்டம் சமநிலையானது டன் மைதானத்தில் போராட்டங்களும் விறுவிறுப்புக்களும் இரட்டிப்பு வேகத்தில் அமுலாகியது. ஆட்டம் நிறைவடைய பத்தே நிமிடங்கள் இருக்கையில் யாழின் மூன்றாவது கோலும், இரண்டு நிமிடங்கள் இருக்கையில் யாழின் நான்காவது கோலும் பதியப்பட தோல்வி என்ற நிலைமையில் இருந்து இலகுவாக மீண்டு சம்பியனானது யாழ். லீக்.

இறுதியாட்டத்துக்கு பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் குருகுலராஜாவும் சிறப்பு விருந்தினராக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் அனுர டி சில்வாவும், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளர் பாலேந்திராவும் கலந்து கொண்டனர். (ம-23)

## கொக்குவில் இந்து, வேம்படி மகளிர் இறுதியில் பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 29
யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலாருக்குமான கூடைப் பந்தாட்டத் தொடரின் 17வயதுப் பிரிவு பெண்களுக்கான அரையிறுதியாட்டங்களில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியும் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணியும் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளன.

*கொக்குவில் இந்துக்கல்லூரி எதிர் உடுவில் மகளிர் கல்லூரி*

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியின் கூடைப் பந்தாட்ட திடலில் இடம்பெற்ற இறுதியாட்டங்களில் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 36:35 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது.

*வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை எதிர் இராமநாதன் மகளிர் கல்லூரி*

இரண்டாவது அரையிறுதி யாட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணியை எதிர்த்து இராமநாதன் மகளிர் கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 39 புள்ளிகளைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக மேலதிகமாக 5நிமிடங்கள் வழங்கப்பட்டன. இதில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணி 46:45 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம-23)

## மாவட்டங்களுக்கு இடையிலான ஹொக்கித் தொடர் யாழ். மாவட்ட அணிகள் அசத்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 29
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாவட்டங்களுக்கு இடையிலான இருபாலருக்குமான ஹொக்கித் தொடரின் இறுதியாட்டத்தில் இரு பிரிவிலும்யாழ்.மாவட்ட அணிவெற்றி பெற்று மாகாணச் சம்பியன் ஆனது.

*ஆண்கள் பிரிவின் இறுதியாட்டம்*

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டங்களில் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதிக் கொண்டது. ஆட்டத்தின் முடிவுவரை எந்த அணியாலும் முதல்கோல் பதியப்படாத நிலையில் ஆட்டம் சமநிலையானது. இதனால் வெற்றிதோல்வி காண்பதற்காக வழங்கப்பட்ட சம நிலைத் தவிர்ப்பு உதைகளில் யாழ். மாவட்ட அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மாகாண சம்பியன் ஆனது.

*பெண்களுக்கான இறுதியாட்டம்*

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதிக் கொண்டது. ஆண்களின் இறுதியாட்டத்தினைப் போலவே பெண்களின் இறுதியாட்டமும் கோலெதுவும் பதியப்படாமல் சமநிலையில் முடிவடைந்தது. இதனால் வெற்றி தோல்வி காண்பதற்காக வழங்கப்பட்ட சம நிலைத் தவிர்ப்பு உதைகளில் யாழ். மாவட்ட அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மாகாணச் சம்பியன் ஆனது. (ம-23)

## அலையோசையை ஆட்டங்காணவைத்து கிண்ணம் வென்றது சுப்பர்றாங்



யாழ்ப்பாணம், ஜூன் 29
வித்தியானந்தாக் கல்லூரியின் மறைந்த அதிபர் தங்கராசாவின் முதலாம் ஆண்டு நிறைவை யொட்டி பழைய மாணவர் சங்கத்தால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் உடுப்புக்குளம் அலையோசை அணியை வீழ்த்தி சுப்பர்றாங் அணி சம்பியன் ஆனது.

ஆட்டம் ஆரம்பித்து பதின்ம நிமிடத்திலேயே உடுப்புக்குளம் அலையோசை அணி சார்பாக முதல் கோல் பதியப்பட அலையோசை அணியின் ஆதிக்கம் ஆரம்பமானது. ஆட்டத்தின் முதல்பாதிவரை மேலதிக கோலெதுவும் பதியப்படாத நிலையில் 1:0 என்ற அடிப்படையில் அலையோசையின் ஆதிக்கத்துடன் ஆட்டத்தின் முதல்பாதி முடிவுக்கு வந்தது.

ஆட்டத்தின் இரண்டாம் பாதியில் இரு அணிகளும் கோல் கம்பங்களை மாறிமாறி ஆக்கிரமிப்பதும் தவறவிடுவதுமாக ஆட்டம் சென்று கொண்டிருந்தது. ஆட்டத்தில் 18 ஆவது நிமிடத்தில் அலையோசையின் முறைதவறிய ஆட்டத்தினால் சுப்பர்றாங் அணிக்கு கோல் பெறும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றது. கோல் கச்சிதமாக பதியப்பட ஆட்டம் 1:1 என்று சமநிலையானது. ஆட்டத்தின் முடிவுவரை இதே நிலைமை நீடிக்க ஆட்டத்தின் முடிவு சமநிலைத் தவிர்ப்பு உதைகளிடம் தஞ்சமானது. சமநிலைத் தவிர்ப்புக்களும் இழுபறியாக நீடிக்க ஒருவாறு படாத பாடுபட்டு சுப்பர்றாங் அணி 8:6 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

சிறந்த வீரனாக உடுப்புக்குளம் அலையோசை அணி வீரன் டிநேசனும் சிறந்த கோல் காப்பளராக சுப்பர்றாங் அணியின் கோல் காப்பாளர் உதயேஸ்கரனும் தெரிவாகினர். (ம-23-102)

## தொண்டமானாறு உதைந்தாட்டம் ஆதிசக்தி, உடற்கல்வி ஐக்கியம் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 29
தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 9பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

*ஆதிசக்தி எதிர் இமையாணன் மத்தி*

இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகம் மோதியது. இந்த ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

*வல்வை எதிர் உடற்கல்வி ஐக்கியம்*

இரண்டாவதாக நடைபெற்ற ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ். உடற்கல்வி ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதியது. இந்த ஆட்டத்தில் யாழ். உடற்கல்வி ஐக்கிய விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது. (ம)

## இறுதியில் விநாயகர்

யாழ்ப்பாணம், ஜூன் 29
யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கிடையில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு அறிவொளி அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் அணி மோதிக்கொண்டது. இதில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் அணி 9:5 என்ற புள்ளிகளின் அடிப்படை [illegible] திற்கு தகுதி பெற்றுள்ளது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலகுவான இலக்கை நோக்கி

## இலங்கை இன்று துடுப்பெடுத்தாடுகிறது



இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நான்காம் நாள் முடிவான நேற்று பாகிஸ்தான் இரண்டாவது இன்னிங்ஸிற்காக சகல இலக்குகளையும் இழந்து 329 ஓட்டங்களைக் குவித்துள்ளது. இதனால் இலங்கைக்கு வெற்றியிலக்காக 153 ஓட்டங்கள் நிர்ணயமாகியுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணித்தலைவர் மிஷ்பா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸிங்ஸிற்காக 138 ஓட்டங்களில் சுருண்டது.

139 ஓட்டங்களைப் பெற்றால் முன்னிலை பெற்றுவிடலாம் என்ற முனைப்பில் களமிறங்கிய இலங்கையணி முதல் இன்னிங் ஸிற்காக சகல இலக்குகளையும் இழந்து 315 ஓட்டங்களைக் குவித்து 176 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 177 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி நேற்றுமுன்தினம் மூன்றாம் நாள் முடிவில் 171–2 என்ற நிலையில் இருந்தது. அஷார் அலி 64 ஓட்டங்களுடனும் யுனிஸ்கான் 23 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக தொடர்ந்து களமிறங்கினர். அஷார் அலி சதத்தை நெருங்கினாலும் யுனிஸ்கானை ஆட்டமிழக்கச் செய்வதிலேயே இலங்கை வீரர்கள் குறியாய் இருந்தனர். முயற்சிக்கு கிடைத்த பலனாக 40 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார் யுனிஸ்கான். மறுமுனையில் சதத்தை நெருங்கிக் கொண்டிருந்தார் அஷார் அலி. மிஷ்பாவும் ஷபிக்கும் சுமாரான பங்களிப்பை வழங்கி பாகிஸ்தானை பலப்படுத்த கடினமான இலக்கை நிர்ணயிக்கும் நிலையில் பாகிஸ்தான். ஆனால் சதத்தைக் கடந்து அஷார் அலி ஆட்டமிழந்ததுதான் தாமதம் சீட்டுக்கட்டைப்போல் பாகிஸ்தானின் பின்வரிசை பதின்ம ஓட்டங்களில் பறிபோனது. பின்வரிசையின் ஒரு வீரரேனும் பத்து ஓட்டங்களைப் பெறவில்லை. முடிவில் பாகிஸ்தான் இரண்டாவது இன்னிங்ஸிற்காக சகல இலக்குக்ளையும் இழந்து 329 ஓட்டங்களைக் குவித்தது. பாகிஸ்தானின் இரண்டாவது இன்னிங்ஸ் பலமாக அமைந்த போதிலும் முதல் இன்னிங்ஸ் சொதப்பலாக அமைந்த காரணத்தினால் இலங்கைக்கு வெற்றியிலக்காக 153 ஓட்டங்கள் மட்டுமே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆட்டத்தின் ஐந்தாவதும் இறுதி நாளானதுமான இன்று 90 பந்துப்பரிமாற்றங்களில் (540 பந்துகளில்) 153 ஓட்டங்களை நோக்கி இலங்கை துடுப்பெடுத்தாடவுள்ளது. (ம)



## எட்டாக் கனியான இறுதிக்கனவு

ஏகான் ரென்னிஸ் தொடரின் மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதியாட்டத்தில் சானியா இணை தோல்வியடைந்து வெளியேறியது. விம்பிள்டன் ரென்னிஸ் தொடருக்கு முன்னோட்டமாக கருதப்படும் பெண்களுக்கான ஏகான் சர்வதேச ரென்னிஸ் தொடர் லண்டனில் உள்ள ஈஸ்ட்போர்ன் நகரில் நடைபெற்று வருகிறது. இந்தத்தொடரில் நடைபெற்ற பெண்கள் இரட்டையர் பிரிவு முதல் அரையிறுதியில் இந்தியாவின் சானியா சுவிட்சர்லாந்தின் ஹிங்கிஸ் இணை, கரோலின் கார்சியா (பிரான்ஸ்) – காதரினா ஸ்ரீபோட்னிக் (சுலோவேனியா) இணையை சந்தித்தது. சர்வதேச தரவரிசையில் முதல் இடத்தில் இருக்கும் சானியா இணை 5–7, 4–6 என்ற நேர் செற்களில் தோல்வியடைந்து வெளியேறியது. இந்த ஆட்டம் வெறுமனே ஒரு மணித்தியாலம் 15 நிமிடங்கள் வரையிலேயே நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## அரையிறுதியில் ஆர்ஜென்ரினா



தென் அமெரிக்க நாடுகள் பங்கேற்கும் 44 வது தென் அமெரிக்க உதைபந்தாட்டத் தொடர் சிலியில் நடைபெற்று வருகிறது. இதன் காலிறுதி ஆட்டமொன்றில் ஆர்ஜென்ரினா அணி திரில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதிபெற்றுள்ளது.

குறித்த காலிறுதி ஆட்டத்தில் ஆர்ஜென்ரினா – கொலம்பியா அணிகள் மோதின. இரண்டு பாதிகளிலும் கோலெதுவும் பதியப்படாத நிலையில் ஆட்டத்தில் முடிவு சமநிலைத் தவிர்ப்பு உதைகளிடத்தில் முடிவாகியது. சமநிலைத் தவிர்ப்பில் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதி சுற்றுக்கு முன்னேறியது ஆர்ஜென்ரினா.

# டோனி கோஹ்லி

## எப்பொழுதும் நண்பர்களே–ஷமி

பங்களாதேஷிற்கு எதிரான ஒரு நாள் தொடரை இந்திய அணி முதல் முறையாக இழந்ததால் டோனிக்கு நெருக்கடி ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து தலைமைப் பதவியில் இருந்து விலகத் தயார் என்று அவர் வெளிப்படையாக தெரிவித்தார். வீரர்களிடையே இருக்கும் மோதல் காரணமாகத்தான் டோனி இந்த முடிவை அறிவித்ததாக சொல்லப்பட்டு வந்தது. இந்த நிலையில் டோனிக்கும், கோஹ்லிக்கும் இடையே மோதல் எதுவும் இல்லை என்று வேகப்பந்து வீரர் முகமது ஷமி தெரிவித்துள்ளார்.

இந்திய அணிக்குள் பிளவு என்று வெளியான கருத்து தொடர்பாக ஷமி தெரிவித்ததாவது இந்திய அணி சிறப்பாக விளையாடாததை வைத்து அணியில் பிளவு இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இதில் எந்தவித உண்மையும் இல்லை. வீரர்களுக்கான அறையில் டோனியும், கோஹ்லியும் இயல்பான நிலையில் உள்ளனர். இருவருக்கும் இடையே எந்த பிளவும் இல்லை. ஊடகங்கள்தான் இப்படி தவறான தகவல்களை வெளியிடுகின்றன. இந்திய அணியில் மோதல் இருப்பதாக ஆதாரமற்ற செய்திகளை வெளியிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் வீரர்களிடையே பாதிப்பு ஏற்படும் என்றார். (ம)



## தென்னாபிரிக்காவை விட இந்தியா பலவீனமானதாம்

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை 2–1 என்று கைப் பற்றியதையடுத்து இந்தியாவை விட தென்னாபிரிக்கா அணியே சிறந்த அணியாக தெரிகிறது என்று பங்களாதேஷின் தலைவர் மோர்ரசா தெரிவித்துள்ளார்.

இந்தியா தென்னாபிரிக்க அணிகள் தொடர்பாக மோர்ரசா தெரிவித்ததாவது இந்திய அணி துடுப்பாட்டத்தில் வலுவானது ஆனால் பந்து வீச்சில் வலுவானது அல்ல, அதனால்தான் தொடருக்கு முன்பே இந்திய அணியை வீழ்த்தக்கூடிய வாய்ப்பு உள்ளது என்று வீரர்களிடத்தில் தெரிவித்தேன். ஆனால் தென்னாபிரிக்கா அவ்வாறல்ல. அந்த அணி சகல துறைகளிலும் பலமானது. போராட்ட குணம் கொண்டது. என்றார். இத்தனைக்கும், ஐ.சி.சி.யின் ஒருநாள் ஆட்டங்களுக்கான தரவரிசையில் இந்திய அணி 2ஆம் இடத்திலும், தென்னாபிரிக்கா 4ஆம் இடத்திலும் உள்ளது. (ம)


## இந்தியா சிம்பாப்வே தொடருக்கான இந்திய அணி இன்று தெரிவு



இந்தியா சிம்பாப்வே அணிகளுக்கிடையில் அடுத்த மாதம் நடைபெற திட்டமிடப்பட்ட தொடர் திட்டமிடப்பட்டபடி உறுதியாக நடைபெறும் என்று இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அறிவித்துள்ளது. குறித்த தொடருக்கான இந்திய வீரர்களின் தெரிவு இன்று நடைபெறவுள்ளது.

இந்திய அணி அடுத்த மாதம் 10ஆம் திகதி சிம்பாப்வே சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 2 ரி–20 ஆட்டங்களில் விளையாட அட்டவணை தயாரிக்கப்பட்டிருந்தது. ஒளிபரப்பு விவகாரம் தொடர்பாகவும், இந்திய வீரர்கள் ஓய்வில்லாமல் விளையாடி வருவதாலும் இத்தொடர் கைவிட வாய்ப்புள்ளதாக சில நாட்களுக்கு முன் தகவல்கள் வெளியாகின. இந்நிலையில், திட்டமிட்டபடி சிம்பாப்வே தொடர் நடக்கும் என்று இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை நேற்று உறுதி செய்துள்ளது. இந்தத்தொடருக்கான இந்திய அணியை தெரிவு செய்ய இந்தியக் கிரிக்கெட்டின் தெரிவுக்குழு இன்று கூடுகிறது. பெரும்பாலும் டோனிக்கும், ஹோக்லிக்கும் ஓய்வு கொடுக்கப்படலாம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆட்டம் இன்று ஆரம்பம் மீண்டு எழுவாரா நடால்?

ரென்னிஸ் உலகமே ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும் விம்பிள்டன் ரென்னிஸ் இன்று தொடங்கி அடுத்த மாதம் 12ஆம் திகதி வரை நடைபெற இருக்கிறது. இந்தத்தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவிற்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. தற்போது முதல்தர வீரராக இருக்கும் சேர்பியாவின் ஜோகோவிக் தொடக்க ஆட்டத்தில் ஜெர்மனியின் பிலிப் கோல்ஸ் கிரெய்பெரை எதிர்கொள்கின்ற அதேநேரம் 2ஆவது சுற்றில் முன்னாள் சம்பியன் லெய்டான் ஹெவிட்டை எதிர்கொள்கிறார். இந்த இருவரையும் கடந்து வர ஜோகோவிக் கடும் சவாலை சந்திக்க வேண்டியிருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

ரோஜர் பெடரர் முதல் சுற்றில் போஸ்னியாவின் தமிர் ஜும்கரை எதிர்கொள்கிறார். இங்கிலாந்து வீரர் ஆண்டி முர்ரே கஜகஸ்தானின் மிகைல் குகுஸ்கினை எதிர்கொள்கிறார். சமீப ஆட்டங்களில் சொதப்பிவரும் முன்னணி வீரர் ரபேல் நடால், பிரேசிலைச் சேர்ந்த தோமஸ் பெலுசியை எதிர் கொள்கிறார். (ம)

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
IELTS
• Latest training materials. (BOOK 10)
• Skills development in all four categories.
• Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
IELTS Life Skills
திருமணம் செய்து நிரந்தர விசாவில் UK செல்பவர்களுக்கானது, 2015 புதிய நடைமுறைக்கு அமைவாக இலகுவான முறையில் UK அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பரீட்சை
British Council'S IELTS Registration Centre
Spoken English (Veta Fluency Diploma)
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
யாழ்ப்பாணம் 021 222 4403 Hot Line :0777173517
நெல்லியடி 021 226 2470 | சாவகச்சேரி 021 227 0775 | சுன்னாகம் 021 224 1970 | கிளிநொச்சி 021 228 5655

# சங்கா ஓய்வு

இலங்கை அணியின் முன்னணி நட்சத்திர வீரராகத் திகழும் குமார் சங்கக்கார இந்தியாவிற்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துடன் சர்வதேச ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.



இலங்கை – பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாள் ஆட்டத்தின் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், தனது ஓய்வு முடிவை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.

டெஸ்ட் ஆட்டங்களில் அதிக ஓட்டங்களைக் குவித்த வீரர்கள் பட்டியலில் இலங்கை ரீதியாக முதலாவது இடத்திலும் சர்வதேச ரீதியாக ஐந்தாவது இடத்திலும் உள்ள சங்கா இன்னுமொரு இரட்டைச் சதத்தினை விளாசும் பட்சத்தில் டெஸ்ட் ஆட்டங்களில் அதிக இரட்டைச் சதங்களை விளாசிய பிராட்மனின் சாதனையை முறியடிக்கலாம். இதனால் இலங்கை வெல்ல வேண்டும் என்ற எண்ணத்துக்கும் அப்பால் சங்கா நன்றாக விளையாட வேண்டும் என்று அவரது ரசிகர்கள் எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கின்றனர். மட்டுமல்லாது சங்காவை சிறந்த முறையில் வழியனுப்புவதுக்காக இலங்கைக் கிரிக்கெட் பல ஏற்பாடுகளைச் செய்துவருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)

தென்னிந்திய யாத்திரை
பாடசாலை விடுமுறையை அனுசரித்து நடைபெறும் யாத்திரை
தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, பாண்டிச்சேரி, கர்நாடகா ஊடான யாத்திரை
நாள்கள் 16 யாத்திரிகர் 10 ஆரம்பம் 10.08.2015
மலைக்கோட்டை விநாயகர், பஞ்சபூதத்தலங்கள், ஆறுபடை வீடுகள், இராமேஸ்வரம், திருப்பதி, 9 நவக்கிரக ஆலயங்கள், மேல்மருவத்தூர், பொற்கோவில், மதுரைமீனாட்சி, குருவாயூர், மைசூர், சாமுண்டேஸ்வரி, திருக்கடையூர், கன்னியாகுமாரி, ஸ்ரீரெங்கம், பிரம்மாகோவில் உட்பட 65இற்கும் அதிக ஆலயங்களை தரிசிக்கலாம்.
பெற்றுக்கொள்ளும் பணத்திற்கான எமது சேவைகள்
(இருவழி விமான ரிக்கட், மூன்றுவேளை உணவு, குடிதண்ணீர், தரமான தங்குமிடம், A/C வாகன வசதி எயார் போட் போக வர வாகன வசதி, 60 புகைப்படங்கள் மற்றும் ஆலய தரிசனக் கட்டணங்கள் உட்பட) மேல் விவரங்களை கேட்டறிந்து பதிவு செய்யவும். விவரங்களுக்கு:-
கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
077 768 0102, 077 736 2154
(c 16249)

மாணவர்களுக்கான கற்கைநெறிகள் யாவும் First Week of July 2015 ஆரம்பம்.
Craft Certificate Courses
தமிழ்மொழி மூலம்-6 மாதங்கள் -முழுநேரம்
* Electrical Wiring - மின் இணைப்பும் நிர்மாணமும்
* Refrigeration & Air-Conditioning Mechanic குளிரூட்டுதல் பயிற்சிநெறி
* Machineshop Practice லேத் வெல்டிங் பிற்றிங் பயிற்சிநெறி
* Radio,TV & Electronic Servicing Technology- இலத்திரனியல் சாதனங்கள் திருத்துதல்
* Aluminium Fitting & Fabrication அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும்
* Motor cycle and Light engine Mechanism - மோட்டார் வாகனம் திருத்துதல்
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக் குழுவில் பதிவு செய்யப்பட்டது.
பதிவு இலக்கம் P25/0014
Hostel, Library & Sports Facilities available
(c 16385)
For more Information:
Director,
Jaffna College Institute of Technology Vaddukoddai
Jaffna, Sri Lanka. Tel: 021 225 0975/021 321 3139

பொருளியல் கருத்தரங்கு
A/L 2015
* மாதிரி வினாக்கள் (அலகு ரீதியாக)
* விடையளித்தல் முறை
* புள்ளித் திட்டமுறை
ஆசிரியர்:- S. ஜெயக்குமார் (B.A. (Hons), Eco Spl, MA in Eco, PGDE)
ஆரம்பம்:- 01.07.2015
புதன் - 9.00 a.m
DCM- யாழ்நகர்
வெளி மாணவர்களும் கலந்து கொள்ள முடியும்
தொடர்பு:-
0777 238597, 077 9565245

## மரண அறிவித்தல்



### திருமதி வள்ளியம்மை ஐயாத்துரைக்குருக்கள்

கரம்பைக்குறிச்சி மேற்கு, குருக்கள் குடியிருப்பு, வரணியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை ஐயாத்துரைக் குருக்கள் நேற்று முன்தினம் (27.06.2015) சனிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையாக் குருக்கள் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையாக்குருக்கள் - இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஐயாத்துரைக்குருக்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் இராமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பராசக்தி, விக்கினேஸ்வரி, விக்கினேஸ்வரன் (பிரான்ஸ்), விக்னகுமாரி (அமெரிக்கா), விக்னராணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், செல்வராசாக்குருக்கள், ஜெகநாதன், வளர்மதி (பிரான்ஸ்), சர்வேஸ்வரன் (அமெரிக்கா), ரவி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், சுனிற்றா - சிவானந்தன் (சிவலிங்கம் மோட்டோர்ஸ்), கீற்றாபிரியதர்சினி - வசந்தன் (HNB கொழும்பு), மதன் சுசீந்திரநாத் - பிரியா (பிரான்ஸ்), அபிராமி (உள் நாட்டு இறைவரித் திணைக்களம், யாழ்ப்பாணம்), ஸ்ரீகரன் (நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம்), அச்சுதன் (லண்டன்), அர்ச்சகா, அர்ச் சகன் (அமெரிக்கா), ஆர்த்தி (பிரான்ஸ்), அர்ச்சயா (மாணவி, யா/சாவகச்சேரி இந் துக் கல்லூரி), அஸ்வின் (பிரான்ஸ்), அபிரா (அமெரிக்கா), ஆதுசன் (லண்டன்), ஆகாஷ் (பிரான்ஸ்), அபிசன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும், சிவானுஜன், சிவருஜன், கிரிஜன், சுபானுஜன், சகானியா ஆகி யோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2015) செவ்வாய்க் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வரணி ஊத்தல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரம்பைக்குறிச்சி மேற்கு,
குருக்கள் குடியிருப்பு, வரணி

தகவல்:
குடும்பத்தினர்
021 2050816

## மரண அறிவித்தல்

மலர்வு 09 . 08 . 1978



உதிர்வு 22 . 06 . 2015

### கந்தசாமி பிரசாந்தன்

சித்தன்கேணியை பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பிரசாந்தன் (22.06.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் விஜயதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன் - வாலாம்பிகை தம்பதியரின் அன்புப் பேரனும், றொபின், சந்திரா (பிரான்ஸ்), காலஞ்சென்ற செல்வநாதன் மற்றும் சறோஜா, ராஜேஸ், வனஜா (ஜேர்மனி) ஆகியோரின் பெறாமகனும், மீரா, றொசாந்தி, டிலானி, கிறிஸ்ரி (பிரான்ஸ்), வேதிகா (U.K), நவநீதன், சங்கீதா, கீர்த்தனா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், டினேஷ் (பிரான்ஸ்), ஜெயானந்தன் (U.K) ஆகியோரின் மைத் துனரும், ஜெரேமேயா (பிரான்ஸ்), விஷ்ணு, விஷ்வா, லஷ்மி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (29.06.2015) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் எஸ். இன்பம் அந்திய காலசேவை, நிலையத்தில் (மானிப்பாய் வீதி, கோம்பயன்மயானம் அருகில் நடைபெற்று, பின்னர் அவரின் இல்லத்தில் (சாந்திநிலையம் சித்தன்கேணி) மு.ப. 11 - 12.30 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப. 2.00 மணியளவில் பூதவுடல் நல்லடக்கத்திற்காக தாவடி பொதுமயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சாந்தி நிலையம்"
சித்தன்கேணி.

தகவல்:
டினேஷ் -077 521 9889,
கிறிஸ்ரி - 077 551 7811

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org